# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 03 கார்த்திகை 13ஆம் நாள் வியாழக்கிழமை 29 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM




**வடமாகாண மர நடுகை மாதம்**

*கார்த்திகை - 2018*

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்"

– வியூசி லார்கோம்–
(அமெரிக்கக் கவிஞர்)

## நாடாளுமன்றில் இன்று மிக முக்கிய விவாதம்

*மகிந்த அணி பங்கேற்பது சந்தேகம்*

கொழும்பு, நவ. 29
தலைமை அமைச்சர் மகிந்தவின் அலுவலகத்துக்கு நிதி வழங்குவதை தடுக்கக் கோரும் தீர்மானம் மீதான விவாதம் நாடாளுமன்றில் இன்று எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.
சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் >> 25

## ஊடகவியலாளரைத் தாக்கிய ரவீந்திரவின் பாதுகாப்பு அதிகாரி



கொழும்பு, நவ. 29
கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில், விசாரணைக்காக முன்னிலை யான, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி யான அட்மிரல் ரவீந்திர விஜேகுண ரத் >> 25

## எலிக் காய்ச்சலால் மாணவன் இறப்பு



யாழ்ப்பாணம், நவ. 29
எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவன் ஒருவன் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.
தெல்லிப்பளை கொல்லங்கலட்டியை சேர்ந்த சிவசுதன் தவக்குமரன்(வயது- 17) காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பளை வைத் >> 22

## பறிக்கப்பட்டது ரம்புக்வெலவின் பேச்சாளர் பதவி

கொழும்பு, நவ. 29
அமைச்சரவைப் இணைப் பேச்சாளர் பதவியில் இருந்து, ஹெகலிய ரம்புக்வெல நேற்றுத் தொடக்கம் நீக்கப்பட்டுள்ளார்.
அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் மகிந்த சமரசிங்க கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.
இடைக்கால அரசின் இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்க >> 22

# அட்மிரல் ரவீந்திர நேற்று திடீர் கைது

கொழும்பு, நவம்பர் 29
பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி வரை, விளக்க மறியலில் வைக்க கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
கொழும்பில் தமிழ் மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் பிரதான சந்தேகநபரான நேவி சம்பத்துக்கு அடைக்கலம் >> 25



## பொலிஸ் பாதுகாப்பு கேட்டு அடம்பிடிக்கும் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், நவ. 29
பதவி போன பின்னரும் தனக்குப் பொலிஸ் பாதுகாப்புத் தரப்படவேண்டும் என்று அடம் பிடித்து வருகிறார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
அரச தலைவர் மைத்திரிபாலவைக் கொல்லச் சதி செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருப்பவரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவினால் தனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தனக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று கேட்டு அரச தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளார் விக் >> 22

## மைத்திரியின் சவாலுக்கு தாக்கலாகின வழக்குகள்

கொழும்பு, நவ. 29
தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி, மகிந்த ராஜபக்சவை நியமித்தமைக்கு எதிராக எந்தவொரு வழக்குகளும் தாக்கல் செய்யப்படவில்லை >> 25

## மகிந்தவைப் பதவி விலகுமாறு 15 பேர் சு.க. குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 29
நாடாளுமன்றத்தில பெரும்பான்மை இல்லாத நிலையில் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு மகிந்த ராஜபக்சவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த குழு ஒன்ற நெருக்குதல் கொடுக்கத் தொடங்கியுள்ளது.
மகிந்த ராஜபக்சவை நேற்று காலை சந்தித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த கோரிக்கையை விடுத்தனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளி >> 22

## இடைக்கால கணக்கறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதி


*அமைச்சரவை வழங்கியது*

கொழும்பு, நவ. 29
2019ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான இடைக்கால கணக்கறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. >> 25

### பொலிஸாரின் அச்சுறுத்தலையும் மீறி

## மாவீரர்நாளை ஒழுங்கமைத்தவரின் வீட்டின் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 29
பருத்தித்துறை சுப்பர்மடத்தில் மாவீரர் நாளை ஒழுங்கமைத்து, பொலிஸாரின் அச்சுறுத்தலையும் கணக்கிலெடுக்காமல் அஞ்சலி நிகழ்வை நடத்திய ஒருவரின் வீடு நேற்று அதிகாலை 2 மணிக்கு தாக்கப்பட்டுள்ளது.
புலோலி மத்தி, நாவலடியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்ற இனம்தெரியாத நபர்கள், வீட்டுக் >> 21



## அரச தலைவரின் அதிகாரங்களை கோரி கடிதம் எழுதியவர் ரணில் விக்கிரமசிங்க

*பழைய விடயங்களை தூசு தட்டுகிறது சு.க.*

கொழும்பு, நவ. 29
தன்னை தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்பதுடன், தனக்கு சகல அதிகாரங்களை வழங்க வேண்டும் எனவும், இதனை அரசிதழ் அறிவித்தலின் மூலமாக அறிவிக்க வேண்டும் எனவும் 2015ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் முடிவடைந்ததும் அன்றிரவு ரணில் விக்கிரமசிங்க மைத்திரிபால்வுக்கு கடிதம் அனுப்பி >> 25

## தடைகளைத் தகர்த்தெறிந்து நினைவுகூர்ந்த தாயக மக்கள்

*மனநிறைவு அளிக்கின்றது என்கிறார் சம்பந்தன்*

கொழும்பு, நவ. 29
மிரட்டல்கள், நெருக்குதல்கள், அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் தடைகளைத் தகர்த்தெறிந்து மாவீரர்களை வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தாயக மக்கள் பகிரங்கமாக துயிலும் இல்லங்களில் நினைவுகூர்ந்துள்ளார்கள். >> 25

## ரூபாவின் பெறுமதி மேலும் சரிவு

யாழ்ப்பாணம், நவ. 29
டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள மானிய உருளைக்கிழங்கின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது.
'விதை உருளைக்கிழங்கு கொள்வனவுக்காக 38 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 265 மெற்றிக் தொன் விதை உருளைக் >> 22

### தவணைக் கட்டணத்தை அறவிடச் சென்றுவிட்டு

## மிரட்டி நகையைப் பறித்தெடுத்த லீசிங் வசூலாளிகளுக்குச் சிறை

யாழ்ப்பாணம், நவ. 29
லீசிங் தவணைக் கொடுப்பனவை வசூலிக்கச் சென்ற சமயம் பெண்ணின் தங்க நகைகளை அறுத்த நிதி நிறுவனப் பணியாளர்கள் இருவர் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
இவர்கள் மீது சுமத்தப்பட்ட வீடு புகுந்து பெண்களை அச்சுறுத்தியமை மற்றும் சங்கிலி அறுத்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.
"நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், தவணைப் பணத்தை வசூலிப்பதற்கு ஒழுங்கு விதிகள் உள்ளன. அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த >> 25

## இலங்கை வந்த ஐ.நா. அதிகாரி கூட்டமைப்புடன் அவசர பேச்சு

கொழும்பு, நவ. 29
நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாக ஆராய இலங்கை வந்துள்ள ஐ.நா. பொதுச் செயலரின் நேரடிப் பிரதிநிதியான, ஐ.நா. அரசியல் விவகார திணைக்களத்தின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பணிப் >> 25

# அரசியல்கட்சிகள் அரசமைப்புக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும்

## பொதுநலவாய அமைப்பு வலியுறுத்தல்


கொழும்பு, நவ. 29

நாட்டின்சட்டவாக்கம், நீதிப்பொறிமுறைஎன்பவற்றில்நியாத்துவத்தைஉறுதிப்படுத்துதல் அரசின் கடமையாகும் என்பதுடன், அனைத்து அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற சட்டதிட்டங்கள் மற்றும் அரசமைப்புக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும் என்று பொதுநலவாய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பொதுநலவாய சட்டத்தரணிகள் குழுமம், பொதுநலவாய சட்டக்கல்விசார் குழுமம்மற்றும்பொதுநலவாயநாடாளுமன்றக்குழுமம்ஆகியனஇலங்கையில் தொடர்ச்சியாக நிலவி வருகின்ற அரசியல்சிக்கல்நிலைதொடர்பில்அவதானம் செலுத்தி வருகின்றன. இந்த நிலையில் மூன்று அமைப்புக்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் நிலைகுறித்துமுக்கியகவனம்செலுத்துவதுடன் அனைத்துக் கட்சிகளும் அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற சட்டதிட்டங்கள், நீதித்துறை என்பவற்றுக்கு



அமைவாக, அவற்றுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும். ஜனநாயகம்வலுவாகப் பேணப்படுகின்ற கலாசாரத்தினை முன்னிறுத்துதல், அதனைக் கடைப்பிடித்தல் மற்றும் சட்டவாக்கம், நீதிப்பொறிமுறைஆகியவற்றில்நியாயத்துவத்தை உறுதிசெய்தல் என்பன ஓர் நாட்டினது அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பொறுப்பாகும். அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களின் போது ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பில் குறிப்பிட்டுள்ள பொதுநலவாய உபகுழுக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்துக்கு முரணான தலையீடுகளில் இருந்து விலகி அரசமைப்புக்கு அமைவான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கடமைப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

(5.61)

# மைத்திரி – மகிந்த கூட்டை ஹிட்லருடன் ஒப்பிட்ட ரணில்



கொழும்பு, நவ. 29

சர்வாதிகாரி ஹிட்லர் தலைமையில் ஜேர்மன் வான்படைபிரிட்டன்நாடாளுமன்றத்தைக்குண்டுத்தாக்குதல் நடத்தி தகர்த்ததைப் போன்று மைத்திரி - மகிந்த கூட்டணி கடந்த மாதம் 26ஆம்திகதிநாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு குண்டுத்தாக்குதல் நடத்தி தகர்க்க பார்த்தனர். ஆனால், மக்கள் எழுச்சியுடன் சபாநாயகர் தலைமையில் அந்த அரசியல் சூழ்ச்சியை தோற்கடித்துள்ளோம் என்று ரணில் விக்கிரமசிங்கதெரிவித்தார். களுத்துறைப் பிரதேசத்தில் ஐக்கியதேசியக்கட்சிநேற்று நடத்திய மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தலைமைஅமைச்சரைநியமிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. 1947ஆம் ஆண்டு முதல் பிரிட்டன்சம்பிரதாயமுறைப்படிநாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ளவரே தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டு வந்துள்ளார். 2001ஆம் ஆண்டு நாம் தேர்தலில் வெற்றி பெற்ற போது, தமக்கு விருப்பம் இல்லாத போதும் ஆட்சியமைக்க உங்களை அழைக்க் நேர்கிறது. நாடாளுமன்ற பெரும்பான்மை உங்களிடம்தான் உள்ளது என்று முன்னாள் அரச தலைவர்சந்திரிகாபண்டாரநாயக்க கூறியிருந்தார்.

19ஆவது திருத்தச்சட்டத்தில் தலைமை அமைச்சரை நாடாளுமன்ற பெரும்பான்மையின் அடிப்படையில் நியமிப்பதை உறுதிப்படுத்தினோம். அதன் பிரகாரம் நாடாளுமன்ற பெரும்பான்மை உள்ளவரே தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பெரும்பான்மையின் பிரகாரம் தலைமை அமைச்சரும், அமைச்சரவையும் நியமிக்கப்பட்டது. என்றாலும், 19ஆவது திருத்தச்சட்டத்துக்கு முன்னர் அமைச்சரவையையும், தலைமை அமைச்சரையும்நியமித்தது அரச தலைவர்தான்: 19ஆவதுதிருத்தச்சட்டத்தின் பின்னர் தலைமை அமைச்சர்மற்றும்அமைச்சரவையுடன் இணைந்து அரசதலைவர் ஆட்சியை கொண்டு செல்ல வேண்டும்.

நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சர் அல்லது அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்றால், அதற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியும். ஒட்டுமொத்த நாட்டு மக்களின் பிரதிநிதிகளும் நாடாளுமன்றில் உள்ளதாலேயே அவ்வாறான திருத்தத்தை 19இல் கொண்டுவந்தோம். நாடாளுமன்ற பலத்தைப் பெற்றுதான் இவ்வளவுக் காலம் நாம் செயற்பட்டோம்.

நான் தலைமை அமைச்சராக செயற்பட்டுக்கொண்டிருந்த போது கடந்த 26ஆம் திகதி அரச தலைவர் திருட்டு வழியில் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமிக்க எடுத்த முற்சியை தோற்கடித்தோம். அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை நாடாளுமன்றப் பதிவேட்டிலும்பதிவாகியுள்ளது. அவை தவறானதுஎன்றால், சபாநாயகருக்குஎதிராகநம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும். இன்றுவரை அவ்வாறு எவ்வித நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவரப்படவில்லை. சூழ்ச்சிக்காரர்களைதோற்கடித்துநாடாளுமன்ற ஜனநாயகத்தையும், மக்களையும் சபாநாயகர் பாதுகாத்துள்ளார்- என்றார்.

(5.10)

# 122இலிருந்து 129 ஆக அதிகரிக்கும்

*ஐ.தே.க. நம்பிக்கை*

கொழும்பு, நவ. 29

ஐக்கிய தேசியக் கட்சிக்கான நாடாளுமன்றப் பெரும்பான்மை ஆதரவு நாளை (இன்று) 122 இலிருந்து 129 ஆக அதிகரிக்கும்என்றுஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் ஐக்கிய தேசிய கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இடைக்கால கணக்கறிக்கைக்கு ஆதரவு வழங்க மாட்டோம். அதனைத் தோற்கடிப்போம். எங்களது நாடாளுமன்றப் பெரும்பான்மை ஆதரவு இன்று 122இலிருந்து 129ஆக அதிகரிக்கும்.

சட்டத்துக்குப் புறம்பாக செயற்பட்டு வரும் தலைமை அமைச்சரின் வீண் செலவுகளை கட்டுப்படுத்தும் வகையிலான சட்டவரைவு மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறும். மகிந்த தரப்பினர் நாடாளுமன்றவிவாதத்தில்கலந்துகொள்வதோடு, போலி அரசின் இடைகால வரவு செலவு திட்டத்தின் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்ட வேண்டும் - என்றார். (5)

# போராட்டம் வழிதவறிப் போகாதவாறு காப்பரணாக மாவீரர்கள் இருப்பார்கள்

## நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

தமிழ்மக்கள் ஒவ்வொருவரினதும் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியவாறு மாவீரர்கள்எம்மைவழிநடாத்துவார்கள். தமிழ்மக்களின்போராட்டம் வழிதவறிப் போகாதவாறு எமக்கான காப்பரணாக மாவீரர்கள் இருப்பார்கள். மாவீரர்களுக்கு நாம் செய்யும் வணக்கம் இவர்களது கனவுகளை நனவாக்க உழைப்பதாகத்தான்இருக்க முடியும் என்ற உணர்வுடனும் உறுதியுடனும் செயற்படுவோம். இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்தார்.

மாவீரர் நாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழத் தாயகத்தின் மூச்சுக்காற்றெங்கும் நிறைந்திருக்கும் எம் விடுதலை நாயகர்களின்பெருநாள். தமிழீழ மக்களின் விடுதலைக்காய் வீரச்செருக்கோடு களமாடி மண்ணில் விதையாய் வீழ்ந்த எம் வீர மறவர்களை எம்மக்கள்தமது இதயக்கோவிலில் இருத்திப் பூசிக்கும் நன்னாள். தமிழீழ தேசத்தின் தேசிய எழுச்சியையும், சுதந்திரவேட்கையினையும் உலகறியச் செய்து தமிழர் தேசத்தின் மனச்சாட்சியாய் ஆழ வேரோடியிருக்கும் புனிதநாயகர்களின்நினைவு நாள்.

மாவீரர்களது ஈகத்தால் எம் மண் சிவந்திருக்கிறது. அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்க ஈழத்தாய்தன் வயிற்றிலிருந்து கிளர்த்தெழுந்து எம் மண்ணுக்காய் உயிர் ஈந்தவர்களின் அக்கினிமூச்சினால்எமது தாயகம்தகித்துக் கொண்டிருக்கிறது.

இறைமையும் சுதந்திரமும் கொண்டதமிழீழத்தனியரசு ஒன்றே தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும் என்பதில்பற்றுறுதிகொண்டு எமதுமாவீரர்கள்களமாடினர். தமிழீழமக்கள்சுதந்திரமாக, மதிப்பாக, பாதுகாப்பாக, சிங்களத்தின் இன அழிப்புக்கு உள்ளாகாதுவாழ்வதற்கான வாய்ப்பைத்தமிழீழத்தனியரசினை அமைப்பதன் மூலமே அடையலாம் என்ற தொலைநோக்குடன்மாவீரர்கள் களமாடினர்.

சாதிகள் அகற்றப்பட்ட, ஆண் பெண் சமத்துவம் நிறுவப்பட்ட, சமூக ஏற்றத்தாழ்வுகள் விலக்கப்பட்ட, இயற்கைச்சூழற் பாதுகாப்பில் அக்கறை கொண்ட, சமூக நீதி நிலவுகின்ற சமூகமொன்றைப்படைக்கும் உன்னத இலட்சியத்துடன் மாவீரர்கள் களமாடினர்.

அரசியல் யதார்த்தத்தை நன்கு ஆராய்ந்து பார்ப்பின் தமிழீழ மக்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் தான் உள்ளன என்பது தெளிவாகும்.

உரிமைகளுக்காக விட்டுக்கொடுப்பின்றிப் போராடி, எமக்கான சுதந்திர தாயகத்தை அமைத்து வாழ்தல் ஒரு தெரிவு. இத் தெரிவில் வெற்றியடைவதற்கான நடைமுறைச் சாத்தியம் குறைவு என்று ஐயம் கொள்வோர் பலருண்டு.

மற்றைய தெரிவு சிங்கள இனவாதத்துக்குப் பயந்தோ அல்லது பணிந்தோ எமது அடிப்படைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக இழந்து, இறுதியில் சிங்களப் பெருந் தேசியத்துக்குள் காலப்போக்கில் கரைந்து போவது.

முதலாவது தெரிவில் நாம் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஒடுக்குமுறையை எதிர்த்துநிற்கும் எதிர்ப்புஉணர்வினைதணியாமல் காத்து எமது போராட்டத்தைச்செவ்வனேபேணிக் கொள்ளும்வரைநாம்தோல்வியடைந்தவர்களாகப் போய்விட மாட்டோம். சரியானதொருசந்தர்ப்பத்தில்வெற்றிக்கான வாய்ப்பும் போராட்டத்தைத் தளராது தொடரும் போது மட்டுமே கிடைக்கும்.

இரண்டாவது தெரிவு தமிழ் மக்களுக்கு மிகவும் அவமானகரமான தோல்வியையே தேடித் தரும். எம்மால் எதுவும் முடியாது என்று சரணாகதியடையும் நிலைக்கு இட்டுச் செல்லும். சிங்கள மேலாதிக்கத்தை இயல்பாக ஏற்றுக் கொண்டு அடிபணிந்து வாழும் இழிநிலைக்கு எம்மைஇட்டுச்செல்லும். இந் நிலைஏற்படின்தமிழ்மக்கள் இலங்கைத்தீவில் நிரந்தரமாகத் தோல்வியடைந்த மக்களாக மாறிவிடுவார்கள்.

இந்த இழிநிலை தமிழ் மக்களுக்கு ஏற்படாது காக்கும் காவல்தெய்வங்களாகஎமது மாவீரர்கள் இருப்பார்கள் என்பது எமக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருக்கிறது என்றுள்ளது. (5)

# ஆவா குழு உறுப்பினருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ.29

பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் நேற்று மல்லாகம் நீதிவான் மன்றில் சரணடைந்தார். அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். சந்தேகநபர் ஆவா குழுவைச் சேர்ந்த உறுப்பினர் என்று குற்றஞ்சாட்டுகின்றனர் பொலிஸார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த மோகன் அசோக் என்ற இளைஞரே விளக்கமறியலில் வைக்கப்பட்டார். யாழில் இடம்பெற்ற பல வன்முறைச் சம்பவங்களுடன் இவர் தொடர்புடையவர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

(உ-8,26,106,37)




*யாழ்ப்பாணத்தில்*

## சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து பல இடங்களில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 29

சபாநாயகர் கரு ஜயசூரியவை ஆதரித்தும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தும் யாழ். குடாநாட்டின் பலபகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன

'நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலைமையில் சபாநாயகரின் செயற்பாடுகள் தமக்கும் நாட்டிற்கும் பெருமை' எனும் தலைப்பிடப்பட்ட சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டிகளில் நாடாளு மன்றசம்பிரதாயங்கள், அதிகாரங்கள் மற்றும் மக்களின் அபிலாசைகளுக்கமைய நாட்டின் ஜனநாயகத்தை நிலை நிறுத்த அச்சமின்றிவீரத்துடன் கடமையாற்றியுள்ள சபாநாயகருக்கு நாட்டு மக்களின் ஆசீர்வாதங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

---

பாடசாலைகள் நாளையுடன் மூடல்

## இலவச பாடப் புத்தகங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை

பாடசாலையின் மூன்றாம் தவணை விடுமுறை நாளையதினம் விடப்படவுள்ள நிலையில் அடுத்த கல்வியாண்டுக்கான பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு இதுவரை விநியோகிக்கப்படவில்லை என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கல்வியமைச்சின் மேலதிக செயலர் எம். எம். ரத்நாயக்கவிடம் வினவியபோது, நூற்றுக்கு 80 வீதமான பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அரச அச்சக கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்பட்ட பாடப்புத்தகங்களை மீள வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், அவை கிடைத்தவுடன் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

(ஐ)

---

## பொருத்தமில்லாத போட்டித் தன்மை ஊடாக சிறார்களின் மனங்கள் மாற்றமடைகின்றன

### உயர் கல்வி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, நவ.29

பொருத்தமில்லாத போட்டி தன்மைகளின் ஊடாக தற்போது பெருமளவிலான சிறார்களின் மனம் மாற்றம் அடைவதுடன் தற்போதைய நாட்டின் குற்றங்கள், வன்முறை போக்கான செயல்களுக்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. இவ்வாறு கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகள் மத்தியில் 'சிறந்த வருடாந்த கணக்கு அறிக்கை' தெரிவு போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது நாட்டின் கல்வி முறைமையின் ஊடாக திறமையானவர்களை உருவாக்கினாலும் புத்திசாலிகள் உருவாக்கப்படுவது கிடையாது. வாய்ப்பாடம் மூலம் மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றவர்களாக முன்செல்வது மாத்திரம் போதாது. சிறார்களின் மனம் விருத்தி அடைவதற்கான பக்க பலத்தை எமது கல்வியின் ஊடாக வழங்க வேண்டும். அண்மைக் காலமாக நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பெரும் மோசமான செயற்பாடுகளின் ஊடாக மாணவர்களின் மனப்பாங்கை விருத்தி செய்வதற்கும் உணர்ச்சி வசப்படுவதனை கட்டுபடுத்துவதன் இயலாமையையே எடுத்து காட்டுகின்றது. கல்வி தரத்தை விருத்தி செய்வதன் ஊடாக இந்த நிலைமையை மாற்றி அமைக்க முடியும்- என்றார்.

நிகழ்வில் கல்வி மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலக்க, கல்வி பணிப்பாளர்(வணிக) டப்ளியு.என்.எம். ஜே புஷ்பகுமார, ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

*அடுத்த ஆண்டில்*

# 5,800 மில். அமெ. டொலர் கடனாக செலுத்த வேண்டும்

*அரசின் திட்டம் என்ன? வரவு –செலவுத் திட்டம் எங்கே? ஜே.வி.பி. கேள்விக் கணை*

கொழும்பு,நவ. 29

அடுத்த ஆண்டில் மாத்திரம் 5,800 மில்லியன் அமெரிக்க டொலர் பன்னாட்டுக் கடன் செலுத்தவேண்டியுள்ளது. 2019- 2020 ஆம்ஆண்டுகள் தான் இலங்கையை நெருக்கும் மிகவும் முக்கியமான ஆண்டுகளாகும். இதனைக் கையாள அரசு என்ன திட்டம் வைத்துள்ளது? அடுத்த ஆண்டுக்கான பாதீடு எங்கே ? என்று மக்கள் விடுதலை முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசு ஒன்று இல்லாத நிலைமையில் நாட்டின் பொருளாதாரம் பெரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. நவம்பர் மாதம் என்பது இலங்கையின் சுற்றுலாத்துறை பலமடையும் மாதமாகும். ஆனால் இன்று நாட்டின் சுற்றுலாத்துறை பெரியளவுவீழ்ச்சி கண்டுள்ளது. அதுமட்டுமல்ல வழமையாக நவம்பர் மாதம் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கப்படவேண்டும். ஆனால் இன்று வரை பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை. அந்தளவு மோசமான நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியில் இருக்கும் போது பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது, நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளனர். நாம் வந்தால் ஒரு நாளில் சரிசெய்வோம் என்று மகிந்த தரப்பினர் கூறினார்கள். ஆனால் இப்போது அவர்களே செய்வதறியாதுதடுமாறி வருகின்றனர். இன்று இலங்கையின் ரூபா பெரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

ராஜபக்ச -மைத்திரி கூட்டணிக்கு அதிகாரம் மட்டுமே தேவைப்படுகின்றது. மாறாக அவர்களுக்கு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை. ஊடகங்களில் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தெரியாத நிலைமையே உள்ளது.

இன்று ஊடகங்களும் வாய் மூடிக் கொண்டு அரசியல் சூழ்ச்சியில் விழுந்துவிட்டது. மீண்டும் ஊடக அடக்குமுறை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. சிங்கபூர் உடன்படிக்கை வேண்டாம் என கூறியவர்கள் இன்று சிங்கபூர் உடன்படிக்கையைநியாயபடுத்தி வருகின்றனர். இவர்களின் நோக்கம் என்னவென்பது இன்று தெளிவாக தெரிந்துவிட்டது. ஐக்கிய தேசியக்கட்சி என்ன உடன்படிக்கை செய்ததோ அதையே தொடர்ந்தும் கொண்டுசெல்லவே மகிந்த தரப்பும் முயற்சித்து வருகின்றது. மகிந்த ஆட்சியில் எவ்வாறு விபச்சாரம், போதைப்பொருள் கலாசாரத்தை கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்களோ அதையே மீண்டும் அவர்கள் செய்ய முயற்சித்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கத்தில் ஒரு வீதம் கூடகுறையாது அதே கொள்கையை ராஜபக்ச அரசும் முன்னெடுத்து வருகின்றது.

வெளிநாட்டு முதலீடுகள் இன்று எம்மை விட்டு விலகி செல்கின்றது. பிணை முறிகள் கைவிட்டு செல்கின்றன. இந்த நிலைமையில் 2020 ஆம் ஆண்டில் நாம் செலுத்த வேண்டிய கடன் மேலும் அதிகரிக்கும். தனது அடுத்த கட்ட அதிகாரநாற்காலியை தக்கவைக்க அரச தலைவரே நாட்டை நாசமாக்கிவிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டுக்காக மாத்திரம் 5 ஆயிரத்து 800 மில்லியன்அமெரிக்க டொலர் கடன் செலுத்தவேண்டியுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டுகள் தான் இலங்கையை நெருக்கும் மிகவும்முக்கியமான ஆண்டுகளாகும். நாம் வாங்கியுள்ள கடன்களை மீண்டும் செலுத்த வேண்டிய காலகட்டம் இதுவே. இதனை கையாள அரசான இவர்களிடம் ஏதும் திட்டம் உள்ளதா என தெரியவில்லை.

தமது சுயநல நிலைப்பாட்டை செயற்படுத்த நாட்டை வருகின்றனர். இன்று சீனாவிடம் மேலும் கடன்கேட்கின்றனர். சீனாவிடம் கடன் வாங்கி சீனாவுக்கே செலுத்தும் கொள்கை எமது நாட்டில் மட்டும்தான் உள்ளது. அதுவும் மைத்திரிபால சிறிசேனவிடமே உள்ளது. இனிமேல் ராஜபக்ச ஆட்சியோ மைத்திரி ஆட்சியோ ரணில் ஆட்சியோநாட்டை மீட்டெடுக்கப் போவதில்லை. அந்த நிலைப்பாட்டில் இனியும் மக்கள் இருந்தால் நாடு மீண்டும் வீழ்ச்சி காணும். இன்றுபெரும்பாலான மக்கள் இந்த ஆட்சியை வெறுத்துவிட்டனர்.

அரசியலில் நிர்வாணமாகி விட்டனர். இனிமேல் மைத்திரிக்கு ஒருஅரசியல் வாழ்க்கை இல்லை. மகிந்த ராஜபக்சவுக்கு மக்களின் செல்வாக்கு இருந்தது. அதனை அவராகவே நாசமாக்கி விட்டார். ரணிலையோ ஐக்கிய தேசியக் கட்சியையோ இனியும் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை- என்றார்.

(31)

---




## பொதுத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி மகிந்த அணியினர் கிளிநொச்சியில் பேரணி

கிளிநொச்சி, நவ. 29

பொதுத்தேர்தலை நடத்துமாறு வலுயுறுத்தி மகிந்த ஆதரவு அணியினர் கிளிநொச்சியில் நேற்றும் பேரணி நடத்தினர்.

கிளிநொச்சி காக்கா கடை சந்தியிலிருந்து காலை 10.30 மணிக்கு அரம்பித்த பேரணி டிப்போச் சந்தியைச் சென்றடைந்தது.

"பொதுத் தேர்தலை நடத்து, சபாநாயகரே பதவி விலகு, வேண்டும் வேண்டும் மகிந்த வேண்டும், ரணிலே வெளியேறு போன்ற கோசங்களை எழுப்பினர்.

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் தர்மபால செனவிரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இப் பேரணில் கலந்துகொண்டனனர்.

(214)

---

## பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவியுயர்வு

கொழும்பு, நவ. 29

முதன்மைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 65 பேருக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில், உதவி பொலிஸ் அதிகாரிகளாக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் இந்தப் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 48 பேர் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு வழங்கிய ஒத்துழைப்பை கருத்திற் கொண்டு உதவிப் பொலிஸ் அதிகாரிகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு உதவிப் பொலிஸ் அதிகாரிகளுக்கான நேர்காணலில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் மேலும் 17 பேர் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# பல்டி அடித்த வடிவேல் சுரேஸுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலாம்

கொழும்பு, நவ. 29

சட்டவிரோத அரசிலிருந்து வெளியேறிய பின்னர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவிவகாரம் தொடர்பில் போராட்டங்களை நடத்திவரும் நிலையில், என் மீது பெற்றோல் குண்டு வீசி கொலைசெய்ய சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சபாநாயகருக்கு பாராட்டுத் தெரிவித்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பதுளை மாவட்டத்தில் வாழும் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதியான எனக்கு உரிய பாதுகாப்பு இல்லை. சபையில் மிளகாய்த் தூள் தாக்குதல் நடத்தப்படுகின்றது. பதுளையில் கூட்டத்துக்கு சென்றால் அங்கு பெற்றோல் குண்டு



தாக்குதல் நடத்த சூழ்ச்சி செய்யப்படுகின்றது. நாட்டில் மீண்டும் இனவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றனர். பொலிஸில் முறைப்பாடு செய்தும் உரிய நடவடிக்கை இல்லை. முறைப்பாட்டைக் கணக்கில்எடுக்காத அதிகாரிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. எனக்காக வீதியில் இறங்கிப்போராட மக்கள் தயாராகவே இருக்கின்றனர். எனக்கு உரிய பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென சபாநாயகரிடம் கோருகின்றேன் - என்றார். (ஐ-10)

## மகிந்த அரசுடன் நெருக்கமடையும் உறவு

*சிறைத்தூதுவருடன் அமுனுகம சந்திப்பு*

கொழும்பு, நவ. 29

இலங்கைக்கான சீனத்தூதுவர் சென் ஷியுவான், இலங்கை அயலுறவு அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்திச்சு பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள இலங்கை அயலுறவுத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சீனத் தூதரக அதிகாரிகள் குழுவொன்றும், இலங்கை அயலுறவுத்துறைச் செயலர் ரவிநாத் ஆரியசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றுள்ளனர்.

இலங்கையில் தற்போது சர்ச்சைக்குரிய அரசு, பதவியேற்ற பின்னர், சீனத் தூதுவர், இலங்கை அரசின் உயர்மட்டங்களுடன் இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவது இது இரண்டாவது முறையாகும். (ஐ)

## சம்பள முரண்பாடு சீர்செய்வதற்கான ஆணைக்குழுவின் அறிக்கை கையளிப்பு

கொழும்பு, நவ. 29

அரசசேவையின் சம்பள முரண்பாட்டைச் சீர்செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுக் கையளிக்கப்பட்டது. அரச தலைவர் செயலகத்தில் வைத்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அறிக்கையை கையளித்ததாக ஆணைக்குழுவின் தலைவர் எஸ். ரனுன்கே தெரிவித்துள்ளார். அரச சேவையில் காணப்படுகின்ற சம்பளப் பிரச்சினையை தீர்ப்பதற்காக கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

தொடருந்து, தபால், சுகாதாரம் போன்ற அரச துறைகளின் சம்பளக் கட்டமைப்பில் காணப்படுகின்ற முரண்பாடுகளை தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைக்கவென்றே இந்தக் குழு நியமிக்கப்பட்டது. (ஐ)

### ஐ.தே.கவின் வாயை அடைப்பதற்கு பிணைமுறி அறிக்கையை வெளியிடத் திட்டம்!

கொழும்பு, நவ. 29

மத்தியவங்கியின் பிணைமுறி விவகாரத்துடன் தொடர்புடையவர்களின் பெயர்ப் பட்டியலை எதிர்வரும் வாரங்களில் வெளியிடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிணைமுறி விவகாரத்துடன் தொடர்புடையவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியே வரும்போது யார் யார் இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று தெரிந்துக்கொள்ள முடியும். தற்போது போராட்டங்களை முன்னெடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் குறித்த விடயம் வெளியிடப்பட்டவுடன் இந்தப் போராட்டங்களை நிறுத்திவிடுவர் - என்றார். (ஐ)

## பரீட்சை அனுமதி அட்டைகளை விரைவில் வழங்க அறிவிப்பு

கொழும்பு, நவ. 29

பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஜி.சி.ஈ சாதாரணதர பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை விரைவில் மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு அனைத்து அதிபர்களுக்கும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகளை இதுவரை மாணவர்களுக்கு விநியோகிக்காத பாடசாலை அதிபர்கள் தொடர்பில் மாத்தளை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித்த தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள பரீட்சை அனுமதி அட்டைகள் தொடர்பில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் தீர்வு வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இம்முறை ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை, 4ஆயிரத்து 661 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளது. (ஐ)

## மைத்திரியின் ஆட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்

*கூறுகின்றார் கருணாரத்ன எம்.பி*

கொழும்பு, நவ.29

நாடாளுமன்ற பெரும்பான்மைக்கு செவிகொடுத்து மைத்திரியின் ஆட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிடின் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் எமதுநாடு பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கருணாரத்ன பரணவித்தான தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பொன்று அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த மாதம் 26 ஆம் திகதி எமது நாட்டில் அரங்கேறிய அரசியல் சூழ்ச்சியின் காரணமாக நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலை ஏற்பட்டதுடன், பொருளாதாரமும் பாதாளத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

மைத்திரியின் நாடகத்தை உடனடியாக நிறுத்தாவிடின் நாட்டை மீண்டும் நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுப்பது சவாலுக்குரிய விடயமாக மாறிவிடும்.

அரசமைப்பின் பிரகாரம் தலைமை அமைச்சரை நியமிப்பதில் அரச தலைவரின் நிலைப்பாடு அவசியம் என்பது உண்மைதான். ஆனால், சிந்தனை என்பதற்கும் நிலைப்பாடு என்பதற்கும் வேறுப்பாடு உள்ளது. அரச தலைவரின் தனிப்பட்ட சிந்தனையின் பிரகாரம் ஒருவரை தலைமை அமைச்சராக நியமிக்க முடியாது. நாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ளவரையே அவர் தலைமை அமைச்சராக நியமிக்க முடியும். அதுதான் ஜனநாயக ஆட்சியும்கூட.

நாடாளுமன்ற பெரும்பான்மைக்கு செவிசாய்ந்து மகிந்த ராஜபக்ச உடனடியாக தமது பதவியில் இருந்து விலக வேண்டும். அரசமைப்புக்கும், ஜனநாயகத்திற்கும் அரச தலைவர் மதிப்பளித்தால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் - என்றார். (ஐ-10)

# மகிந்தவின் தனிமைப்படுத்தப்பட்ட கொள்கையால் பன்னாட்டு அரங்கில் இலங்கைக்கு இருண்ட யுகம்

*ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை*

கொழும்பு, நவ. 29

மகிந்த ராஜபக்சவின் தனிமைப் படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளால் பன்னாட்டு அரங்கில் மீண்டும் இலங்கைக்கு இருண்ட யுகமொன்று ஏற்படும் என்பதே நிதர்சனம். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

மகிந்தவின் பொருளாதார கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தனிநபர் ஒருவரின் கடன் சுமை மேலும் 30ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், கடந்த அரசின் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மகிந்த ராஜபக்ச அரசுக்கும், அவரது அமைச்சரவைக்கும் எதிராக நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்ற பதிவேட்டிலும் பதிவாகிவிட்டது. நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுவதுதான் உயரிய சட்டம். தற்போது அரசும், தலைமை அமைச்சரும் சட்டப்பூர்வமாக இல்லை.

சட்டவிரோத தலைமைஅமைச்சர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொருளாதார நிலைமைகள் தொடர்பிலும், அவரது பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பிலும் விளக்கமளித்தார். இவர்களின் தனிமைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஒரே வருடத்தில் வெனிசுவிலா, மியன்மாருக்கு என்ன நடந்ததோ அதே நிலைதான் எமக்கும் ஏற்படும். யதார்த்தங்களை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். போலியான தேசபற்றுடன், கடந்த காலத்தில் பொய்யான தகவல்களை மக்கள் மத்தியில் இவர்கள் பரப்பிவந்தனர்.

பன்னாட்டுச் சமூகத்தினருடனான உறவு அவசியமில்லை என்கின்றனர். உலகுடன் தொடர்பில்லாது எந்தவொரு நாடும் தனியான பொருளாதாரக் கொள்கைகளுடன் பயணிக்க முடியாது. வெனிசுவிலா உலகில் அதிகமான எண்ணை வளத்தை கொண்ட நாடாக இருந்தது.

ஆனால், அவர்களின் தனிமைப் படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளால் இன்று பாரதூரமான பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளனர். மகிந்த ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு ஓராண்டு பயணித்தால் இலங்கைக்கும் அதே நிலைதான் ஏற்படும்.

மூன்று மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணிப்புரிகின்றனர். அவர்கள் அனைவரும் மகிந்தவின் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டால் பொலனறுவையில் சென்று விவசாயம்தான் செய்ய வேண்டும். ஆடை ஏற்றுமதி, மீன் ஏற்றுமதி, சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு உட்பட பல்வேறு துறைகள் மூலமே எமது அந்நிய வருவாய் ஈட்டப்படுகிறது. உள்நாட்டில் வெளிநாடுகள் மேற்கொள்ளும் நேரடி முதலீகள் 6வீதமாக உள்ளது. இவர்களின் முட்டாள் தனமான தனிமைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் கனிய எண்ணையைக்கூட இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படும். ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கைகளால் 600 பில்லியன் இழப்பு ஏற்படும் என்பதுடன், தனிநபர் கடன்சுமை 30ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கும் - என்றார். (ஐ-10)

சட்டரீதியற்ற அரசின்

## உத்தரவுகளைப் பின்பற்றினால் பதில் கூறவேண்டிவரும்

*அரச பணியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார் ரஞ்சித்*

கொழும்பு, நவ. 29
அரசமைப்புக்கு முரணான சட்டரீதியற்ற அரசு பிறப்பிக்கும் உத்தரவுகளை அரச பணியாளர்கள் நடைமுறைப்படுத்தினால் அதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார எச்சரிக்கை விடுத்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கருத்துகளை முன்வைத்திருந்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சட்டவிரோதமாக ஆட்சிபுரியும் அரசினால் அனுப்பப்படும் கட்டளைகள், அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்த வேண்டாமென அரச அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேன். அரச அதிகாரிகள் தவறான கட்டளைகளின் பிரகாரம் செயற்படக் கூடாது. அவ்வாறு யாராவது செயற்படுவீர்களேயானால் அதற்குப் பின்னர் பதில் சொல்ல வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்படும். இதேவேளை, நாமல் குமார தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் அடங்கிய 143 குரல் பதிவுகள் ஒன்றில்கூட அரச தலைவரைக் கொலை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், தற்போது அரச தலைவர் தன்னைக் கொலை செய்ய முயற்சித்தாக கூறியுள்ளார். இது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்'- என்றார். (ஐ-10)

# சபை அமர்வைவிட பிரபாகரனின் பிறந்தநாள் முக்கியமாகியுள்ளது

*அரச ஊடகங்களை சாடுகிறார் ஹிருணிகா*



**கொழும்பு, நவ. 29**
**"நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளை ஒளிபரப்புச் செய்யாமல் யாழ்ப்பாணத்தில் பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டதை அரச ஊடகங்கள் ஒளிபரப்புகின்றன. இது தவறான விடயம்'' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"பிரபாகரனின் பிறந்த நாளை, விடுதலைப் புலிகளின் நாளாக யாழ்பாணத்தில் கொண்டாடப்பட்டதாகச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிடப்பட்டது. பின்னர் யாழ்ப்பாணப் பல்கலையில் கொண்டாடப்பட்டதாகக் கூறப் பட்டது. இப்போதுகூட, சபை நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்புச் செய்யாமல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும் சட்டவிரோத அரசின் ஊடகவியலாளர் மாநாட்டை அரச ஊடகங்கள் ஒளிபரப்புகின்றனர். இது தவறான ஒரு முன்னுதாரணமாகும். இப்படியான அடக்குமுறையை மேற்கொள்ளும் மகிந்த தரப்பினரால், நாட்டில் ஒருபோதும் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முடியாது. அந்தத் தரப்பினர் நாடாளுமன்றைத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கிறார்கள். சபாநாயகர் மீது குறைகூறி இன்றும் (நேற்றுமுன்தினம்) அவர்கள் வரவில்லை. உண்மையில் இது மகிழ்ச்சியானது. அதே போல் தொடர்ந்தும் இருந்தால் உண்மையில் சிறப்பாக இருக்கும். இப்போதுதான், நாம் இதுவரை மிருகங்களுடன் இணைந்துதான் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பது தெரிகின்றது" -என்றார். (ஐ)

## அச்சுறுத்தல்களுக்கு அடி பணியாது நேர்மையாகச் செயற்பட்ட சபாநாயகர்

*ஐ.தே.க. உறுப்பினர்கள் புகழாரம் சூட்டினர்*

கொழும்பு, நவ. 29
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகர் மீதான தாக்குதல் முயற்சிகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அவர் வீரத்துடன், துணிச்சலாகவும், நேர்மையாகவும் எதிர்கொண்டதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் கருஜயசூரியவுக்குச் சபையில் புகழாரம் சூட்டினர்.
நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.
ஐக்கிய தேசியக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சபாநாயகரைப் பாராட்டி புகழாரம் சூட்டினர். சுமார் இருமணித்தியாலங்கள் இவ்வாறு எதிர்க்கட்சியினர் தமது பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்தனர். இதன்போது மக்கள் விடுதலை முன்னணியினர் எவ்வித கருத்துகளையும் முன்வைக்கவில்லை. (ஐ-10)

## கொலைப் பட்டியலில் எனது பெயர் உடனடியாகப் பாதுகாப்புத் தேவை

*கோருகின்றார் ரிசாத்*

கொழும்பு, நவ. 29
கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக நாமல் குமார கூறிய கொலைப்பட்டியலில் எனது பெயரும் இருந்தது. ஆனால், எனது பாதுகாப்பு தற்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. இதனைச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கருத்துகளை முன்வைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"அரச தலைவர் மைத்திரிபால மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ஆகியோர் தொடர்பிலான கொலைச் சதி முயற்சிகளை வெளியிட்ட நாமல் குமாரவின் கொலை பட்டியலில் எனது பெயரும் குறிப்பிடப்பட்டி ருந்தது. என்னைக் கிழக்கு மாகாணத்தில் வைத்துப் படுகொலைசெய்வதற்குத் திட்டமிடப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார். ஆனால் என்னைப் பற்றிய விடயம் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது. எனது பாதுகாப்பையும் அரசு முழுமையாக நீக்கிவிட் டது. இதனால் எனக்குப் பெரும் அச்சு றுத்தல் ஏற்பட்டுள்ளது. எந்தவொரு இடத்துக்கும் என்னால் செல்ல முடியவில்லை. இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்"- என்றார்.

## சட்டவிரோத அரசு பயணித்தால் நெருக்கடிகள்

*- மங்கள சமரவீர எச்சரிக்கை*

கொழும்பு, நவ. 29
சட்டவிரோத அரசு தொடர்ந்து பயணித்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பாரதூரமான நெருக்கடிகளையே நாம் எதிர்கொள்ள நேரிடும். நாட்டைக் காட்டிக்கொடுக்காமல் உடனடியாகச் சட்டப்பூர்வமான அரசை அமைக்க அரச தலைவர் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளும்ன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
சபாநாயகருக்குப் பாராட்டுத் தெரிவித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைத்திருந்தனர்.
இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மைத்திரி - மகிந்த சதித்திட்டத்தில் அமைக்கப்பட்ட அரசுக்கு ஒருமாத காலமாகின்றது.
ஒருமாதம் நிறைவடைகின்றபோதும் உலகில் எந்தவொரு நாடும் திருட்டு அரசை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சட்டவிரோத அரசுக்கு டிசெம்பர் மாதத்துக்கும் இதேபோன்று செல்ல இடமளித்தால் இதனைவிட பாரதூரமான நிலையை எதிர்வரும் ஜனவரி மாதம் எதிர்க்கொள்ள நேரிடும்.
அடுத்த வருடத்துக்கான செலவினங்களுக்குத் தேவையான பாதீடு மற்றும் இடைக்கால கணக்கறிக்கையோ இதுவரை முன்வைக்கப்படவில்லை. அதற்குச் சட்டபூர்வ நிதி அமைச்சரும் நாட்டில் இல்லை.
எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நாட்டில் அரச சேவையாளர்களுக்கான சம்பளம் வழங்க முடியாமல் போவதுடன், முழு அரச இயந்திரமும் செயலிழக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.
அரச தலைவர் உடனடியாகச் சட்டப்பூர்வமான அரசை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" -என்றார். (ஐ-10)

## தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் அமைச்சர்கள் என்று எவருமேயில்லை


*ஊடகங்களில் பதவிநிலை வரக்கூடாது என்கிறார் ஹக்கீம்*



கொழும்பு, நவ. 29
நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் தற்போது அமைச்சர்களோ, அமைச்சரவையோ இல்லை. ஆனால், ஊடகங்களில் தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களாகச் சிலரின் பெயர்களைக் கூறி அறிமுகப்படுத்துகின்றனர். இது சட்டவிரோதமானதாகும்.
இவ்வாறு அறிமுகப்படுத்துவதை நிறுத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
நாடாளுமன்ற அமர்வின் போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துகளை முன்வைத்திருந்தனர். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரித்ததாவது:
"மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுத் தற்போது அது நாடாளுமன்ற பதிவேட்டிலும் பதியப்பட்டுள்ளது. கனவு அரசாகவுள்ள குழு தங்களை அமைச்சர்களாகக் கூறிக்கொள்கின்ற னர். ஊடகங்களிலும் இவர்களைத் தலைமை அமைச்சர், அமைச்சர்களாக அறிமுகப்படுத்துகின்றனர். இது எமது சிறப்புரிமையை மீறும் செயற்பாடாகும். இது தொடர்பில் உடனடியாகச் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அவ்வாறு அறிமுக்கப்படுத்துவதை நிறுத்துவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட வேண்டும்"- என்றார். (ஐ-10)

## உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

*அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு*



கொழும்பு, நவ. 29
உயர் நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் இடைக்கால கணக்கு அறிக்கை தலைமை அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடிய போதும் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் அது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பொன்றை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்தியிருந்தனர். இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
தலைமை அமைச்சரால் இடைக்கால கணக்கு அறிக்கை இன்றைய தினம் (நேற்றுமுன்தினம்) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் சபைக்குக் கொண்டுவரப் பட வேண்டுமாயின் கொண்டு வரத் தயார். அப்போது பெரும்பான்மை இருக்கின்றதா? இல்லையா? என்பதைப் பார்க்கலாம்- என்றார். (ஐ-10)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இப்படியே போனால் எங்குபோய் முடியும்?

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன, தனது அதிபுத்திசாலித்தனம்என்றுநினைத்துத்தொடக்கிவைத்த அரசியல் மாற்றம் என்கிற குழப்பம் ஒரு மாதம் கடந்தும் இன்னும்ஒருமுடிவுக்குவரவில்லை. நிலமைஇப்படியே தொடர்ந்தால் அதன் விளைவு எங்கு போய் முடியும் என்கிற பயங்கரக் கேள்வி பயமுறுத்தி நிற்கின்றது.

அரசதலைவரால்பதவிக்குக்கொண்டுவரப்பட்டமகிந்த ராஜபக்சதலைமையிலானஅரசுநாடாளுமன்றத்தில்தனது பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறிவிட்டது. அதே நேரத்தில் ஆட்சியமைப்பதற்குத் தேவையான 113 ஆசனங்களின்ஆதரவைஐக்கிய தேசியக்கட்சியாலும்வெளிப்படுத்தமுடியவில்லை. மகிந்தஅரசுக்குஎதிராகமட்டுமே அதனால்122ஆசனங்கள்என்கிறபெரும்பான்மையைக் காட்டக்கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலமை தோன்றியுள்ளது. அத்தகையதொரு நிலையில் அரச ஊழியர்களின் சம்பளம் உட்பட அரச இயந்திரத்தை இயக்குவதற்கான அத்தியாவசியச்செயற்பாடுகள்அனைத்தும்முடங்கிவிடும் ஆபத்து இருக்கின்றது.

எதிர்காலம் குறித்த இந்தச் சூனிய நிலை தொடர்பில் ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது. அந்தக் கட்சியின் அரசியல் உயர் குழு உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் கந்துன்நெத்தி நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இது பற்றிய கேள்விகளை எழுப்பினார்.

''நாடாளுமன்றத்தில் அதிகாரம் செலுத்தும் கட்சி ஒன்று இல்லாமல் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. எதிர்வரும் மார்கழி மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் அரசு செலவிடுவதற்கு எந்தப் பணமும் இருக்கப் போவதில்லை. அடுத்த ஆண்டு தை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக நாடு செலுத்தவேண்டியிருக்கும் கடன் தொகை மட்டுமே 1 மில்லியன் அமெரிக்க டொலர் உண்டு. அரசஊழியர்களின்சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பவற்றை அடுத்த ஆண்டு தொடங்கியதும் அரசு எப்படிச் செலுத்தப் போகின்றது என்பதை அரச தலைவர் நாட்டு மக்களுக்கு விளக்கவேண்டும்.''

இவ்வாறு சுனில் கந்துன் நெத்தி தெரிவித்திருக்கிறார். ''டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு படு மோசமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. கடன்சுமைமற்றும்இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை என்பன இதனால் இன்னும் அதிகரித்துள்ளன. ரூபாவின் மதிப்பிறக்கம் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. மகிந்த ஆட்சி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகக்கொண்டுவரப்பட்டதொன்றல்லஎன்பது இதன்மூலம் தெரிந்துவிடும்'' என்று மேலும் தெரிவித்திருக்கிறார் கந்துன்நெத்தி.

அவரது அபாய அறிவிப்புநியாயமானதே! பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து நாட்டை வழமை நிலைக்குத் திருப்பவில்லையென்றால் பலலட்சக்கணக்கான அரசஊழியர்களின் நிலை மற்றும் ஓய்வூதியர்களின் நிலை என்ன என்பது பயமுறுத்தும் கேள்வி. அரச சம்பளத்தை மட்டுமே நம்பியிருக்கும் எத்தனையோ குடும்பங்கள் இதனால் நிர்க்கதி நிலையை எதிர்நோக்கவேண்டியிருக்கும். அத்தோடு நாடும் பக்கவாதத்தால் முடங்கிப்போக வேண்டியிருக்கும்.

இத்தகைய நெருக்கடியில் இருந்து தப்பிக்க வேண்டுமானால் தான் உருவாக்கிய அரசியல் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையிலான நகர்வுகளை அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனஉடனடியாகமேற்கொள்ளவேண்டும். ஆனால் அதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை என்பதுதான் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பெருந்துன்பியல்.

# “சட்டவிரோத அரசு பயணித்தால் நெருக்கடிகள் தொடரும்”

“உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் அனைத்துக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே காரணம். அவரால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க முடியும். அரசியல் நெருக்கடியைத் தீர்க்காமல், தொடர்ந்து பலவந்தமாக அரசைக் கொண்டுசெல்ல முற்பட்டால் பன்னாட்டு ரீதியல் கடுமையான பொருளாதாரத் தடைகளை இலங்கை எதிர்கொள்ள நேரிடும்” இப்படியாக எச்சரிக்கை விடுக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல. சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் அலரிமாளிகையில் அவரைச் சந்தித்து நேர்காணல் செய்தபோது அவர் இப்படித் தெரிவித்தார்.

சு.நிசாந்தன்

(நேற்றைய தொடர்ச்சி)

**கேள்வி:** அரச தலைவரின் நாடாளுமன்றக் கலைப்புக் குறித்த அரசிதழ் அறிவிப்புக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. எதிர்வரும் 4,5,6ஆம் திகதிகளில் குறித்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படவுள்ளது. தீர்ப்பில் எவ்வித மாற்றங்கள் ஏற்படுமென நினைக்கின்றீர்களா?

**பதில்:** உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் மாற்றம் ஏற்பட முடியாது. நான்கரை வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாதென 19ஆவது திருத்தச்சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் ஜனநாயகத் தன்மை வாய்ந்த தீர்ப்பை வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**கேள்வி:** உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி இன்று பன்னாட்டு ரீதியில் தாக்கம் செலுத்தியுள்ளது. இவ்வாறு அரசியல் நெருக்கடி தொடரும் பட்சத்தில் அடுத்தாண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் எத்தகைய நெருக்கடிகளை இலங்கை சந்திக்க நேரிடும்?

**பதில்:** ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புநாடுகளில் ஒன்றே இலங்கை. ஐ.நா. அறிவிப்புக்களின் பிரகாரம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு உலகுடன் நாமும் ஒன்றிணைந்துள்ளோம். அரசொன்று ஜனநாயகத்துக்கு விரோதமாக பணிகளை முன்னெடுத்தால் பன்னட்டுச் சமூகத்தின் தடைகளை எதிர்க்கொள்ள நேரிடும். அவ்வாறுதான் ஜனநாயகத்துக்கு விரோதமாக அரசு தொடர்ந்து செயற்பட்டால் ஜெனிவாவிலும் கடுமையான நெருக்கடிகளையும், தடைகளையும் நாம் சந்திக்க நேரிடும்.

**கேள்வி:** 2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக்கு இலங்கை அளித்த வாக்குறுதிகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட அறிக்கையின் நடைமுறைத்தன்மை தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கையை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதே?

**பதில்:** இது குறித்துத் தற்போதைய அரசு தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டும். தொடர்ந்து சட்டவிரோத அரசாகப் பயணித்தால் நெருக்கடிகளில் இருந்து தப்ப முடியாது.

**கேள்வி:** அரச தலைவர், பன்னாட்டு ரீதியில் அழுத்தங்கள் ஏற்படுமெனத் தெரிந்து கொண்டா அல்லது தெரியாமலா செயற்படுகிறார்?

**பதில்:** அரச தலைவருக்குத் தவறான முன்னுதாரணங்கள் அவரை சூழவுள்ளவர்களால் கொடுக்கப்படுகிறன. இதை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

**கேள்வி:** தலைமை அமைச்சரின் அலுவலகத்துக்குச் செல்லும் நிதிகளை இடைநிறுத்தும் வகையில் சட்டமூலமொன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து எதிர்வரும் 29ஆம் திகதி விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் விளக்கமளிக்க முடியுமா?

**பதில்:** தலைமை அமைச்சரின் அலுவலகத்துக்குச் செல்லும் நிதிகளை இடைநிறுத்தும் சட்டமூலத்தை நாங்கள் கொண்டுவரவுள்ளோம். அதன் பின்னர் தலைமை அமைச்சரால் செலவீனங்களைச் செய்ய முடியாது. அவர் நிழல் தலைமை அரமைச்சர் மாத்திரமே. சட்டபூர்வமானவர் அல்ல. குறித்த பிரேரணையைச் சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளார். சபாநாயகர் ஒரு பிரேரணைக்கு அங்கீகாரம் அளித்தால் அது ஒரு சட்டம். அதை எவராலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. அதேபோல்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் சபாநாயகர் அங்கீகரித்துள்ளார். அதனால் அதை அரச தலைவரால்கூடச் சவாலுக்கு



லக்ஸ்மன் கிரியெல்ல



மைத்திரிபால சிறிசேன

உட்படுத்த முடியாது. குறித்த பிரேரணையைச் செல்லுபடியற்றதாக மாற்ற வேண்டுமாயின் மகிந்த தரப்பிலிருந்து பிரேரணையொன்று கொண்டுவரப்பட வேண்டும்.

**கேள்வி:** குறித்த நிதிச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரச தலைவர் வேறு வழிமுறைகளில் நிதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தினால் உங்களின் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்கும்?

**பதில்:** தெரியாது. அரச தலைவருக்கு நாங்கள் கூறுவதாவது, பிரச்சினையை நீங்கள்தான் ஏற்படுத்தினீர்கள். நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லாத ஒருவரைத் தலைமை அமைச்சராக நியமித்துள்ளீர்கள். எனவே, பிரச்சினையை நீங்கள்தான் தீர்க்க வேண்டும்.

- நன்றி -



# 'அடம்பன் கொடியும் திரண்டால்...'



இறந்த ஒருவரின் உடலைத் தகனம் செய்வதற்காக மயானம் நோக்கிக் காவிச் சென்று கொண்டிருந்த போது தெருவோரத்தில் காணப்பட்ட நாக்கிளிப் புழு ஒன்று அந்தச் சாவு ஊர்வலத்தில் சென்ற ஒருவரிடம் இப்படிக் கேட்டிருக்கிறது, "இவர் எப்படி இறந்தார்?" என்று.

"அவர் பாம்பு தீண்டி இறந்தார்" என்று சென்றவர் கூறியுள்ளார். நாக்கிளிப் புழு மகிழ்ச்சியில் இரண்டு தடவைகள் துள்ளிக் குதித்துவிட்டு "எங்கடையாக்கள் கடித்தால் ஒருவரும் தப்ப முடியாது" என்று கூறியிருக்கிறது. ஊர்வலத்தில் சென்றவர் இதுவும் ஏதோ விச ஜந்துபோல என நினைத்து நாக்கிளிப்புழுவைக் காலால் நசித்துக் கொன்றுவிட்டுச் சென்றிருக்கிறார். இதைப்போல்தான் தமிழர்களின் நிலையும். முதலில் தாங்கள் ஒரு சிறுபான்மை இனம் என்பதையும் தமக்கு வெளியார்கள் எவரும் உதவப் போவதில்லை என்பதையும் தமது உரிமைகளைச் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்தே தாம் பெற வேண்டும் என்பதையும் தமிழர்கள் உணர்ந்திருப்பது அவசியம். அவ்வாறில்லாமல் வீர வசனங்கள் பேசித் திரிந்தால், நாக்கிளிப் புழுவுக்கு நடந்த சோகமே தமிழர்களுக்கும் ஏற்படும்.

### தமிழர்களுக்குள் ஒற்றுமை அவசியம்

தமது அயலவர்களுடன் பங்குக் கிணற்றுக்காக, வழி வாய்க்காலுக்காக, காணிக்குள் படர்ந்த மரத்தின் கிளைகளுக்காக, ஏன் ஓர் ஊமல் கொட்டைக்காக (உள்ளே எதுவுமில்லாத பனம் விதை ஓடு) தமிழர்கள் பல வருடங்கள் வழக்காடிய சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் உண்டு. தனது அயலவருடன் அல்லது சொந்தக் காராருடன் பரம்பரையாக வன்மம் பேணி, நிரந்தர எதிரிகளாகத் தமது இனத்தையே ஒதுக்கி வைத்திருக்கம் ஓர் இனம் இன்னோர் மொழி, மதம், இனம் என்றிருக்கும் சிங்களவருடன் இலகுவில் சமரசம் செய்து கொள்ள முடியாதது இயல்பானது.

தமது அயலவருடன் உள்ள முரண்பாட்டைச் சம்பந்தப்பட்ட இரண்டு குடும்பத்தவர்களும் ஏதோ ஒரு வகையில் தமது அடுத்த சந்ததிக்குக் கடத்தியே வருகின்றனர். இதைச் சீர் செய்வதற்கு இன்னும் எத்தனை கோவில்கள் கட்டினாலும் முடியாது. அல்லது இன்றைக்குக் கையில் தவழும் நவீன கைபேசிகளைவிட இன்னும் நவீனமாக எவை வந்தாலும் இந்தக் குடும்பங்கள் இணையப்போவதில்லை. இந்த நிலையைச் சீர் செய்வதற்கு விட்டுக்கொடுப்பு மட்டும் போதுமானது.

### தமிழ்த் தலைவர்களுக்குள்ளும் ஒற்றுமையில்லை

சிங்களவருடன் பொருத நினைக்கும் தமிழ் அரசியல் தலைவர்கள் முதலில் தமக்குள் ஒற்றுமையாக இருந்து எதிரியைப் பயம் கொள்ள வைப்பதே இன்றுள்ள தேவை. அதைவிடுத்து இன்ப்பெருக்கம் குறைந்த ஓர் இனம், இனத்தைப் பெருக்காது, கட்சிகளைப் பெருக்குவது எந்த வகையிலும் தமிழ் இனத்தின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மைக்கு மாறானது.

தமிழினம் எதிர்காலத்தில்தான் நிலைகொள்ள வேண்டும் என்பதை நன்கு திட்டமிட வேண்டும். அதற்கான அறிவியல் பலத்தையும் பொருளாதார பலத்தையும் தேடிக்கொள்ள வேண்டும். சமூகத்தில் ஒற்றுமைக்குத் தடையாகவுள்ள விடயங்களைக் களைய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக எதிரியிடமிருந்து தற்காத்துக்கொள்ள ஒற்றுமைப்படவேண்டும். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என வெறுமனே சொல்லிக் கொள்ளும் தமிழர் எதிரியை அடம்பன் கொடியாக்கி அவர்கள் ஒன்று திரள்வதற்கான வாய்ப்புக்களையும் வழிவகைகளையும் செய்து கொடுப்பதிலேயே அக்கறையாகவுள்ளனர்.

### சிங்களவர்களின் தமிழர்களுடனான அணுகுமுறை

சிங்களவர்கள் வரலாற்றுக் காலம் தொடக்கம் தமது இனத்துக்குத் தமிழர்களால் (தென்னிந்தியப் படையெடுப்புகள்) ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை ஆவணப்படுத்தியுள்ளனர். அதை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு மகாவம்சம் என்ற வரலாற்று நூலும், பௌத்த துறவிகளும், சிங்கள அடிப்படைவாதிகளும் கடுமையாக உழைத்து வருகின்றனர். இந்தக் கடின உழைப்பின் அறுவடையையே 2009 மே மாதத்தில் அவர்கள் பெற்றிருந்தார்கள். தமிழரை இலக்கு வைத்துச் சிங்கள மக்களிடம் மேற்கொள்ளப்படுகின்ற பரப்புரைகள், எந்தவிதமான கேள்விக்கும் இடமின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தன்மையைக் கடந்த காலங்களில் காண முடிந்தது. தற்போதைய தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வழங்குகின்ற அழுத்தங்கள் ஆகக்கூடியது 2020ஆம் ஆண்டு வரை இழுபடலாம். அல்லது பொதுத் தேர்தல் ஒன்றை அறிவித்ததும் இல்லாது போய்விடலாம். சிங்கள மக்களுக்கு மாற்றுத் தலைவர்கள் அதிகம் உள்ளனர். சிங்களவரை எந்தக் கட்சி ஆளுவது என்பதல்ல பிரச்சினை. ஒரு சிங்கள பௌத்தனால் தாம் ஆளப்பட வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனை.

### தமிழரின் ஒற்றுமையின்மையால் சிதறல்கள்

வடக்குக் கிழக்குத் தமிழரின் வாக்கு வங்கி ஒவ்வொரு தேர்தலிலும் சிதறடிக்கப்பட்டு வருகிறது. ஒற்றுமையின்மை காரணமாக இருக்கின்ற வாக்குகளும் சிதறிப்போகின்றன. சிங்களவரிடமிருந்து தனித்து வாழ நினைக்கும் தமிழர்கள் சிங்களவர்களுக்கு நிகராகத் தம்மை வளர்த்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இல்லாதவிடத்து எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தற்போது உள்ளதை விட மேலும் நலிவடைந்த நிலைக்குத் தள்ளப்படவே வாய்ப்புண்டு. பெரும்பான்மைச் சிங்களவர் வெளிப்படையாகப் பேசாது மிகவும் சூட்சுமமாகத் தமிழரை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டே வந்துள்ளனர். இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமே புலிகள் அழிக்கப்பட்டமையாகும். இனிவரும் நாள்களில் தமிழரின் ஜனநாயக அரசியலை அழிப்பதற்கும் அவர்கள் இரகசியமாகத் திட்டமிடுவர் என நிச்சயமாக நம்பலாம். இத்தகைய நுட்பமான முன்னெடுப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் தமிழர்கள் மேற்குறித்த நாக்கிளிப் புழுவைப் போல தம்மை வெளிக்காட்ட முனையும்போது சிங்களவர் தமிழரைத் தமது இனத்துக்கு கருத வாய்ப்புண்டு. அந்த ஒவ்வாதவர்களாகவே ஒவ்வாமை நீக்குவதற்காக நாக்கிளிப் புழுவை நசிக்க முற்பட்டால், அது வெளியே யாருக்கும் தெரிந்து விடப்போவதில்லை.



## ஆசிரியருக்கான கடிதம்

# சிங்கள, ஆங்கிலப் பதிப்புக்களாகவும் உதயன் வெளிவரவேண்டும்

1990களில் 'பங்கர்' வாழ்க்கை நாள்களில் உதயன், சஞ்சீவியின் ஒவ்வொரு பக்கங்களையும் வரிக்கு வரி படித்த ஞாபகங்கள் மறக்க இயலாதவை. ஜனவரி 1ஆம் திகதியன்று உதயன் தரும் நாள்கட்டியைப் பெறுவதற்கு நாம் வரிசையில் நின்று பத்திரிகை வாங்கியதை மறக்க முடியாது. உதயனின் 34ஆவது அகவையில் மேன்மேலும் சிறப்புகளையும் உயர்வுகளையும் காண வாழ்த்துவதோடு தமிழ் மக்களின் எண்ணங்களைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ளவதற்குச் சிங்கள மொழியில் இல்லாது விடினும் ஆங்கிலப் பதிப்பு ஒன்றையாவது, கொழும்பைத் தளமாகக் கொண்டேனும் உதயன் வெளியிட வேண்டும் என்பது எங்களது அவா.

தமிழ் மக்களின் கருத்துக்கள் திரிபடைந்து, மாற்றப்பட்டுச் சிங்கள மக்களைச் சென்றடைவதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், தீர்வுகள் இழுபடுவதற்குக் காரணமாக இருக்கலாம். எனவே சிங்கள மக்களின் மனங்களை உரிய வகையில் தெளிவுபெற வைப்பதற்கு ஆங்கிலப் பதிப்புக் கைகொடுக்கும். வெளிநாட்டுத் தூதுவர்கள், பன்னாட்டுச் சமூகம் எனப் பலருக்கும் இது அவசியமானதாக இருக்கும். (மிகக்க வலையுடன் கூறுவது) நமது புலம் பெயர் உறவுகளின் சில பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது அவர்களுக்கும் கூட நமது செய்திகள் - கருத்துக்கள் ஆங்கிலப் பதிப்பினூடாகச் சென்றடையக் கூடியதாக இருக்கும். எனவே இது தொடர்பில் ஆவண செய்வது சிறந்ததாக இருக்கலாம். நமது சமூகத்தின் பலமான பத்திரிகை என்று உதயனை மாத்திரமே சொல்லிக்கொள்ள முடியும். உதயன் எதிர்கொண்ட சவால்கள், இழப்புகளை, பணி, சேவை என்று கூறுவதைவிடத் தியாகம் என்ற உன்னதமான வரிகளாலேயே கூறிக்கொள்ள வேண்டும். ஒரு புறம் மன உளைச்சல் - சாவுப் பயம் எனப் பலவித அச்ச உயர்வுகளுடன் பணியாற்றியவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். அன்று தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றியவர்களின் உதிரம் சிந்தி - உயிர் சிந்திய தியாகம் இந்த நாளில் நினைவு கூரத்தக்கது. தமிழர் வலி உணர்ந்து உதயன் மேலும் போராடுவான் என்ற ஆறுதல் எமக்கு எப்போதும் இருக்கிறது. உதயன் இயக்குநர், ஆசிரியர், ஆசிரிய பீடத்தினர், மற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்களின் பணிகள் சிறக்கப் பாராட்டுகளும், நன்றிகளும், வாழ்த்துகளும்.

நா.துஷாந் வரணி

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகை யால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# போதைக்குஎதிராகவிழிப்புணர்வு மாணவர்களுக்குநடத்தப்பட்டது



வவுனியா, நவ. 29
மதுசாரம் அருந்தல், புகைத்தல், போதைப்பொருள்பாவனையைத்தடுத்தல்மற்றும் பாதுகாத்தல்பற்றியவிழிப்புணர்வுநிகழ்வுநேற்று இடம்பெற்றது.

இதனூடாக வன்முறையற்றசிறந்தமாணவசமுதாயத்தை உருவாக்குதல் இதன்நோக்காகும்.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் தரம் 12, 10, 9, 8 வகுப்புகளின் மாணவர்களுக்குறக்மாநிறுவனத்தின் அனுசரணையுடன் (கிராம முகாமைத்துவத்திற்கான நிறுவனங்களின் சம்மேளனம்) சமூக சேவைத் திணைக்களத்தாலும்ஒழுங்குபடுத்தலில் விழிப்பு ணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. சுமார் 300 மாணவர்களுக்குஇதன்மூலம்விழிப்பூட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மதுசாரத்துக்கு எதிரான செயற்குழு ஒன்றை அமைத்துத் தமது செயற்பாடுகள் தொடர்பான விடயங்களையும் தாங்கள் எதிர்நோக்கிய சவால்களையும் மாதாந்தம் கலந்துரையாடி பொருத்தமான செயல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அவற்றை மீளாய்வுசெய்யவேண்டும். பாடசாலைமட்டத்தில்மதுசாரம் புகைத்தல் மற்றும் போதைப்பொருள்பாவனையைக் குறைப்பதற்கான வலைப்பின்னல் செயற்பாட்டைஉருவாக்கிநடைமுறைப்படுத்தல் மற்றும் தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

(4,110)

# மன்னார் கால்நடை வளர்ப்பாளர்களை வவுனியாவிலிருந்து வெளியேற உத்தரவு

வவுனியா, நவ. 29

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரியகட்டிலிருந்து மன்னார் மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களை எதிர்வரும் முதலாம் திகதியன்று வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் செட்டிக்குளம் பிரதேசசபையில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தவிசாளர் ஆசிர்வாதம் அந்தோனி தலைமையில் அமர்வு நேற்று இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த நானாட்டான் பிரதேசத்திலிருந்து கால்நடைகளைச் செட்டிக்குளம் பெரியகட்டுக்கு ஓட்டிவரும் கால்நடை வளர்ப்பாளர்கள் அங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் மேட்டு நிலங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதால் அந்தக் கிராம மக்கள் விவசாயம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பெரியகட்டு கிராம மக்கள் கால்நடைகளை வெளியேற்றித் தருமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் கிராம மக்களுடன் பிரதேச சபை தவிசாளர், பெரியகட்டு கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் எஸ். இராதகிருஸ்ணன் மற்றும் பிரதேசபை உறுப்பினர் இ. பரிகரன் ஆகியோர் கால்நடை வளர்ப்பாளர்கள் முன்னிலையில் நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அதன்போதே மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டது.

மன்னார் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டும். தவறின் பொலிஸாரின் உதவியுடன் கால்நடைகளையும், வளர்ப்பாளர்களையும் வெளியேற்றுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் கால்நடைகளை பெரியகட்டு கிராமத்தில் மேச்சலில் ஈடுபடுத்திவருவதனால் கிராம மக்கள் மாடுகளால் பெரும் தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர்.

மன்னார் மதவாச்சி முதன்மை வீதியில் செல்லும் வாகனங்கள் தினமும் பெரும் விபத்துக்களைச் சந்தித்து வருகின்றன என்று முறையிடப்பட்டது. தமது பகுதியில் உள்ள கால்நடைகளை செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சில பகுதிகளில் மேச்சலுக்கு அனுமதிக்குமாறு நானாட்டான் பிரதேச செயலர் கோரிக்கை விடுத்திருந்தார்.

பொதுமக்கள், அமைப்புகளின் கருத்துக்களை கேட்டிருந்தோம். அதன் பிரகாரம் அங்கு கால்நடைகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4,110)

# தேசிய வாசிப்பு மாதத்தின் நிறைவு விழாவும் பரிசளிப்பும்

வவுனியா, நவ. 29
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினர், தேசிய வாசிப்பு மாதத்தின் நிறைவு விழா மற்றும் பரிசளிப்பை இன்றுநடத்தவுள்ளனர்.

சபையில் முற்பகல் 9.30 மணியளவில் வவுனியா தெற்குதமிழ்பிரதேசசபைத் தலைவர் து. நடராஜசிங்கம் தலைமையில்இதுநடைபெறவுள்ளது.

வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னித் தேர்தல் மாவட்டமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர்கள், வவுனியா நகரசபைத் தலைவர், ஜனநாயகப் போராளிகள் கட்சி உறுப்பினர்கள், வவுனியாமாவட்டச் செயலர், வவுனியா பிரதேச செயலாளர், வவுனியாபிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா மாவட்டஇடர்முகாமைத்துவ அதிகாரி, வவுனியாசுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், பிரதேசசபை, நகரசபைகளின் செயலாளர்கள், அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்துகொள்வர்.

(4,402)

# பெண்கள் மீதான வன்முறை ஒழிப்பு வாரத்தில் குளங்களின் கரைகளில் மரக்கன்றுகள் நடுகை

தலைமன்னார், நவ. 28
பெண்களுக்கு எதிராக இடம்பெறும்சகலவன்முறைகளையும் இல்லாது ஒழிக்கும் பரப்புரை மன்னாரில் நடைபெறுகிறது. அதன் ஒரு கட்டமாக நேற்று மரக்கன்றுகள் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட மாதர் சங்க ஒன்றிய மாவட்ட இணைப்பாளர் திருமதி மகாலட்சுமி குருசாந்தன் தெரிவித்ததாவது:

பெண்களுக்கெதிரான பன்னாட்டு வன்முறை ஒழிப்பைமுன்னிட்டுமன்னார் மாதர் அபிவிருத்தி அமைப்பின் ஆதரவில் மன்னாரில் வேலைத் திட்டங்களைஇடம்பெறுகின்றன.

பன்னாட்டு ரீதியாக ஒக்ரோபர் 10 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 29 ஆம் திகதிவரை இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.

நாட்டில்ஏற்படுகின்றஅழிவுகளை நினைவு கூர்ந்தும்

எதிர்காலத்தில்எமதுசந்ததியினரைப்பாதுகாக்கும் நோக்குடனும் அதாவது எமது சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரு தொனிப்பொருளில் மரங்கள்நடும்நிகழ்வுகள் இடம்பெறுகின்றனஎன்று அவர் தெரிவித்தார்.

மன்னாரில்கிராமமட்டங்களில் இயங்கி வருகின்ற பெண்கள் அமைப்புகள், மாதர் சங்கங்கள் இந்த நிகழ்வுகளில் பங்கு பற்றிவருகின்றன.

மர நடுகை எழுத்தூர் சந்தியிலிருந்து தரவன் கோட்டைவரைவீதியோரத்திலும்பிரதேசகுளக்கட்டுகளைச் சுற்றியும் நூறுமரக்கன்றுகளை இன்று (நேற்று) நடுகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(4,60)



# முத்துஐயன்கட்டில் கால்நடைகளுக்கு இன்று வைத்திய சேவை

முல்லைத்தீவு, நவ. 29
முத்துஐயன்கட்டு வாழ் பாற்பண்ணையாளர்களின் கால்நடைகளுக்கானநடமாடும்வைத்தியசேவைஇன்று இடம்பெறவுள்ளது.

முத்துஐயன்கட்டு பொது நோக்கு மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு இது இடம்பெறும்.

தனியார் நிறுவனம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் முத்து ஐயன் கட்டுக் கிராமத்தில் நடைபெறும் நடமாடும் கால்நடை வைத்தியசேவை மூலம் தங்கள் பசுக்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும்சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளுமாறும் கால்நடை சுகாதாரத் திணைக்களம்தெரிவித்துள்ளது.

(4,500)

# கிளி. இந்துக் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகள்

கொடிகாமம், நவ. 29
கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகள் பாடசாலையில் பொன்சபாபதி மண்டபத்தில் கிறிஸ்தவ மன்றத் தலைவர் செல்வன் த. ஜோன்ரூபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக உருத்திரபுரம் பங்குத்தந்தைவண. அமல்ராஜ் அடிகள், சிறப்புவிருந்தினராக ஆசிரியஆலோசகர்சு. சகாயராசா, பாடசாலை அதிபர் கி. விக்ன ராஜா, ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்வுகளும்இடம்பெற்றன.

(4,159)



# வவுனியாவில் கலாசார விழா

வவுனியா, நவ. 29
வவுனியாபிரதேசசெயலகமும்கலாசாரப்பேரவையும் இணைத்து நடத்தும் கலாசார விழா நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு இடம்பெறும். வவுனியாகிடாச்சூரி கருவேப்பங்குளம்அ.த.கபாடசாலையில்வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தலைமையில் இது இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இது இடம்பெறுகிறது. நிகழ்வுக்குவவுனியாமாவட்டச்செயலர், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபைத் தலைவர்கள், நகரசபைத்தலைவர்கள்உட்பட பலரும்கலந்துகொள்வர். கலைஞர்மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

(4,402)

# ‘எழு நீ’ விருது வழங்கல் பற்றி சபை அமர்வில் கருத்துமோதல்

வவுனியா, நவ. 29

**வவுனியா நகரசபையினர் நடத்தவுள்ள ‘எழு நீ’ விருது தொடர்பாக சபையின் நேற்றைய் கூட்டத்திலும் காரசாரமாக கருத்துகள் முன்வைக்கப்பட்டன.**

கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர் செந்தில்ரூபன் இந்த விடயத்தை தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். முதன்மை விருந்தினராக விக்கினேஸ்வர னைத் தெரிவுசெய்தமை, விருது தெரிவு தொடர்பாக விசனம் தெரிவித்தார்.

வவுனியாவைச் சேர்ந்த ஐவரை முதன்மை விருந்தினராக அழைப்பதற்கான வேண்டுகோளை முன்வைத்தபோதும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சபைக்கு வரவிருந்த ஒருகோடி ரூபா நிதியை இல்லாமல் செய்தவரே முன்னாள் முதலமைச்சர். பேருந்து நிலைய விவகாரத்தில் சரியான தீர்வை முன்வைக்காதவர். சபையில் எடுக்கப்பட்ட பலமுடிவுகளை நடைமுறைப்படுத்தவில்லை. அப்படியிருக்க நாம் எப்படிக் கலந்துகொள்வது? என்று கேள்வியெழுப்பினார். இந்த விடயத்தில் செந்தில்ரூபனும் தவிசாளரும் கடுமையாக முரண்பட்டனர்.

இதன்போது தவிசாளர், நிகழ்வு நெருங்கிவிட்டது. இவற்றை முன்னமே கதைக்கவில்லை, அனைவரிடமும் கலந்துரையாடியே அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளபட்டன. பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று காட்டமாகக் கூறினார்.

உறுப்பினர் லறீப், நிகழ்வுகள் சரியான முறையில் நடக்க வுள்ளன. நிகழ்வுக்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு விட்டன. அதனை எப்படி மாற்றமுடியும்? சபையின் முதல் நிகழ்வு என்பதால் அனைவரும் ஒத்துழைக்கு மாறு கோரினார். கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களான சேனாதிராயா, காண்டீபன், லக்சனா ஆகியோர் நிகழ்வு நடத்தப்படவேண்டும். எனினும் சிலவிடயங்கள் முறை யற்ற விதத்தில் பிழையாக நடக்கின்றன என்று தெரிவித்தனர்.

**கூட்டமைப்பு புறக்கணிக்கும்**

இதேவேளை,சேவையாளர்களுக்கு மதிப்பளிப்பதையோ பரிசில் வழங்குவதையோ நாம் எதிர்க்கவில்லை. குறித்த நிகழ்வு நியதிச் சட்டங்களுக்கு விரோதமாக நடக்கின்றன. சபைச் செயலாளர் மற்றும் கலாசாரக் குழுத் தலைவரான பரதலிங்கத்திடம் எந்தவித ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. சபை உறுப்பினர்களைவிட தலைவரின் தன்னிச்சையான முடிவால் 13பேர் வெளியில் இருந்து குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களது விவரங்கள் சபைக்கு முன்வைக்கப்பட்டு சபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவேண்டும். அது நடைபெறவில்லை. இது தொடர்பான கலந்துரையாடல், கூட்டங்களுக்குச் சரியானமுறையில் அழைப்பு விடுக்கப்பட வில்லை. நகரசபையின் பெயரைப் பயன்படுத்தி நிகழ்வுக்கு நிதி சேகரிக்கபட்டுள்ளது. மூத்த முக்கியமான கலைஞர்கள் புறக்கணிக் கப்பட்டுள்ளனர். ஈ.பி.ஆர்.எல். எவ், ஈரோஸ் போன்ற கட்சிகளுக்கு ஆலோசனைக்குழுவில் முக்கிய இடம் வழங்கபட்டுள்ளது. முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வ ரனை முதன்மை விருந்தினராகக் கொண்டுவந்திருப்பது. அரசியல் நோக்கத்துடனேயே என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறோம். எனவே அரசியல் நோக்கமுள்ள சட்டரீதியற்ற நிகழ்வை நாங்கள் புறக் கணிக் கின்றோம். என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தனர். (4,110)

## வைக்கல் பட்டறை என்றதனால் வவுனியா நகர சபையில் அமளி

வவுனியா, நவ. 29

வவுனியா நகரசபை உறுப்பினர் பாலப் பிரசன்னா தனது கருத்தில் வைக்கல் பட்டறை என்ற சொல்லைப் பாவித்ததால் சபையில் குழப்பநிலை ஏற்பட்டது. சபையின் 8ஆவது அமர்வு நேற்று முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகியது.

“உறுப்பினர் பாலப்பிரசன்னா, எனது வட்டாரத்தின் அபிவிருத்தியில் தலையிடுகிறார். வட்டார உறுப்பினரான என்னிடம் கலந்தாலோசிக்காமல் செயற்படுகிறார். எனது வட்டாரத்தின் அபிவிருத்தி தொடர்பான விடயத்திலிருந்து அவர் விலகவேண்டும்” என்று சக உறுப்பினர் இராஜலிங்கம் சபையில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த உறுப்பினர் பாலப் பிரசன்னா, இது சிறுபிள்ளைத்தனமாகவுள்ளது. எனக்கு உரிமையில்லையா? மக்களுக்குச் சேவை செய்வதில், பிழையிருந்தால் சுட்டிக்காட்டுங்கள், வட்டாரவேறுபாடு என்னால் பார்க்க முடியாது. சொந்தத் தேவைக்காக நான் இல்லை. மக்களின் தேவைக்காகவே நான் கதைக்கின்றேன் என்றுகூறியதுடன் வைக்கல்பட்டறை என்ற வாசனத்தையும் பாவித்திருந்தார்.

திடீரேன எழுந்த உறுப்பினர் காண்டீபன், இந்த உயரிய சபையில் வார்த்தைப் பிரயோகங்கள் முக்கியமானவை. இன்றுடன் மூன்றாவது தடவையாக உறுப்பினர் பாலப்பிரசன்னா சபையை அவமதிக்கின்ற சொற்பிரயோகங்களை பிரயோகித்திருக்கின்றார். இவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்.

பதிலுக்குப் பாலபிரசன்னாவும் காண்டீபன் மீது குற்றசாட்டுகளை முன்வைத்தார். ஆதாரத்துடன் குற்றச்சாட்டுக்களை முன்வையுங்கள். சபையில் மூன்று தடவைகள் இவ்வாறான வார்த்தைப்பிரயோகங்கள் கதைத்ததுக்கு சபையில் உள்ள உறுப்பினர்களின் ஆதாரங்களுடன் உங்களுக்கு தெரிவித்துள்ளேன் என்று காண்டீபன் தவிசாளரிடம் தெரிவித்தார்.

தவறான கருத்தைத் தெரிவித்திருந்தால் அதனை மீளப் பெறுமாறு உறுப்பினர் பிரசன்னாவுக்கு தவிசாளர் தெரிவித்தார். தான் தவறான வார்த்தைப் பிரயோகம் எதுவுமே மேற்கொள்ளவில்லை. நான் வைக்கல்பட்டறை என்றே தெரிவித்திருந்தேன். இதில் என்ன தவறு உள்ளது? வாபஸ் பெற முடியாது என்று தெரிவித்தார்.

இங்குள்ள சகல உறுப்பினர்களும் தங்களது வசனங்களை எவரினதும் மனது புண்படாதவாறு பேசவேண்டும். உறுப்பினர் பாலப்பிரசன்னா மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று உறுப்பினர் சேனாதிராஜா தெரிவித்தார்.

அவமதிக்கின்ற சொற்பிர்யோகங்களைப் பய்ன்படுத்தும் உறுப்பினர்கள் மீது கடுமையான நட்வடிக்கை இனிமேல் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் கௌதமன் தெரிவித்தார். விடயம் முடிவுக்கு வந்தது. (4,110)

## துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் படுகாயம்

கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஓமந்தை கொம்பு வைத்தகுளம்பகுதியில்சம்பவம்நேற்று இடம்பெற்றது. அங்கு வெடிச் சத்தம் கேட்டதுஎன்றும்அதைஆராயச்சென்ற போதேகட்டுத்துவக்குவெடித்து4சிப்பாய்களில் ஒருவர் காயமடைந்தார். வவுனியாமருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார். ஓமந்தைப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (4,110)

## மாவீரர்களை நினைவுகூரவேண்டுமென்ற உறுப்பினரின் வேண்டுகோள் நிராகரிப்பு

### பொதுமக்களுக்கு என்று இறுதியில் அஞ்சலி



வவுனியா, நவ. 29

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்று வவுனியா நகரசபையில் அதன் உறுப்பினர் முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

உயிரிழந்த அனைத்துப் பொதுமக்களுக்கும் அஞ்சலி என்று அது மாற்றப் பட்டபின்னரே அஞ்சலி இடம்பெற்றது.

சபையின் அமர்வு சபைத் தலைவர் கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மாவீரர்களைநினைவுகூரவேண்டும் என்று உறுப்பினர் லக்சனா நாகராயன் வேண்டுகோள் விடுத்தபோது அது நிராகரிக்கப்பட்டது. மகிந்தராயபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர் விபுலகுமார, சுதந்திரக் கட்சியின் பெண் உறுப்பினர் ஆகிய இருவரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

“நாம் ஐக்கியமாகச் செயற்படவேண்டும் என்பதற்காகவே எந்தவித பேதமும் இல்லாமல் இங்கு வந்திருக்கிறோம். எங்களுக்கும் உயிர்நீத்தவர்கள் உள்ளனர். அவர்களைப் பற்றி நாங்கள் கூறவரவில்லை. அது இனரீதியான விடயமாகப் போய்விடும். எனவே அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறோம்” என்று விபுலகுமார கூறினார்.

அகிலஇலங்கை மக்கள் காங்கிரசின் உறுப்பினரான எம். லறீப் மாவீரர்களை நினைவுகூரு வதற்காகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து அதனை வழிமொழிவதாகக் கூறினார். இன்னொரு முஸ்லிம் உறுப்பினரான பாயிஸும் அஞ்சலி செய்வதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

எனினும் தான் மாத்திரமாவது மாவீரர்களை நினைவுகூர சபைஅனுமதி தரவேண்டும் என்று உறுப்பினர் லக்சனா நாகராயன் வேண்டுகோள் விடுத்தி ருந்தார்.

இறுதியில் தவிசாளர், 35 வருடங்களாகப் போரில் உயிர்நீத்த மூவினத்தைச் சேர்ந்த அனைவருக்கும் ஒரு அஞ்சலி நிகழ்வாகச் செய்யவேண்டும் என்று கூறியிருந்தார். அதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். சபைமுடிவடைந்த பின்னர் அனைவரும் எழுந்து நின்று மெழுகு திரி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். (4,110)

## கரைச்சிப் பிரதேச சபை அமர்வுக்குள் நுழைந்த பொலிஸார் வெளியேற்றம்

கிளிநொச்சி, நவ. 29

கரைச்சி பிரதேச சபையின் நேற்றைய சிறப்பு அமர்வுக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு ஆசனத்தில் அமர்த்தப்பட்டனர். எனினும் உடனேயே அவர்கள் திருப்பி அனுப்பப் பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அமர்வின்போது ஆதனவரி பற்றி கலந்துரையாடப்பட்டது. எதிர்த்தரப்பு உறுப்பினர் ஒருவர் பிரதேச சபைக்குச் சொந்தமான பசுமைப்பூங்காவில் பிரதேசத்தில் கேள்வி கோரல் எதுவுமின்றி தனிநபருக்கு வியாபார நிலையம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. சட்ட நடைமுறைகள் எதனையும் பின்பற்றாது வியாபார நிலையங்கள் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். குறுக்கிட்ட தவிசாளர் சிறப்பு அமர்வில் இது பற்றிப் பேச முடியாது- என்றார். ஆனால் மறுப்புத் தெரிவித்த எதிர்த்தரப்பு உறுப்பினர், தனக்கு இந்த விடயம் தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என்றார்.

மற்றொரு உறுப்பினர் தவிசாளரை நோக்கி, ஏற்கனவே சந்தையில் வியாபார நிலையம் வைத்திருந்த ஒருவருக்கே பசுமைப்பூங்கா பிரதேசத்திலும் சபை நடைமுறைகளை மீறி வியாபார நிலையம் வழங்கப்பட்டுள்ளது என்றார். கை நீட்டிப் பேசவேண்டாம் என்று தவிசாளர் உறுப்பினரை பார்த்துக் கூறினார். இந்தக் கருத்து மோதலின் உச்சக் கட்டத்தில் உறுப்பினரான இ. இளங்கோவைவ் முப்பது நிமிடங்களுக்கு சபையிலிருந்து வெளியேற்றுவதாக தவிசாளர் அ. வேழமாலிகிதன் அறிவித்தார்.

அதனை உறுப்பினர் ஏற்க மறுக்க பிரதேச சபையின் செயலாளர் க. கம்சநாதனை பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பி பொலிஸாரை அழைத்து வருமாறு கூறினார்.

பொலிஸார் சபை மண்டபத்துக்குள் வந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பொலிஸாரை உடனடியாகச் சபையிலிருந்து வெளியேற்றினர்.

இதற்கிடையில் சபை முதலில் முப்பது நிமிடங்களும் பின்னர் ஐந்து நிமிடங்களும் ஒத்திவைக்கப்பட்டது. (4,214,6)



### இடமாற்றம் வழங்கப்பட்டும்

# கடமைகளைப் பொறுப்பேற்காத ஆசிரியர்கள் மீது சட்டநடவடிக்கை

## வடக்கு ஆளுநர் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 29

பின்தங்கிய பிரதேசங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்காத அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர், மாகாணப்பணிப்பாளர் ஆகியோருக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே உத்தரவிட்டுள்ளார்.



கிளிநொச்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களைக் கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் ஆளுநர் சந்தித்துக் கலந்துரையாடினார். வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்ஸ் குயின்ரஸ் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதிபர்கள் பலர் ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய ஆளுநர் இந்த உத்தரவை அதிபர்கள் முன்பாக செயலர் எஸ். சத்தியசீலன், மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோருக்கு விடுத்தார்.

துணுக்காய் கல்வி வலயத்துக்கு 270 ஆசிரியர்கள் தேவையாக இருக்கின்றனர். நிரந்தர அதிபர்கள் இல்லாது 31 பாடசாலைகள் இயங்குகின்றன. இங்கு 8 ஆயிரத்து 202 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் ஆளுநரிடம் தெரிவித்தார்.

கடந்த வருடம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு 36 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். வடக்கு கல்வி அமைச்சு இடமாற்றங்களை வழங்கியிருந்தது. ஆனால் 6 பேர் மட்டுமே கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தனர்.

எஞ்சியவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்காது இருகின்றனர். இவர்கள் கடமைகளை பொறுப்பேற்காததன் காரணத்தையும் இதற்காக உயர் அதிகாரிகள் அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன? என்பது தொடர்பிலும் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணித்துள்ளார்.

கஷ்டப் பகுதிகளிலிருந்து 2019ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர்களுக்குப் பதிலாக ஏனைய ஆசிரியர்கள் கடமைகளைப் பொறுப்பேற்காத வரையில் அவர்களைப் பாடசாலைகளிலிருந்து விடுவிக்க வேண்டாம் என்ற கண்டிப்பான உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

கஷ்டப்பகுதி பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் உடனடியாக மாற்றம் பெற்று செல்கின்றபோதும் யாழ்ப்பாண வலயம் போன்ற வசதியான பாடசாலைகளிலிருந்து கஷ்டப் பகுதிக்கு ஆசிரியர்கள் செல்வது தாமதமாகிறது. மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு உங்களது பாடசாலையிலிருந்து ஒரு ஆசிரியர் மாற்றம் பெற்றால் அந்த இடத்துக்கு ஒரு ஆசிரியர் வரும்வரையில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களை விடுவிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். இதற்கு மேலதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ அழுத்தம் பிரயோகித்தால் அது தொடர்பில் தம்மிடம் முறையிடுமாறும் அதிபர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாடசாலை ஆசிரியர்களுக்கான விடுமுறைகளை வழங்கும்போது அவர்களுக்கான பதில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்மதக் கடிதங்களை வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய ஆளுநர், வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் ஆசியர்களுக்கான விடுமுறைக் காலத்த மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக விமர்சனங்கள் எழும் நிலையில் கடந்த ஆறு மாத காலப்பகுதியினுள் 450க்கும் மேற்பட்ட ஆசியர்கள் வெளிநாடு மற்றும் பல்வேறு காரணங்களுக்காகத் தம்மிடம் விடுமுறை அனுமதி பெற்றிருப்பது கவலை அளிப்பதாகத் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் கல்வி முன்னேற்றத்துக்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பதில் கடமை நிறைவேற்றும் அதிபர்களாக செயற்படும் அதிபர்களுக்களுக்கு அனுகூலங்களை ஏற்படுத்தக் கூடிய வகையிலான திட்டங்களை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பதில் கடமை நிறைவேற்றும் அதிபர்களின் கல்வித் தகமை, சேவைக்காலம் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய பட்டியலைச் சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் பணித்துள்ளார்.

சந்திப்பில், ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன், உதவிச் செயல் ஏ.எக்ஸ். செல்வநாயகம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார், கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (4,222,7)

# அபிவிருத்தியில் ஒதுக்கப்பட்ட மாவட்டமாக மன்னார் உள்ளது

## ஜேர்மன் தூதுவரிடம் முறைப்பாடு

தலைமன்னார், நவ. 29

மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தியில் ஒதுக்கப்பட்ட மாவட்டமாகவே காணப்படுகின்றது. தொழில் மற்றும் உயர் கல்விக்கான எவ்வித அபிவிருத்தியும் இங்கு கிடையாது என்று மன்னார் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் ஜேர்மன் தூதுவரிடம் முறையிட்டுள்ளனர்.

ஜேர்மன் தூதுவரிடம் உள்ளிட்ட குழுவினர் இரண்டுதினங்களாகமன்னார்மாவட்டத்தின்பலஇடங்களுக்கும்பயணம் செய்தார்கள். அவரை அங்குள்ள கேட்போர் கூடத்தில் இணையத்தினர்கடந்ததிங்கட்கிழமைபிற்பகல்சந்தித்தனர். இலங்கையின் சமகால அரசியல் சம்பந்தமாகவும் சிவில் அமைப்புக்களின் எண்ணப்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளனஎன்பதைப்பற்றியும், மன்னார்மாவட்டத்தில்அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றியும் தூதுவர் கேட்டறிந்தார்.

மன்னார் ஒதுக்கப்பட்ட மாவட்டமாகவே உள்ளது. மக்கள் போரின்வடுவிலிருந்துஇன்னும்மீளவில்லை. பொருளாதாரப்பிரச்சினையில்தொடர்ந்துநிலைகொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மன்னார் மாவட்டத்துக்கு அபிவிருத்திக்கு என்று ஒதுக்கப்படுகின்றநிதிமிகக்குறைவாகவேஉள்ளது. என்று பிரதிநிதிகள் தெரிவித்தனர். (4,60)



# 13 கிலோகிராம் கஞ்சாவை கடத்தினாரென ஒருவர்கைது

வவுனியா, நவ. 29

13 கிலோகிராம் கேரளக் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக கனகராஜன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அவர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த அவர் தனது இடத்திலிருந்து புத்தளத்துக்கு கஞ்சாவைக் கடத்த முற்பட்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவர்பயணித்தகப்ரகவாகனத்தைவழிமறித்தபொலிஸார் சோதனைநடத்தியபோதேகஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார்தெரிவித்தனர். அவர்விசாரணைகளின்பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,110)

# பாரம்பரிய இசைக்கருவிகளின் பயன்பாடு அழிந்துவிடுமோ?

## பயிற்சிக் கூடங்கள் அமைத்து அடுத்த தலைமுறை தொடர நடவடிக்கை வேண்டும்



தென்மராட்சி, நவ. 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் இசைக்கருவிகளைப்பயன்படுத்த இளம்சந்ததியினர்முன்வராததால் தமதுகாலத்துடன்இசைக்கருவிகளின் பயன்பாடு அழிவடைந்துவிடும். அதனைத்தடுக்க, எதிர்காலச் சந்ததியினரைஇசைப்பயிற்சியில் ஈடுபடுத்த பயிற்சிக் கூடங்களை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வில் பாரம்பரிய இசைக்கலைஞர்கள் தமது ஆதங்கங்களைப் பிரதேசசெயலரிடம் வெளியிட்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கலைத்துறைக்கு பன்னெடுங்காலமாகச் சேவையாற்றிவரும் கலைஞர்களுக்கான ஒன்றுகூடலை பிரதேச கலாசாரப் பிரிவினர் வரணியில் உள்ள பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுநடத்தினர். அதில்அவர்கள் மேலும்தெரிவித்ததாவது:

தென்மராட்சிப்பிரதேசபாடசாலைகளில்மட்டும்தற்போதுபாரம்பரிய கலைகளைஎடுத்தியம்பும்நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. ஏனைய இடங்களில் கலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றமைகுறைந்துள்ளன.



பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளை வளர்க்க வேண்டுமாயின் இளந்தலைமுறையினருக்கு மிருதங்கம், ஆர்மோனியம், பண்ணிசை போன்ற வகுப்புகளை இலவசமாக நடத்தி அவர்களைக் கலந்து கொள்ளச் செய்வதால் பாரம்பரிய கலைகள் அழிவடைந்து செல்வதைத்தடுக்கலாம்.

தற்போது பிரதேச செயலகத்தால் வருடாந்தம் 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்படும்கலைஞர்மதிப்பளிப்பில்இளங்கலைஞர்களும்இணைக்கப்படல் வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதேசசெயலர் உறுதியளித்தார்.

பிரதேச கலாசார அலுவலர் சிவ. முகுந்தன் தலைமையில் நடைபெற்ற ஒன்றுகூடலில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, உதவிப் பிரதேச செயலர் வினோஜிதா கணேசநாதன் மற்றும் பிரதேச செயலக அலுவலர்களும் கலந்து கொண்டனர். (4,9)

# தேர்தலை நடத்தத் தயாராகிறதா தேர்தல்கள் திணைக்களம்?

## தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்கு அரச ஊழியர்களின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

தேர்தல் கடமையில் ஈடுபட விரும்பும் அரச ஊழியர்களின் விவரங்கள் மாவட்ட ரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றன. இது தேர்தல் ஒன்றை நடத்த தேர்தல்கள் திணைக்களம் தயாராகிவிட்டதா என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

தேர்தல் பணிக்காக அரச ஊழியர்களைக் கடமைக்கு அமர்த்தும் விண்ணப்பங்கள் சகல அரச திணைக்களங் களுக்கும், மாவட்டச் செயலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்தப் படிவங்களை நிரப்பி மீண்டும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகள் அரசு அடுத்த தேர்தல் ஒன்றுக்குத் தயாராகிவிட்டதனையே எடுத்துக் காட்டுகிறது என்றும் கூறப்படுகின்றது. மாவட்டச் செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அரச ஊழியர்களும்தமதுதிணைக்களங்கள் ஊடாக நிரப்பி அனுப்பி வைக்கின்றனர். தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடா என்று தேர்தல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "எதிர்காலத்தில் நாட்டில் எந்தவகையான தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதற்கான பணிகளுக்குத் தேவையான அரச ஊழியர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு தேர்தல் அறிவிக்கப்பட்டால் அதற்குத் தேவையான ஊழியர்களை தற்போது விண்ணப்பிப்பவர்களிடமிருந்து தெரிவுசெய்யமுடியும்" என்று தெரிவித்தனர். (4,105)



## மாவீரர்களுக்கு நினைவுத்தூபி அமைத்து எதிர்காலத்தில் நினைவுகூரவேண்டும்!

### மன்னார் பங்குத் தந்தை நேரு வலியுறுத்து

மன்னார், நவ. 29

மாவீரர்களுக்கென இனிவரும் காலங்களில் நினைவுத்தூபி அமைத்து நினைவு கூருவது அவசியம். நினைவு கூருவோரைப் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தியபோதும் அதனைக் கண்டுகொள்ளாது பலரும் நினைவேந்தலில் கலந்துகொண்டுள்ளனர்.

இவ்வாறு மன்னார் பங்கு தந்தை நேரு தெரிவித்தார்.

மாவீரர்களுக்கு நேற்றுமுன்தினம் நினைவுச் சுடரேற்றி அகவணக்கம் செய்த பின்னர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரின் பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைந்திருந்த மாவீரர்களின் கல்லறைகள் அரச படையினரால் அழித்து இல்லாமல் செய்யப்பட்டிருந்தன. மாவீரர் நாள்களில் பெற்றோர், உறவினர்கள் தங்களது பிள்ளைகளின் கல்லறைகளைக் கண்டுபிடித்துச் சுடரேற்றி நினைவுகூர முடியாதுள்ளது.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் முன்பு எவ்வாறு மாவீரர்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களுக்கு நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டிருந்தனவோ அதேபோல் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இறந்தவர்களை நினைவு கூருவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் புலனாய்வாளர்கள் உளவியல் ரீதியாகப் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாகச் செயற்படுகின்றனர். துயிலும் இல்லங்களைச் சீரமைக்கும் பணிகளில் ஈடுபடுகின்றவர்களை ஒளிப்படம் எடுக்கின்றனர். காணொலிப் பதிவு செய்கின்றனர். நினைவுகூரலில் ஈடுபடுபவர்களுக்கு உளரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறு செயற்பட்டும் புலனாய்வாளர்கள் தன்னெழுச்சியாக மாவீரர்களை நினைவு கூர முன்வந்த மக்களை ஒன்றும் செய்யமுடியவில்லை. நாங்கள் எதிர்பார்த்ததை விட மக்கள் எழுச்சி அதிகமாக இருந்தது -என்றார். (4,213)

## ஆழ ஊடுருவும் படையினரால் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 29

முல்லைத்தீவு மாவட்டம் ஐயங்கன்குளம் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட 8பேரும் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நேற்றுமுன்தினம் மதியம் 12.30 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி மதியம் 12.30 அளவில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதலில் அதே கிராமத்தைச் சேர்ந்த பாடசாலைச் சிறுமிகள் நால்வர் உட்பட 8 பேர் கொல்லப்பட்டிருந்தனர். அவர்களின் உடல்கள் அதேகிராமத்திலுள்ள குளக்கரையில் அடக்கம் செய்யப்பட்டன.

அவர்களது உறவினர்கள் அந்த இடத்தில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தி நினைவுகூர்ந்தனர். (4,105)



### இரணைமடுக் குளத்தின் கீழ்

## அடுத்த வருட சிறுபோகத்தில் 12,500 ஏக்கரில் பயிரிடலாம்

### நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

இரணைமடுக் குளத்தின் கீழ் 2019ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 12 ஆயிரத்து 500 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்க முடியும் என்று பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுதாகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தின் கொள்ளளவு 34 அடியில் இருந்து 36 அடியாக உயர்த்தப்பட்டது. தற்போது 34 அடிக்குத் தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் வரை அணைக்கட்டின் பாதுகாப்புக் கருதி 32 அடி உயரத்துக்கு மட்டுமே தண்ணீர் தேக்கப்பட்டது.

தற்போது 34 அடியாகக் காணப்படும் தண்ணீர் மழை வீழ்ச்சி கிடைத்தால் 36 அடியை அண்மிக்கவும் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு கிடைக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

இனிவரும் காலங்களில் மழை வீழ்ச்சி காரணமாக காலபோக நெற்செய்கைக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பதோடு குளத்தின் கொள்ளளவும் அதிகரிக்கும். இது விவசாயிகளுக்கு இரட்டிப்பு நன்மை. தண்ணீர் அதிகரிக்கப்படுவதால் சிறுபோகத்தின்போது இரணைமடுக் குளத்தின் கீழான நெற் செய்கையை அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்படும்.

மாதம் மழைவீழ்ச்சி கிடைக்காமல் போகுமாக இருந்தால் காலபோக நெற் செய்கையின் இறுதிக் காலத்துக்காக இரண்டு கட்டமாகத் தண்ணீர் திறக்கப்படவேண்டிய சூழல் ஏற்படும். 2 அடி தண்ணீர் குறைவதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

2017ஆம் ஆண்டு சிறுபோகத்தில் ஆயிரத்து 800 ஏக்கரும் 2016ஆம் ஆண்டு 3 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கையுமே மேற்கொள்ளப்பட்டது.

2019ஆம் ஆண்டு சிறுபோகம் நம்பிக்கையாக 10 ஆயிரம் ஏக்கரைத் தாண்டி 12 ஆயிரத்து 500 ஏக்கர் வரை செல்லும். 500 ஏக்கர் தொடக்கம் ஆயிரம் ஏக்கர் வரையில் சிறு தானியச் செய்கை மேற்கொள்ள முடியும்.

இதேபோன்று திருவையாறு விவசாயிகளுக்கான ஏற்று நீர்ப்பாசனத்துக்கும் 600 ஏக்கர் பயிர்ச்செய்கை அனுமதிக்கப்படும். மாவட்டத்தின் சகல தரப்பு விவசாயிகளும் நன்மையடைவர்.

இரணைமடுக் குளத்தின் தண்ணீர் மட்டம் 36 அடிக்குத் தேக்கப்பட்டால் மட்டுமே அந்தக்குளத்தின்முழுவிளைச்சல் நிலமான 21 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களையும் மேற்கொள்ளும் சாத்தியம் ஏற்படும்.

காலபோக அறுவடையின் பின்பும் 36 அடிக்குத் தண்ணீர் காணப்படவேண்டும். அவ்வாறான சூழல் இதுவரை ஏற்படவில்லை. இரணைமடுக் குளத்தில் தற்போது அதிக தண்ணீர் காணப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் அநாவசியமாக உட் பகுதிக்குள் பிரவேசிப் பதனை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

நன்நீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் தினமும் குளத்துக்குள் இறங்குவதற்கு முன்பு எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு அனுமதியைப் பெற்றுச் சென்றால் மட்டுமே எம்மாலும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிட்டும். மீனவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (4,105)

## திண்மக் கழிவகற்றல் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் மேற்கொள்ளப்படும் திண்மக் கழிவகற்றல் முன்னேற்றம் பற்றிய கருத்தரங்கு யாழ்ப்பாண மாநகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெறுமென்று திண்மக் கழிவகற்றல் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கருத்தரங்கில் திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களின் திட்டத்தைச் செயற்படுத்தும் 34 உள்ளூராட்சி சபைகளிலிருந்து மாநகர சபை மேயர் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், மாநகர ஆணையாளர், செயலர்கள், வேலைகள் பிரிவு அத்தியட்சகர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், விடய எழுதுநர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், சுற்றாடல் அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் அகியோரில் தலா நான்கு பேர் வீதம் கலந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (4.9)

## அரசியல் கைதிகள் பற்றி மைத்திரியின் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 29

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரச தலைவரால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு சார்பில் விவசாயப் பிரதி அமைச்சர் இ. அங்கஜன், கிழக்கு அபிவிருத்தி பிரதியமைச்சர் வியாழேந்திரன் மற்றும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் மஸ்தான் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ச, நீதி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது என்று அங்கஜனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் வழக்குப் பதிவு செய்யப்படாமல் சிறையில் வாடும் அரசியல் கைதிகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பில் மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொறிமுறைகள் மற்றும் ஆரம்ப நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# குடாநாட்டுகடற்பரப்பில் மீன் பிடிபாடு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

**தற்போதைய காலநிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடற்பரப்பில் மீன்களின் பிடிபாடு அதிகரித்துள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.**

அவர்கள்மேலும்தெரிவித்ததாவது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் குருநகர், நாவாந்துறை, காக்கைதீவு, பாசையூர் மற்றும் தீவுப்பகுதி உள்ளிட்ட கடற்பகு திகளில் மீன்களின் பிடிபாடுகள் அதிக ரித்துள்ளன. கூடுதலாக ஒட்டி, ஓரா மீன்களே பிடிபடுகின்றன. மீன்பாடு தொடர்ச்சியாக நல்லமுறையில் இருப் பதால் அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. எனினும், இறால், கண வாய் நண்டு போன்றவற்றின் விலை கள்தொடர்ந்தும்அதிகரித்தேகாணப்ப டுகின்றன. இறால் கிலோ ஆயிரம் ரூபாவாகவும், நண்டுகிலோஆயிரத்து 200 ரூபாவாகவும், கணவாய் கிலோ ஆயிரம்ரூபாவாகவும்விற்கப்படுகின் றன என்று மீனவர்கள் மேலும் தெரி வித்தனர். (ம-17)



## கலந்துரையாடல்

கொடிகாமம், நவ. 29

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில்கடந்த25ஆம்திகதிஞாயிற்றுக்கிழமைமாலை 4 மணிக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தற்போ தைய அரசியல் நிலமைகள் தொடர்பாக சிறப்புக் கலந்துரை யாடல் இடம்பெற்றது.

வலி. கிழக்குபிரதேசசபைஉறுப்பினர்தவநாயகத்தின்தலை மையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் புளொட் அமைப்பின்தலைவரும், நாடாளுமன்றஉறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்பா. கஜதீபன், வலிகிழக்குபிரதேசசபைதவிசாளர் நிரோசஸ், உபதவிசாளர்கபிலன், வலி. கிழக்குபிரதேசசபை உறுப்பினர்கள் செல்வராஜா, அகீபன், வலிதெற்கு பிரதேச சபை உறுப்பினர் கெங்காதரன், கிராம அபிவிருத்திச் சங்க போசகர், சனசமூகநிலையநிர்வாகிகள், கிராமஅபிவிருத்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-159)




## பிரிவுபசாரமும் வரவேற்பும்

சாவகச்சேரி, நவ. 29

சாவகச்சேரிநுணாவில்மத்திகிராமஅலுவலர்பிரிவில்கடந்த ஆறுவருடங்களாகஅபிவிருத்திஅலுவலராகக்கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திருமதி மலர்மதி கணேச மூர்த்திக்கு மக்களால் சேவைநலன் பாராட்டு விழா நுணா வில் மத்தி பொது நோக்கு மண்டபத்தில் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட்டது. அத்துடன் பிரிவுக்கு புதிதாக அபிவிருத்தி அலுவலராகக் கடமையேற்றுள்ள திருமதி சற்கு ணமாலாலிங்கேஸ்வரனுக்குவரவேற்புவிழாவும்நடாத்தப் பட்டது.

ஓய்வுபெற்ற அதிபர் க. அருந்தவபாலனின் தலைமையில் நடைபெற்ற விழாவில் நுணாவில் மத்தி கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-9)



*நாகர்கோவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு சட்டவிரோத மணல் அகழ்வுக் குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு கன்டர் ரக வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற குடத்தனை சிறப்பு அதிரடிப் படையினர் கன்டர் ரக வாக னங்களைக் கைப்பற்றினர். மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள்தப்பிச்சென்றுள்ளநிலையில் அவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம– 160)*

### சுண்டிக்குளம் கடலேரியில்

## இறால் தொழிலில் ஈடுபட ஜனவரியிலேயே அனுமதி

### கடற்றொழில் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடல் ஏரியில் இறால் பிடிக் கும்தொழிலில்ஈடுபடஜனவரிமாதத்திலேயேஅனுமதிவழங் கப்படும் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுஇறால்களின்பெருக்கம்அதிகரித்துள்ளன. இதனால் சிலர் இன்னும் ஓரிரு வாரங்களில் இறால் பிடிப்பதற்குத் தயா ராகவாய்ப்புண்டு. இந்தநிலையில்கடற்றொழில்நீரியல்வளத் திணைக்களத்திடம் இருந்து இவ்வாறான அறிவிப்பு வந்துள் ளது.

தற்போது இறால்கள் குஞ்சு இறால்களாகவே காணப்படுகின் றன. ஜனவரி மாதமே இறால் தொழிலில் ஈடுபடுவதற்குச் சிறந்தது. வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடல் ஏரியில் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட ஜனவரி மாதத்திலேயே அனுமதி கொடுக்கப்படும் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (ம-17)

## ஹெரோயின்வைத்திருந்த இருவர்விளக்கமறியலில்

சாவகச்சேரி, நவ. 29

போதைப் பொருளான ஹெரோயின் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதான நாவற்குளியைச் சேர்ந்த சந் தேக நபர்கள் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தர விட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் நாவற்குளி ஐயனார் கோவிலடிப் பகுதியில் திடீர் சோதனைநடத்தியபோது இருவரிடம்தலா100மில்லிகிராம் ஹெரோயின்இருப்பதுகண்டுபிடிக்கப்பட்டுஇருவரும்கைது செய்யப்பட்டனர். இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதி வான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் இருவரையும் எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-9)

## திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் களவாடப்படுகின்றன மின்குமிழ்கள்

யாழ்ப்பாணம், நவ. 29

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக களவா டப்பட்டு வருகின்றன என்று நல்லூர்ப் பிரதேச சபை தெரி வித்தது.

சந்தையின் உட்புறத்தில் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் சிலவே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

மழைகாலத்தில்சந்தையின்உட்பகுதிஇருள்சூழ்ந்துகாணப் படுவதை அடுத்து இந்த மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன. எனினும் சில விசமிகள்ால் அவை களவாடப்பட்டுள்ளன. திருடப்பட்ட மின்குமிழ்களுக்குப் பதிலாக புதிய மின்குமிழ் களைப்பொருத்தவும்நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதுஎன்று நல்லூர் பிரதேச சபை மேலும் தெரிவித்தது. (ம-17)



*கைதடி உதவும் கரங்கள் அமைப்பால் கைதடி பொது நூலகத்துக்கென ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள்கடந்த24ஆம்திகதிசனிக்கிழமை அன்பளிப்பு செய்யப்பட்டன. வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதற்காக இந்த நூல்கள் வழங் கப்பட்டனஎன்று தெரிவிக்கப்பட்டது. (ம– 159)*



## சாவ. பொதுச்சந்தையில் பழுதான கடலுணவுகள்!

சாவகச்சேரி, நவ. 29

சாவகச்சேரிபொதுச்சந்தையின் கடலுணவு விற்பனைப்பிரி வில்குளிரூட்டப்பட்டநிலையில்பழுதடைந்தமீன்கள்மற்றும் கடலுணவுகள்பொதுச்சுகாதாரப்பரிசோதகரால்நேற்றுகைப் பற்றப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

குறித்தகடலுணவுவிற்பனைப்பிரிவில்பழுதடைந்தமீன்கள் விற்பனை செய்யப்படுகிறது என்று பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டைஅடுத்துஅங்குசென்றநகரசபையின்பொதுச் சுகாதாரப்பரிசோதகர் பி. தளிர்ராஜ், பெட்டிகளில் வைக்கப்பட் டிருந்த மீன்களைப் பரிசோதித்தபோது 5 பெட்டிகளில் பழுத டைந்த நிலையில் இருந்த மீன்களைக் கைப்பற்றி உரிமை யாளர்களின் சம்மதத்துடன் அவற்றை அழித்தார். (ம-9)

# பசு வதையைத் தடைசெய்யக் கோரி சாவ. நகர, பிரதேச சபைகளில் மனு!

**சாவகச்சேரி, நவ. 29**
**தென்மராட்சிப் பிரதேசத்தில் பசுவதையைத் தடை செய்யக்கோரி பிரதேசத்தில் உள்ள இந்துக் கோவில்கள், இந்து இளைஞர் மன்றங்கள், பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளால் சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் மனுக்கள் கையளிக்கப்பட்டன.**



தென்மராட்சிப் பகுதியில் பசுவதையைத் தடைசெய்ய வேண்டும் என்று இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. பேரணிகள், உணவு ஒறுப்புக்கள் என்பனவும் நடத்தப்பட்டிருந்தன. இத்தகையதொரு பின்னணியில், இந்து அமைப்புகளால் பிரதேசத்தில் பசுவதையைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரியும், அடுத்த வருடம் மாட்டிறைச்சிக் கடைகள் திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாமென வலியுறுத்தியும் 200க்கு மேற்பட்டோரின் கையொப்பத்துடன் கூடிய மனுக்கள் சாவ கச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை போன்றவற்றில் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இறைச்சிக்காக மாடு வெட்டுவதையும், விற்பதையும் நல்லூர் பிரதேச சபை தடைசெய்துள்ள நிலையில், சுமார் 80க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இணைந்து தடையைத் திரும்பப் பெறவேண்டும் என்று நல்லூர் பிரதேச சபையை அண்மையில் வலியுறுத்தின. நல்லூர் பிரதேச சபையின் முடிவுக்கு எதிராக வழங்கப்பட்ட மனுவில், சில நோயாளர்களின் மருத்துவத் தேவைக்கு மருத்துவர்கள் மாட்டிறைச்சியைப் பரிந்துரைக்கின்றனர். அதை எமது பகுதியில் (நல்லூரில்) பெறமுடியாதுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-9)



*யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பக் கல்வி மன்றத்தின் ஆண்டு விழா கல்லூரிக் கலையரங்கில் கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மன்றத்தின் காப்பாளரும் விரிவுரையாளருமான கி.கிருஸ்ண யோகனின் தலைமையில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினர்களாக பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தம்பதியினர் கலந்து கொண்டனர். (ம)*

## வலி. மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர், சிறப்புத் தேவையுடையோர் தினம்


யாழ்ப்பாணம், நவ. 29
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோர் தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன், சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், சுழிபுரம் கிழக்கு முதியோர் சங்கப் பிரதிநிதி கணபதிப்பிள்ளை செல்வராசு ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்படும் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இன்று காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளன.
யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) த.மோகனராஜின் தலைமையில் இன்றைய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29
மானிப்பாய் வட்ட, மானிப்பாய் நகர லயன்ஸ் கழகங்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வை இன்று முன்னெடுக்கவுள்ளன. வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன், மருத்துவர் லயன் வி.தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.சற்குணராஜா, லயன் வி.கே.விக்னேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)



*கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நாவலர் குருபூசை நிகழ்வுகள் நேற்றுக் காலை உபஅதிபர் த.கோபாலகிருஷ்ணனின் தலைமையில் நடைபெற்றன. கலாசாலையின் ஆசிரிய பயிலுநர்கள் 'நாவலர் ஒரு பன்முகப் பார்வை' என்ற பொருளில் அவரது பணிகள் குறித்துக் கருத்துரைகளை வழங்கினர். விரிவுரையாளர்களான த.ஜானகி, கு.பாலஷண்முகன் ஆகியோரும் உரை ஆற்றினர். (ம)*

## ஒளிப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஒளிப்படக் கலைக் கழகம் நடத்தும் ஒளிப்படக் கண்காட்சி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூலகத்தில் இன்று, நாளை, நாளைமறுதினம் என்று மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.
இன்று நண்பகல் 11.30 மணியில் இருந்து மாலை 4 மணி வரையும், நாளையும், நாளைமறுதினமும் காலை 9.30 மணியில் இருந்து மாலை 4 மணிவரையும் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. (ம)

## பரிசளிப்பு விழாக்கள்

**மிருசுவில் றோ.க.த.க.**
மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் பாடசாலை அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய (நிர்வாகம்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக மிருசுவில் நீக்கிலஸ் தேவாலய பங்குத்தந்தை எப்.ஆர்.எக்ஸ்.டபிள்யூ. ஜேம்ஸ் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினர்களாக கொடிகாமம் மணியம் களஞ்சிய உரிமையாளர் பொ.சற்குண சீலன், சாவகச்சேரி இந்திரன் நகைக் கடை உரிமையாளர் இ.தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**கைதடி பொதுநூலகம்**
சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கைதடி பொது நூலகத்தால் ஒக்ரோர் மாதத்தில் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத போட்டிகளின் பரிசளிப்பு விழாகைதடிமுத்துக்குமார சுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது.
பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவபீட முதுநிலை விரிவுரையாளர் மருத்துவர் திருமதி விவியன் சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கமும் மதிப்புறு விருந்தினராக கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலய அதிபர் க.கணேசபாலேந்திர னும் கலந்து கொள்ளவுள்ளனர்.


**யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை**
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் அதிபர் நாகராஜா மகேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக மருத்துவர் தயாசிவம் கோபிசங்கர் கலந்து கொள்ளவுள்ளார்.

**நீர்வேலி சி.சி.த.க.**
யாழ்ப்பாணம் - நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் அதிபர் தி. ரவீந்திரநாதனின் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நீர்வேலி செல்லக்கதிர்காமம் தலைமைக்குரு சிவசிறி கு.தியாகராஜக்குருக்கள், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் சிவசிறி சா.சோமதேவக் குருக்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரையை வழங்கவுள்ளனர்.
முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் முகாமையாளர் நாகரத்தினம் தினேஸ், தொழிலதிபர் பொன்னையா கிருண்னானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
மதிப்புறு விருந்தினராக நீர்வேலி வடக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் மகாதேவன் சுதர்சன் கலந்து கொள்ளவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-159,9)

# செண்டினல் தீவில் கொல்லப்பட்டவரின் உடலைத் தேடுவது ஆபத்தானது

## பழங்குடிகளுக்கான உரிமை அமைப்பு எச்சரிக்கை

லண்டன்.நவ.29
அந்தமானில்உள்ளவடக்குசெண்டினல்தீவில்பழங்குடியினரால் கொல்லப்பட்டஅமெரிக்கச்சுற்றுலாப்பயணியான'ஜோன்ஆலன் சாவ்'வின்உடலைத்தேடிவருகின்றனர்இந்தியஅதிகாரிகள். இந்த முயற்சி ஆபத்தானது. அதை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று பழங்குடிகளின் உரிமைக்காகப் போராடும் 'சர்வைவல்' பன்னாட்டுஅமைப்புஎச்சரித்துள்ளது. அந்தமான்நிக்கோபர்தீவில் இருந்து35மைல்தொலைவில்செண்டினல்தீவுஅமைந்திருக்கிறது. இந்தத் தீவுக்குள் செல்வதற்கு இந்திய அரசால் தடைசெய்யப் பட்டுள்ளது. ஆனால், எந்தவிதமான முன் அனுமதியும்பெறாமல் அமெரிக்கப்பிரஜையானஜோன்ஆலன்சாவ்(வயது27)என்பவர் உள்ளூர்மீனவர்களுக்குப்பணம்கொடுத்துக்கடந்த17ஆம்திகதி அங்கு சென்றிருந்தார். வெளிமனிதர்கள் தொடர்பே இல்லாமல் வாழ்ந்துவரும் செண்டினல் பழங்குடி மக்கள் ஜோன் ஆலனை



அம்புஎய்திக்கொலைசெய்தனர். கொல்லப்பட்டஅவரதுஉடலை செண்டினல் பழங்குடியினர் புதைப்பதைப் பார்த்துவிட்டு. மீனவர்கள்பொலிசாருக்குத்தகவல்தெரிவித்தனர். அன்றிலிருந்து ஜோன் ஆலனின் உடலை மீட்பதற்குப் பல்வேறு முயற்சிகளைப் பொலிசார் செய்து வருகின்றனர். அந்தத் தீவுக்கு அருகே சென்றபோது பழங்குடியினர் தாக்க முற்பட்டதால், பொலிசார் திரும்பினார்கள். மானுடவியவியலாளர் உதவியுடன் அங்குச்செல்ல போலீஸார் முயற்சித்து வருகின்றனர். இந்த நிலையில்,பழங்குடியினமக்களின்உரிமைக்காகப்போராடிவரும் லண்டனைச் சேர்ந்த சர்வைவல் இன்டர்நேஷனல் தொண்டு நிறுவனம், நார்த்செண்டினல் தீவுக்குள் அமெரிக்க உடலைத் தேடும் முயற்சியைக் கைவிடுங்கள் என்று இந்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. தொடர்ந்து முயற்சிப்பது ஆபத்தை விளைவிக்கும் என்றும் அது எச்சரித்துள்ளது.

# இரசாயன ஆலையில் வெடிவிபத்து சீனாவில் 22 பேர் பரிதாபச்சாவு

பீஜிங்.நவ.29
சீனாவிலுள்ள இரசாயன ஆலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 22 பேர் சாவடைந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். சீனாவின்வடக்கேஉள்ளசான்ஜியகோநகரத்தில்உள்ளஹேபை ஷின்குவா இரசாயனத் தொழிற்சாலையில் நேற்றைய தினம் பெரும் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 22பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். இந்த விபத்தில் 38 பாரவூர்திகள், 12 மகிழுந்துகள் என்பன தீக்கு இரையாகின என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்ட காரணம் குறித்து விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், வெடி விபத்து ஏற்பட்ட இடத்துக்குப் பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று ம்மாகாண அரசு தெரிவித்துள்ளது. அதிகரித்து வரும் சீன மக்கள் தொகையைப் பொறுத்து அந்த நாட்டில் தொழில் வளர்ச்சியும் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் அங்கு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பில் குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பில் சீன அரசு கவனமாகச் செயற்படாததால் விபத்து ஏற்படுவது அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள்இருந்துவருகிறது. 2015ஆம்ஆண்டுதியாஜினில் உள்ள இரசாயனச் சேகரிப்புக் கூடத்தில் நடந்த வெடி விபத்தில் 173பேர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









## உக்ரைன் – ரஷ்யா மோதல் போக்கு

# கைதான உக்ரைன் பிர
# தொலைக்காட்சியில் வாக்

## ட்ரம்ப்– புடின் சந்திப்பு என்னாகும்...

ரஷ்யாவால்தன்னுடன் இணைப்பட்டுள்ளகிரிமியாவின்கடற்கரைக்பகுதியில், ரஷ்ய பற்றப்பட்டிருந்தனர் உக்ரைனின் கடற்படைக் கப்பல்கள். கப்பல்களையும் அதிலிரு கைப்பற்றியதை அடுத்து உக்ரைனின் நாடாளுமன்றத்தில் இராணுவச் சட்டத்தை ந புதல் அளிக்கப்பட்டிருந்தது. ரஷ்யா தாக்குதல் நடத்துவதற்குச் சாத்தியமான எல்லைப் பொருந்தும் என்று உக்ரைனின் அதிபர் பெட்ரோபோரோஷென்கோ தெரிவித்திருந்தார். இ றிய உக்ரைன் கப்பல்களில் இருந்தவர்களின் வாக்குமூலத்தை தொலைக்காட்சியூடாக செ

ரஷ்யாக் கடற்படையினரால் பிடிபட்டவர்களில் ஒருவரான வொலோயிமிர் லிசோவ்யி என்பவர் தொலைக் காட்சியில் தெரிவிக்கும் போது, "உக்ரைனின் 'ஆத்திரமூட்டும் நடவடிக் கைகள்' குறித்துத்தனக்குத்தெரியும்" என்று கூறியுள்ளார். இதுபற்றிச்செய் தியாளர்களுக்குக் கருத்தரைத்த உக் ரைனின் கடற்படைத் தளபதி "அவர் கள்பொய்கூறுவதற்குவற்புறுத்தப்பட் டுள்ளனர்" என்றுள்ளார். உக்ரை னின் கப்பலில் பிடிப்பட்ட 24பேரை யும் 60 நாள்கள் தடுப்பில் வைக்கு மாறுகிரிமியாவில்உள்ளநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலைத்தேச நாடுகள் ரஷ்யாவின் இந்த நடவடிக் கைக்குக் கண்டனம் தெரிவித்துள் ளன. தங்களின்கப்பல்களில்ஒன்றை ரஷ்யாஆக்ரோஷத்துடன்மோதியதா கவும் பின்னர் கைப்பற்றியதாகவும் உக்ரைன் கூறுகிறது. தங்கள் கடல் எல்லைக்குள் அவை நுழைந்துவிட்டதாக ரஷ்யா தெரிவிக் கிறது.







**ட்ரம்ப் - புடின் சந்திப்பு?**
இந்த வாரத்தின் பிற்பகுதியில் வெய்னோ ஐரிஸில் நடக்கவுள்ள ஜி20 உச்சி மாநாட்டுக்கு இடையே ட்ரம்ப்-புடின்சந்திப்புஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது. ரஷ்யா - உக்ரைன் மோதல்போக்கைத்தொடர்ந்துரஷ்ய அதிபர் புடினைச் சந்திப்பதாக இருந்த தனது திட்டத்தை நிறுத்தக்கூடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். உக்ரை னின்; கப்பல்களைத் தாக்கி அவற்றை ரஷ்யா கைப்பற்றி யது குறித்த முழுத் தகவல் அடங்கிய அறிக்கையைப் படிப்பதற்குத்தான்காத்திருப்பதாகவோஷிங்டன்போஸ்ட் பத்திரிகைக்குஅளித்தபேட்டியில்ட்ரம்ப்தெரிவித்துள்ளார். "ஒருவேளை நான் புடினைச் சந்திக்காமல் போகலாம். ரஷ்யாவின் இந்த ஆக்ரமிப்புத் தாக்குதல் எனக்குப் பிடிக் கவில்லை. இந்த ஆக்ரமிப்பு நடவடிக்கை எனக்குப் பிடிக் கவில்லை" என்றுள்ளார் ட்ரம்ப். அத்தோடு உக்ரைன் மற்றும்ரஷ்யா இடையான பிரச்சினையில், உக்ரைனை ஐரோப்பியநாடுகள் ஆதரிக்க வேண்டுமென அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது. ரஷ்யா மீது கடுமையான

மோதலில் யால், அங்கு ரஷ்யவிடம் மேலை நாடு என்பதும் குறி




# ளைஜகள் ...க்குமூலம்

## ...?

...ஷ்யாவால்சுடப்பட்டுபின்னர்கைப் ...லிருந்த பணியாளர்களை ரஷ்யா ...த நடைமுறைப்படுத்துவதற்கு ஒப் ...லைப் பகுதிகளுக்கு இந்தச் சட்டம் ...ர். இந்த நிலையில்தான் கைப்பற் ...க வெளியிட்டுள்ளது ரஷ்யா.



தடைகள் கொண்டுவரப்பட வேண்டும் என்று அமெரிக்கா விரும்புவதாக அந்தநாட்டின் அரசபேச்சாளரானஹீதர்தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று உக்ரைனின் இரண்டு பீரங்கிக் கப்பல்களும், கப்பலை இழுத்துக் கரைக்குக்கொண்டுவரும்கப்பலும் கருங்கடலில் இருந்து அஸாவ் கடலில்நுழைவதற்கு இருக்கின்றஒரே ஒரு வழியான கேட்ச் ஜலசந்திப் பகுதியூடாகப் பயணித்தன. அப்போது ரஷ்ய கடற்படையால் அவை கைப்பற்றப்பட்டன. ரஷ்யக் கடல் எல்லையை மீறி இந்தக் கப்பல்கள் நுழைந்துள்ளதாக ரஷ்யாவின் தேசிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. கப்பல்கள் சுதந்திரமாக செல்கின்ற கருங்கடலில் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாலும், ரஷ்யாவால்இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள கிரிமியா உக்ரைனைச் சேர்ந்ததாக இருப்பதாலும், பன்னாட்டுச் சட்டத்தை மீறிய செயல் இதுவென உக்ரைன் கூறுகிறது. இதற்காக அஸோவ் கடலுக்கும் கெட்ச் ஜலசந்திக்கும் தடையில்லாமல்சென்றுவருவதற்குஇருக்கின்ற 2003ஆம் ஆண்டு ரஷ்ய - உக்ரைன் ஒப்பந்தத்தையும் உக்ரைன் சுட்டிக்காட்டுகிறது. 2014ஆம்ஆண்டிலிருந்து உக்ரைனும் ரஷ்யாவும் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ...ம் ஈடுபட்டு வருகின்றன. தற்போதைய நிலை ...கு சண்டை தீவிரமடையும் ஆபத்து உள்ளது. ...ம்கனரக ஆயுதங்கள் உள்ளன. உக்ரைனுக்கு ...ாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கின்றன. ...குறிப்பிடத்தக்கது.

# உயிரிகளின் கொழுப்பிலிருந்து எரிபொருள்





லண்டன் நவ.29

வானூர்திகள் நன்கு சுத்திகரிக்கப்பட்ட பெட்றோலில் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 2 சதவீதமான கரியமில வாயு காற்றில் கலந்து காற்று மாசடைகிறது. இதனால், சுற்றாடலுக்குத் தீங்குவிளைவிக்காத வேறு வகையான எரிபொருளை வானூர்திக்குப் பயன்படுத்துவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்ஒருமுன்னெடுப்பாக மாட்டின்கொழுப்பில் இருந்து எரிபொருள் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின்லாஸ்ஏஞ்சல்சில்உள்ளஒரு எண்ணைசுத்திகரிப்புநிறுவனம்இத்தகைய முயற்சியில்வெற்றிபெற்றுள்ளது. அதேபோன்று கோழியின் கொழுப்பில் இருந்தும் வானூர்திக்கான எரிபொருளைத் தயாரித்துள்ளது.

இதன்மூலம்எரிபொருள்தயாரிப்புக்கானசெலவு குறைவாகும் என்றும், இது வெற்றியளிக்கும் சந்தர்ப்பத்தில் 2035ஆம் ஆண்டளவில் விமானத்தில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை 2மடங்காக அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க அதிபராகப் பராக் ஒபாமா இருந்த காலப்பகுதியில் இந்த வகைஎரிபொருள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகக் கொழுப்பை மூலப்பொருளாகக்கொண்டு தயாரிக்கப்படும் ஒருகலன்எரிபொருளுக்குமானியம்வழங்கியிருந்ததுடன் அந்த எரிபொருளையே இராணுவ விமானங்களுக்கும் பயன்படுத்துமாறு ஊக்கமளிக்கப்பட்டிருந்தது.

இது மட்டுமல்லாமல் நோர்வேயைச் சேர்ந்த ஹாட்டிகுறுடன் என்ற கப்பல் நிறுவனம் இறந்த மீன்களுடன்வேறு சில பொருள்களைக் கலந்து ஒருவகை எரிபொருளைத் தயாரித்து அதையே தங்கள் கப்பலுக்கு எரிபொருளாகப் பாவிக்கவுள்ளதாகக் கூறியுள்ளது. குறிப்பட்ட இந்தக்கப்பல் நிறுவனம் அடுத்த வருடத்தில் தங்களுடைய 17கப்பல்களில் 6 கப்பல்களை இந்த மாற்று எரிபொருள் மூலம் இயக்கவுள்ளதாக அந்த நிறுவனத்தின் சிரேஸ்ட பொறியியலாளர் தோமஸ் கூறுகிறார். நோர்வேயின் ஒரு கப்பல் வெளியிடுகின்றபுகை10 இலட்சம்மகிழுந்துகள்வெளியிடும்புகைக்குச்சமனாகஇருக்கின்றது. நோர்வேயில் தற்பொழுது சில பேரூந்துகள் இந்த மாற்று எரிபொருள் மூலமாகவே இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## சிட்னியில் வெள்ளம்; போக்குவரத்துக்கள் பாதிப்பு ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில்



சிட்னி.நவ.29

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய நகரான சிட்னியில் வரலாறு காணாத மழை பெய்து வருகிறது. ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை நேற்று ஒரே நாளில் பெய்ததால், வீதிகள் எங்கிலும் மழைநீர்வெள்ளம்போல்பெருக்கெடுத்து ஓடியது. இதனால் போக்குவரத்து நெரிசல்ஏற்பட்டது,பல்வேறுஇடங்களில் மரங்கள்சாய்ந்தன,சுரங்கப்பாதைகளில் மழைநீர் புகுந்ததால், மக்கள் மிகுந்த சிரமப்பட்டனர்.

ஒரு சில இடங்களில் மழை நிற்காமல் பெய்ததால், மழை நீர் சில மணிநேரங்களில் வீதியில் ஆறுபோல் ஓடியது. இதனால், வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள், இரண்டு சக்கர வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. வழக்கமாக நவம்பர் மாதத்தில் 84 மில்லி மீற்றர் மழைதான் சிட்னிநகரில்பெய்யும். ஆனால், நேற்று ஒரே நாளில் மட்டும் 106 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. இதனால், சிட்னி நகரில்உள்ளசுரங்க ரயில்கள், ரயில்கள் அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டன. விமான நிலையத்தின் ஓடுபாதையில் நீர் சூழ்ந்ததால், பல விமானசேவையும்நிறுத்தப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய இடி, மின்னல், காற்றுடன் கனமழை பெய்ததால் மக்கள் வெளியே நடமாட முடியாமல் பெரும் சிரமத்துக்கு ஆளாகினார்கள். அலுவலகத்துக்குச் செல்பவர்கள், பாடசாலை கல்லூரிக்குச் சென்றவர்கள் வீடு திரும்ப முடியாமல் பெரும் அவதிக்குள்ளானார்கள். கடும் மழைமற்றும்போக்குவரத்துநெரிசலில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது மரங்கள் முறிந்து விழுந்ததில் இரண்டு பொலிசார் காயமடைந்துள்ளனர், இன்று காலையில் இருந்து 12 பேரை மழையில் இருந்து மீட்டுள்ளதாக மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர். கிழக்கு குயின்ஸ்லாந்து, நார்த்தன் நியூ சவுத்வேல்ஸ், மவுரியா, நியூகேஸில், சிட்னி, இலாவாரா, கிராப்டன், பிரிஸ்பன் ஆகிய நகரங்களுக்கு கனமழை எச்சரிக்கைவிடுத்துள்ளதுஆஸ்திரேலிய வானிலைமையம்.

## ஆப்கானிஸ்தானில்குண்டுவெடிப்பு அமெரிக்கச்சிப்பாய்கள்மூவர்சாவு

காஸ்னி.நவ.29

ஆப்கானிஸ்தானில் ஆயததாரிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் அமெரிக்கச் சிப்பாய்கள் 3 பேர் சாவடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தலிபான்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஒருபக்கம்அமைதிப்பேச்சுவார்த்தைநடந்தாலும், அவர்கள் தாக்குதல்களை நிறுத்தவில்லை. இதன் காரணமாக ஆப்கானிஸ்தான் படைகளும், அங்குள்ள அமெரிக்க கூட்டுப்படைகளும், தலிபான்களுக்குஎதிரானநடவடிக்கைகளை அதிகப்படுத்திவருகின்றன. அவ்வகையில்காந்தஹார்மாகாணத்தில், மேவான்ட்மாவட்டம், பேண்ட் இடெமர் பகுதியில் தலிபான்களைக் குறி வைத்து நேற்று அமெரிக்க கூட்டுப்படைகள் வான் தாக்குதல் நடத்தின. இதில் தலிபான் அமைப்பின் உள்ளூர்த் தலைவன் ரகமதுல்லா உள்ளிட்ட 7 பேர் சாவடைந்தனர். 2 பேர் படுகாயம் அடைந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் காஸ்னிநகரில்அமெரிக்கசிறப்புபடைச்சிப்பாய்களைக்குறிவைத்துத்தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். வீதியோரம் பதுக்கிவைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச்செய்தனர். இதில், 3 சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர். 4பேர்காயமடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் இந்த ஆண்டில் இதுவரை அமெரிக்க கூட்டுப்படையைச் சேர்ந்த 12பேர் சாவடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.




# சேதமடைகின்றது சீனப் பெருஞ்சுவர்



பீஜிங்.நவ.29

உலகின்ஏழுஅதிசயங்களில்ஒன்றானசீனப் பெருஞ்சுவர் சேதமடைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உலக அதிசயங்களில் பிரம்மாண்டமான ஒன்று சீனப் பெருஞ்சுவர். சீனப் பேரரசர் கின் ஷி ஹூவாங்கின் ஆலோசனையின்படி இந்தப் பெருஞ்சுவர் கிழக்கே ஹெபேய் மாகாணத்தில் உள்ள ஷாங்ஹாய்குவானில் ஆரம்பித்து மேற்கே லோப்நுர் வரையில் 8ஆயிரத்து 850 கி.மீ. தூரத்துக்குப்பிரம்மாண்டமாய்நீளும்வகையில்கட்டப்பட்டுள்ளது. 2ஆயிரம்ஆண்டுகள் பழமைவாய்ந்தபலசிறப்புகளைப்பெற்றஇந்தச் சீனப்பெருஞ்சுவர்தற்போது சேதமடைந்து வருவதாகச்செய்திகள் வெளியாகி உள்ளன. இடியும் நிலையில் இருக்கும் பகுதிகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தாலும் சுவரின் 30 சதவீதம் பலத்த சேதமடைந்து விட்டதால் இதைச் சரி செய்யும் பணியில் சீன அரசு ஈடுபட்டுள்ளது. மேலும், சீனப் பெருஞ்சுவரின் கட்டுமானங்கள் மிகவும் சிக்கலான முறைஎன்பதால்அதை மிகவும்நுட்பமான முறையிலேயே அணுக வேண்டும் என்றும், அதற்காக முதற்கட்ட நடவடிக்கையாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் அளவெடுக்கும்பணிநடந்துவருவதாகவும்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனப் பெருஞ்சுவரின் இந்தப்பாதிப்புக்குமாறிவரும்நவீனமுறைகளே காரணம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.




# திரைப் படத்தில் இணைகின்றது பிக்பாஸ் ஜோடி

பிக்பாஸ் நிகழ்ச்சியின் இந்த சீசனில் ஐஸ்வர்யா தத்தாவின் செயல்பாடுகள் அதிக விமர்சனங்களைச் சந்தித்தன. அதன் மூலம் அவர் அதிக கவனம் பெற்றார். தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும், ஆறாது சினம் உள்ளிட்ட சில படங்களில் நடித்த அவர் புதிய படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தமாகி உள்ளார்.
பிக்பாசில் அவரோடு இணைந்து கலந்துகொண்ட மகத் அந்த படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். இன்னும் பெயரிடப்படாத இந்தப்படத்தை அறிமுக இயக்குநர் பிரபு ராம்.சி இயக்குகிறார். இவர் ஹொலிவூட் படங்களில் உதவி இயக்குநராகப் பணியாற்றி உள்ளார். காதல் - நகைச்சுவை கதையம்சத்தில்தயாராகும் இந்தப்படத்தில் நடிக்கும்மற்றநடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் முழு விவரம் விரைவில் வெளியாக உள்ளது.
கடந்த ஆண்டு பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரைசா, ஹரிஷ் கல்யாண் இணைந்து பியார் பிரேமா காதல் படத்தில் நடித்திருந்தனர். அந்தப் படம் இரசிகர்களிடையேநல்லவரவேற்பைப்பெற்றது. அதேபாணியில் மகத், ஐஸ்வர்யா களம் இறங்கி உள்ளனர்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 6 | | | 7 | 4 |
| | | | | | | 1 | | |
| 4 | | 6 | | | | | 9 | 3 |
| | | | | | 4 | | | |
| | 2 | 8 | 7 | | 5 | 3 | 4 | |
| | | | 8 | | | | | |
| 5 | 6 | | | | | 4 | | 8 |
| | | 3 | | | | | | |
| 9 | 4 | | | 1 | 8 | 5 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 4 | 2 | 8 | 5 | 3 | 9 | 6 |
| 6 | 3 | 5 | 1 | 9 | 4 | 7 | 2 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 3 | 4 | 1 | 5 |
| 8 | 7 | 3 | 9 | 2 | 1 | 5 | 6 | 4 |
| 1 | 4 | 9 | 8 | 5 | 6 | 2 | 7 | 3 |
| 5 | 2 | 6 | 4 | 3 | 7 | 1 | 8 | 9 |
| 3 | 5 | 2 | 6 | 7 | 8 | 9 | 4 | 1 |
| 9 | 6 | 1 | 5 | 4 | 2 | 8 | 3 | 7 |
| 4 | 8 | 7 | 3 | 1 | 9 | 6 | 5 | 2 |



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலர் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற தாமதம் செய்வர். புதிய முயற்சியை பின்னொரு அனுகூல நாளில் தொடங்கலாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் அதிக நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். முயற்சிக்குரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரம்செழித்துசமூகத்தில்கூடுதல்அந்தஸ்துபெறுவீர்கள்.

**மிதுனம்:** உறவினரின் பாசம் வியப்பைத் தரலாம். அவர்களை விமர்சனம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரம் சார்ந்த சிரமங்களை கவனமுடன் சரிசெய்வது நல்லது.

**கடகம்:** பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். பெறுகின்ற நன்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும்.

**சிங்கம்:** கூடுதல் வேலைப்பளு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூல நடைமுறையை பிறரிடம் சொல்லக்கூடாது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** சமூக அக்கறையுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து எதிர்கால வாழ்வில் நம்பிக்கை வளரும். உபரி வருமானம் கிடைக்கும். சொத்து, நகை வாங்குவர்.

**துலாம்:** வெகுகாலம் பின்பற்றிய நல்ல லட்சியத்திற்கு சிறப்பான பலன் கிடைக்கும். எவரிடமும் பண்பு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** தன்மானத்திற்கு சிறு சோதனை வரலாம். குடும்ப நன்மைக்காக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் முயற்சியும் உழைப்பும் அவசியம்.


**தனுசு:** சிறிய பணிகளுக்கும் அதிக முயற்சி தேவைப்படலாம். அனுபவசாலியின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில் வியாபாரத்தில் அவப்பெயர் வராமல் செயல்பட வேண்டும்.

**மகரம்:** நண்பரின் உதவியால் முக்கியமான செயல் நிறைவேறும். குடும்பத்தினரிடம் நற்பெயர் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பொறாமை குறையும்.

**கும்பம்:** அதிக மதிநுட்பத்துடன் நடந்து கொள்வீர்கள். செயல்களில் முழு அளவிலான கிடைக்கும். தொழில் வியாபாரம் செழித்து வளரும். உபரி வருமானம் வந்து சேரும்.

**மீனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றவும். அதிக முயற்சியினால் தொழில் வியாபாரத்தில் குளறுபடி சரியாகும். நிலுவைப் பணம் வசூலாகும்.

## உலகப் புகழ்பெற்ற இந்த ஒளிப் படத்தை எடுத்த கெவின் கார்ட்டர் உயிரை மாய்த்துக் கொண்டது ஏன்?

கெவின்கார்ட்டர்உலகப்புகழ்பெற்றஒளிப் படக்காரர். எல்லா சிறந்த ஒளிப்படக்காரர்களைப் போன்றே இவருக்கும் நல்ல ஒளிப்படங்களை எடுக்க வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் இருந்தன. இந்த ஆர்வம் அவரை நாடு, நகரம், கிராமம், காடு, மலை என்று கொண்டுசென்றது.
1993 ஆம் ஆண்டில் இந்த ஆர்வம் அவரைத் தனது சக ஒளிப்படப் பத்திரிகையாளர்களுடன் சூடானுக்குக் கொண்டுசென்றது. அப்போது சூடான் வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கித் தவித்துக் கொண்டு இருந்தது.
குறிப்பாகச் சூடானின் தென்பகுதி மக்கள் உணவின்றி, நீரின்றிப் பசி, தாகத்தில் தவித்துக் கொண்டிருந்தனர்.
பஞ்சத்தில் தவிக்கும் மக்களின் நிலைகளைக் கமராவில் பதிவு செய்ய கெவின் தொலைதூரக் கிராமங்கள் வரை சென்றார்.
இறுதியாக அவர் முயற்சி கைகூடியது. ஒரு நாள் தன் கமராவைத் தோளில் தொங்க விட்டுக் கொண்டு உள்ளத்தை உலுக்கக் கூடிய படத்துக்கான காட்சியைத் தேடியலைந்து கொண்டிருந்தபோது அப்படிப்பட்ட காட்சி தென்பட்டது.
பசிபஞ்சத்தால்அடிபட்ட நோஞ்சன் நிலையில் உள்ள ஒருசிறுமிநடக்கக்கூட இயலாத நிலையில், எலும்புக் கூடு போன்ற தன்னுடலைத் தவழ்ந்து இழுத்துக் கொண்டு மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வதைக் கண்டார்.
அந்தச் சிறுமி ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த உணவு வழங்கும் முகாமை நோக்கித் தள்ளாடியபடி தவழ்ந்து கொண்டிருந்தமை இதயத்தைப் பிழியக் கூடியதாக இருந்தது.
தோளில் இருந்து கமராவை இறக்கிக் கோணம் பார்த்த கெவினுக்கு இன்னொரு வியப்பும் காத்திருந்தது.
ஆம் அந்த எலும்பும் தோலுமான சிறுமிக்குப் பின்னாலேயே சிறிது தொலைவில் ஒரு பிணம் தின்னிக்கழுகும் சிறுமியின் மீது பார்வையை நிலை நிறுத்திக் கொண்டு இருந்தது.
எப்போது சிறுமியின் உடலை விட்டு உயிர் பிரியும் மீதியுள்ள அந்தத் தோலையும் அதைச் சுற்றி இருக்கும் மாமிசத்தையும் எப்போது சாப்பிடலாம் எனக் காத்திருந்தது கழுகு.
கெவின் கமரா வில்லையைக் கண்ணுக்கு ஒத்திக்கொண்டார் சிறுமியையும் கழுகையும் ஒரு சட்டத்துக்குள் அடக்கிக் கொண்டு 'க்ளிக்' செய்தார்.
இப்போது அவரது ஒளிப்படக்கருவியில் மிக அரிதினும் அரிதான படம் பதிவாகி விட்டது.
இதை விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் கமராவைத் தோளில் மாட்டிக் கொண்டு தனது வண்டியை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்.
இந்த அரிதான படத்தை 'நியூயோர்க்ரைம்ஸ்' பத்திரிக்கைக்கு விற்றுவிட்டார்.
இந்த ஒளிப்படம் 1993 மார்ச் திங்கள் 26 ஆம் நாள் காலை நாளிதழில் முதல் பக்கத்தில் வெளியானது. இந்தப் படத்தைப் பார்த்ததும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் பத்திரிக்கை அலுவலகத்தைத் தொலை பேசி மூலம் தொடர்புக் கொண்டனர்.
அனைவரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டனர். ஒளிப்படத்தில் உள்ள சிறுமி என்ன ஆனாள்? அவள் உயிருடன் பிழைத்தாளா அல்லது இறந்து விட்டாளா? இந்தக் கேள்விக்கான பதில் பத்திரிக்கையாளரிடமோ, படத்தை எடுத்த கெவின் கார்ட்டரிடமோ இல்லை.
1994, மே 23 அன்று பெரும் கைதட்டல்களுக்கு இடையே கெவின் கார்ட்டர் கொலம்பியப் பல்கலைக்கழகத்தின் பிரமாண்டமான அரங்கத்தில் இந்த அரிதான ஒளிப்படத்துக்கான 'புலிட்சர் விருதை'ப் பெற்றுக்கொண்டார் இந்த விருது ஒளிப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது.
விருது பெற்ற சில நாள்களுக்குப்பின் கெவின் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார்.
கெவினுக்கும் அங்கு இருந்த பிணம்தின்னிக்கழுகுக்கும் என்ன வேற்றுமை? இரண்டும் ஒரே விதமாகத்தான் செயல்பட்டுள்ளன.
'குறைந்தபட்சம் ஒளிப்பட நிபுணர் கெவின் அந்தச் சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் தந்து உயிரைக் காப்பாற்றி இருக்கலாம் அல்லது தனது வலுவான கைகளினால் அந்தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சேர்த்து இருக்கலாம்; கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம் ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு படத்தை எடுத்தார் அதை அதிக விலை தந்த பத்திரிக்கைக்கு விற்று விட்டார் என்று ஒருவர் அவர் மீது குற்றம் சாட்டியதுதான் காரணம்.
இரண்டு மாதங்களுக்குப் பின் கடற்கரைக்கு அருகில் அவரது கார் நின்று கொண்டிருந்தது. அதில் அவர் பிணமாகக் கிடந்தார்.
கெவின் உயிர் மாய்த்துக் கொண்டார்.
அவரது உலகத்துக்கு அருகில் காவல்துறைக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் சில வரிகளே இருந்தன.
முதல் வரி I am Really, Really Sorry...
நாம் எவராக இருந்தாலும்
சரி நம்மிடம் மனிதம் இல்லையெனில் நாமும் மிருகத்துக்கே ஒப்பாவோம்.

**படித்து மனம் வருந்திய பதிவு**



## வயோதிபரின் புத்திசாலித்தனம்

பண்ணைப்புரம் என்ற ஊரில் விசாகன் என்ற புத்திசாலிக் கிழவர் வசித்து வந்தார். ஒருமுறை அவரது மனைவி ஊருக்குச் சென்றிருந்தாள். கிழவர் மட்டும் அப்போது வீட்டில் இருந்தார். வெளியே செல்லும் போதெல்லாம் அவர் வீட்டைப் பூட்டி விட்டுச் செல்வது வழக்கம். ஒருமுறை அவர் வெளியே சென்றுவிட்டுத் திரும்பும் போது வீட்டுக்குள்ளிருந்து ஒரு திருடன் மூட்டையுடன் வெளியே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே கிழவர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது வீட்டில் ஒரு பொருள் கூட இல்லை.

கிழவர் வேகமாக வெளியே ஓடிவந்து திருடனைப் பின் தொடர்ந்தார். திருடன் தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்து தான் கொண்டு வந்த மூட்டையை அங்கு வைத்துவிட்டு வீட்டின் பின்புறம் சென்றான்.

வீட்டுக்குள் வந்த கிழவர் அங்கு பார்த்தபோது வீடு முழுவதும் அவருடைய பொருள்கள் நிறைந்திருக்கக் கண்டார். அந்தத் திருடன் ஒவ்வொரு நாளும் கிழவரின் வீட்டுக்கு வந்து அவருக்கே தெரியாமல் அவருடைய பொருள்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருடி வந்திருக்கிறான். உடனே கிழவர் அங்கிருந்த பாய் ஒன்றை எடுத்துப் போட்டு அதில் படுத்துக் கொண்டார். வீட்டின் பின்புறம் சென்ற திருடன் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். அங்கு கிழவர். படுத்திருப்பதைக் கண்டு. யார் நீ?" என்று கேட்டான் திருடன். "என்னைத் தெரியவில்லையா? நான்தான் விசாகன்" என்று கூறினார். "நீ விசாகனாக இருந்தாலென்ன யாராயிருந்தால் என்ன? என் வீட்டில் உனக்கு என்ன வேலை?" என்று திருடன் அதட்டினான். "உன் வீடா? என் வீட்டுக்குள் வந்து என்னையே மிரட்டுகிறாயா?" என்றார் கிழவர். "உனக்கென்ன பைத்தியமா? என்ன உளறுகிறாய்?" என்றான் திருடன். "இதோ பார் என் வீட்டிலிருந்து பொருள்களையெல்லாம் நீ இங்கே கொண்டு வந்து வைத்து விட்டாய். அப்படியானால் நான் புது வீட்டுக்குக் குடியேறி இருக்கிறேன் என்று தானே பொருள்? நானும் நீண்ட நாள்களாக வீடு மாற வேண்டும் என்று நினைத்திருந்தேன். வீடு நன்றாக இருக்கிறது. வாடகை எவ்வளவு?" என்றார் கிழவர்.

தான் கிழவனிடம் வசமாக மாட்டிக் கொண்டதை அறிந்த திருடன் தான் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் எடுத்துச் சென்று கிழவரின் வீட்டில் திரும்ப வைத்துவிட்டான்.

## வர்ணம் தீட்டுவோம்





## காக்கையார் கருத்தை விதைக்கிறார்

கறுப்பு வண்ணக் காக்கையாரே
கண்ணை உருட்டி கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்


ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகிறாய்
வண்ணம் கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே

தெருவைச் சுத்தம் செய்கிறாய்
நித்தம் தொண்டன் ஆகிறாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத்தாயும் நீயாவாய்

விட்டுக் கொடுக்கும் வாழ்வதை
விரைவில் எங்கு கற்றீரோ
கற்கும் சிறுவர் மனதிலே
கருத்தை விதைத்து உயர்ந்தீரே

## லெபனான்

1. மேற்கு ஆசியாவிலுள்ள மலைப் பாங்கான நாடு.
2. வடக்கு மற்றும் கிழக்கில் சிரியாவும், தெற்கில் இஸ்ரேலும் இதன் எல்லை நாடுகள்.
3. பெய்ரூட் இதன் தலைநகரம்.
4. 1943ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.
5. இந்தச் சிறிய நாட்டில் நூறுக்கும் மேற்பட்ட வங்கிகள் உள்ளன.
6. இந்த நாட்டின் பெயர் மிகப் பழமையானது. 4 ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பெயர் மாற்றப்படவே இல்லை.
7. பாலைவனமே இல்லாத ஒரே அரேபிய- ஆசிய நாடு.
8. இந்த நாட்டின் தேசியச் சின்னம் செடார் மரம்.
9. எலுமிச்சை, திராட்சை, தக்காளி, அப்பிள், உருளைக் கிழங்கு முக்கிய விளைபொருள்கள்.
10. பத்துப் பேருக்கு ஒரு மருத்துவர் இந்த நாட்டில் இருக்கிறார்.





## எங்கள் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்



நீங்கள் பல்கலைக்கழகம் சென்று படித்துள்ளீர்களா? அது எமது பாடசாலையை விடப் பன்மடங்கு பெரியது. படிக்கும் மாணவர்களும் எம்மைவிடப் பெரியவர்கள். பல்கலைக்கழகத்தின் தலைவரைத் துணைவேந்தர் என்று அழைப்பார்கள். பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் கற்பிப்பார்கள். நாம் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்கிறோம். பாடசாலைக் கல்வி முடிந்து பல்கலைக்கழகங்களில் கற்றுப் பட்டதாரிகளாகின்றோம். இவற்றுக்கு அத்திபாரம் இடுவது வீடுதான். வீடு முக்கியமானது. எங்கள் வீடும் ஒரு பல்கலைக்கழகம் போன்றதுதான். தாத்தா தான் அதன் வேந்தர். பாட்டின் வீட்டின் துணைவேந்தர். அப்பாவும் அம்மாவும் அதன் பேராசிரியர்கள். அண்ணா அதன் விரிவுரையாளர். நானும் தம்பியும் தங்கையும் மாணவர்களே. எங்கள் வீடு இளைஞர் நாடாளுமன்றமாகவும் விளங்கும்.


எங்கள் வீடு கல்லும் சீமெந்தும் கொண்டு கட்டப்பட்டதுதான். ஆனால் அதிலே கலை வடிவம் புதைந்துள்ளது. எங்கள் அப்பா உழைப்பின் உருவம். அம்மா முயற்சியின் பயன். தாத்தா. பாட்டி ஆசீர்வாதங்களின் இருப்பிடம். அவர்கள் யாவரும் சிந்திய வியர்வைத் துளிதான் எங்கள் வீடு. எங்கள் வீடு எம்மைப் பாதுகாக்கும் கோயிலாகும்.

எங்கள் வீட்டின் அமைப்பு அழகானது. விருந்தினர்களை வரவேற்பதற்கு மண்டபம் உண்டு. மூன்று படுக்கை அறைகளைக் கொண்டுள்ளது. சமைப்பதற்கு சமையல் அறை, சிறிய களஞ்சிய அறை உண்டு. உணவு உண்பதற்கு அழகான அறையுண்டு. குளியலறையோடு கழிவறையும் உண்டு. விருந்தினர் தங்க ஒரு தனியறையும் உண்டு. வீட்டைச் சுற்றி வீட்டுத் தோட்டம் வைத்துள்ளோம். வீட்டின் வாசல் கிழக்குப் பக்கமாக உள்ளது. இதனால் காலைச் சூரியக் கதிர்கள் வீட்டினுள் பிரவேசிக்கும். அது பார்க்க அற்புதமாக இருக்கும்.

நாங்கள் தினமும் வீட்டைச் சுற்றிச் சுத்தப்படுத்துவோம். அம்மா வீட்டை மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பர். வெள்ளி செவ்வாய் நாள்களில் சாம்பிராணிப் புகை கமகமக்கும். காலையில் வீட்டில் முற்றத்தில் அம்மாவும் தங்கையும் கோலமிடுவார்கள். தைத் திருநாள்களில் வீட்டின் முன்புறம் மேடையமைப்போம். கோலமிட்டுப் பொங்குவோம். கதவு நிலைகளில் மாவிலை தோரணம் கட்டுவோம்.

வீட்டின் முற்றத்தில் நிலாச்சோறு உண்போம். ஒரு மாதத்தில் ஒருமுறையேனும் இது நடக்கும். சனி, ஞாயிறு விடுமுறை நாள்களில் எங்கள் வீடு கலகலக்கும்.

நண்பர்கள் கூடி விளையாடி மகிழ்வோம். உறவினர்கள் வந்து விருந்துண்டு போவது மகிழ்ச்சியைத் தரும். வீடு சிறார்களை நற்பிரஜைகளாக அத்திபாரமிடும். கோயிலாகும். வீடு பல்கலைக்கழகமானால் நாடும் நடமாடும் பல்கலைகழகமன்றோ? வீட்டைப் பேணி நாட்டையும் பேணுவோம்.



# மாணவர்கள் பரீட்சையை சோதனையாக்காது சாதனையாக்குவதற்கு...

சி.நற்குணலிங்கம்

கல்வி தொடர்பாகச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச் சூழல் சமகாலத்தில் காணப்படுகின்றது. இந்த விடயத்தில் பெற்றோரும், ஆசிரியர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும். கற்கும் மாணவர்கள் எதிர்கொள்கின்ற பரீட்சையை சோதனையுாக்கி வேதனைகொள்ளாது, சாதனையாக்க கற்றலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். பரீட்சை என்பது மாணவர்கள் கொண்டுள்ள அறிவின் பெறுமானங்களைத் தீர்மானிப்பதாகும்.

**கற்றல் செயற்பாடுகளைத் திட்ட மிடுதல்**

பாட ரீதியில் உயர் அடைவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமது கற்றல் செயற்பாடுகளை வகுத்துக் கொள்ள வேண்டும். பரீட்சைக்கான நேர அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு கற்றலைச் சரியாகத் திட்டமிட வேண்டும். ஏற்கனவே படித்துவிட்ட பாடங்களின் குறிப்புக்களை பரீட்சைக்கால அட்டவணைப்படி வரிசைப் படுத்த வேண்டும். அதாவது கடைசியாக வரும் பாடங்களை முதலில் தொடங்கி பின்னோக்கிப் பாடப்பிரிவுகளைப் படிக்க வேண்டும். கற்றலானது ஈடுபாட்டுடனும், ஊக்கத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டும். கற்கும் நேரம் மிக நீண்டதாக அமையக் கூடாது. இடைவிட்ட கற்றல் சிறந்ததாகும். கற்பதற்கு என ஒதுக்கப்படும் நேரம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கடினமான பாடம், இலகுவான பாடம் என வகைப்படுத்தி அதற்கேற்ப நேர ஒதுக்கீட்டை அமைத்துக் கொள்ள வேண்டும். கட்டாயம் எல்லா அலகுகளும் ஆரம்பத்தில் படிக்கப்பட்டிருக்க வேண்டும். பரீட்சைக்கு முதல்நாள் இரவு 11 மணிக்கெல்லாம் தூங்கிவிட வேண்டும். ஆனால் காலை 5 மணிக்கு எழுந்து அன்றைய பாடத்தின் குறிப்புக்களைப் பார்வையிட வேண்டும். பரீட்சைக்கு முன்பு மாணவர்கள் மூலமாகவோ ,அல்லது வெளிநபர்கள் மூலமாகவோ வரும் எந்த வதந்திகளையும் நம்பக் கூடாது. அவை அலட்சியம் செய்யப்பட வேண்டியவையாகும். பொதுப்பரீட்சை என்பது வழக்கமான பரீட்சைகளில் ஒன்றுதான் என்ற எண்ணமே மனதில் இருக்க வேண்டும். இதில் தெளிவிருந்தால் பரீட்சை மீதான பயத்தில் பாதி அளவு இல்லாது போய்விடும். திருப்தியாகப் படித்துவிட்டுத் தன்னம்பிக்கையுடன் செல்லும்போதே மீதிப் பயமும் போய்விடும். எந்தக்காரணம் கொண்டும் பதட்டமடையக் கூடாது. பரீட்சை நடைபெறும் இடத்துக்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாகவே சென்றுவிட வேண்டும். ஒவ்வொரு நாளும் பரீட்சைக்கான நேர அட்டவணையைப் பார்வையிடப்பட வேண்டும். சில நாள்களில் காலையும், மாலையும் எனப் பாடங்கள் இருக்கும். இவற்றில் கூடிய கவனம் தேவை. பெற்றோரும் நேர அட்டவணைப் படி பிள்ளை செல்கின்றாரா என்பதில் கவனம் கொள்ள வேண்டும்.


**பரீட்சைக்கு முகங்கொடுத்தல்**

வினாப்பத்திரத்தை பெற்றவுடன் அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல் மேலதிக வினாக்களுக்கு விடையளிக்க நேரிடும். குறிப்பிட்ட நேரத்துக்குள் விடையளிக்க நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். விடை எழுதும் போது வினாக்களின் இலக்கங்கள், சுட்டெண் என்பவை இடப்பட்டுள்ளவை எனக் கவனிக்க வேண்டும். தேவையான அளவு , விடையளிப்பதற்கான பத்திரம் பெற்றுக் கொள்ள முடியும். எனவே வசதியாக விடையளிக்க முடியும். விடைகள் யாவும் எழுதப்பட்டு முடிவடைந்த பின்னர் 5 நிமிட நேரத்துள் விடைத்தாள்களைப் பக்க இலக்கங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்திக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். கட்டிய பின்னரும் தேவையாயின் விடையை எழுதிக் கொள்ளலாம்.

விடை எழுதுவதற்கு முன்னர் மாணவர்கள் கேள்விகளை ஒருமுறைக்கு இருமுறை நன்றாக வாசித்து வினாக்களின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். வேகம், விவேகம் அல்ல. வேகத்தில் வினாக்களைத் தவறாகப் புரிந்துகொள்ள நேரிடும். நிதானமாக அமைதியாக விடையளிக்க வேண்டும். பரீட்சை முடிவடைந்த பின் அதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளக் கூடாது. நான் எழுதிய விடைகள் சரியா என தமக்குள் அல்லது மற்றவர்களுடன் கலந்து ஆலோசிக்கக் கூடாது. பெற்றோரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். பரீட்சைக் காலங்களில் பரீட்சைக்குக் குந்தகம் ஏற்படாத உணவை பிள்ளைகளுக்கு வழங்குவதில் பெற்றோர் அக்கறையாக இருக்க வேண்டும். ஒரு பாடம் முடிவடைந்த பின் அடுத்த பரீட்சைக்கான ஆயத்தத்தில் ஈடுபட வேண்டும். எக்காரணம் கொண்டும் பெற்றோரின் தொந்தரவு இருக்கக் கூடாது. பரீட்சைக்கு போகும்போது பேனா, பென்சில், அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றை எடுத்துச் செல்கின்றாரா எனக் கவனிக்கலாம். கொண்டு செல்லக்கூடாத பொருள்கள் ஏதும் கொண்டு செல்லப்படுகிறதா என்பதையும் கவனிக்கலாம். பிள்ளையின் பரீட்சை முடிவு தொடர்பாக கூடிய எதிர்பார்ப்பைப் பெற்றோர் கொண்டிருக்காதிருத்தல் நல்லது. முடிவு வந்த பின் மேற்கொண்டு மேற்கொள்ள வேண்டிய முடிவை எடுக்கலாம். எவ்வாறாயினும் பிள்ளையின் வாழ்க்கையை முடிக்க நீங்கள் காரணமாக இருக்காதீர்கள்.

**முயச்சியே முதன்மையானது**

மாணவர்களுக்குத் தேவை பெறுபேறுகள் மட்டுமல்ல. கடுமையான உழைப்பும், முயற்சியுமே வாழ்க்கையில் வெற்றியைப் பெற்றுத் தரும். நீங்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் உங்களது வாழ்க்கையின் அத்திபாரப் புள்ளிகள் என்பதை மறந்துவிடாதீர்கள். எங்களது பெறுபேறு நீங்கள் விரும்பிய துறையை தெரிவு செய்து மேலும் கற்க வாய்ப்பளிக்கக் கூடியது.



வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். மாணவர்கள் சிறந்த முறையில் கற்றுப் பரீட்சையில் தேறுவார்களாயின் சோதனை அவர்களுக்கு வேதனையாக அமையாது சாதனையாக அமையும்.

எதிர்கால உலகு சிறப்பாக அமைய ஆரோக்கியமான, புத்தியுள்ள, ஆளுமையுள்ள, சமூகப் பற்றுள்ள சிறந்த தலைமைத்துவமுள்ள சமுதாயம் சமைக்கப்படும். பரீட்சையில் சாதனை படைப்பதற்குப் எமது ஆசிகள்.

## உதயத்து மன்னவனின் உயர் பணியை வாழ்த்துவனே.....

ஆங்கு ஆல் போல் நீ தளைத்து அறுகு நிலை வேரூன்றி
மூங்கிலது சுற்றமதாய் முறை புரிந்து தமிழ் காத்து-
ஓங்கும் உனது பணி உயர்ந்தோங்கும் உதயமதில்
தாங்கிப் படிப்பார் தயவு கொண்டாய் வாழியவே

நல்லூரில் கந்தன் நாடும் செல்வச்சந்நிதியான்
எல்லவரும் போற்றும் இறைவீரமாகாளி
சொல்லார் நயினை துணை உண்டு தாரணியில்
பல்லோரும் காணப் பணி சிறந்து வாழ்யவே

நம் சைவம் போற்றி நமது மொழி திறன் காத்து
எம்மவரின் சேவையிலே இணைந்து இனம் கதிர்காட்டி
உம் மனது எண்ணம் உண்மை நிலைநிறுத்தி
அம்மன் அருள் காட்டி நிற்கும் அஞ்சாமை வாழியவே

முப்பது மூன்றாண்டு முன்னணியில் முறைபோற்றி
இப்புவியோர் போற்ற இறை, துணிவு, நடுநிலமை

தப்பாது வாய்மை சத்தியமும் பயம் இன்றி
ஒப்பேதும் இல்லா உரத்துரைக்கும் உண்மையன் நீ
மண்ணில் தமிழ் வாழ மானம் தனிக் கொள்கை
எண்ணம் சிறக்க, எழும் கதிராய் எந்நாளும்
வண்ணம் பல காட்டி வருவாய் உதயத்தில்
கண்ணில் ஒளி ஊட்டு காவலனே வாழியவே

இதயத்து எழுந்த சில எழுதினேன் (பல உண்டு) எம் தமிழர்
தயவுண்டு தாரணியில் தடையின்றி நடைபோட்டு
பயமின்றிப் பணி செய்வாய் பார் விடியக் கீழ்த்திசையில்
உதயத்து மன்னவனின் உயர் பணியை வாழ்த்துவனே




- நெல்லியடி குடாநீரூரான்

# ஆறாம் ஆண்டின் நிறைவினிலே...



மண்ணில் 02 . 01 . 1941

விண்ணில் 05 . 12 . 2012

**அமரர் சின்னப்பா குணரத்தினம்**

(ஓய்வுநிலை உப தபால் அதிபர் - கனகராயன்குளம்)

திதி: அபரபக்க ஸப்தமி (29.11.2018)

மங்காத புன்சிரிப்பும் சங்கத் தமிழ்ப் புலமையும்
அழகு சேர்த்த வாழ்ந்த எங்கள் அப்பா...
நீங்காத நினைவுகளை நெஞ்சோடு தந்தீர்களே...
எங்கள் வாழ்வுக்கு என்றும் வழிகாட்டி நீங்களே அப்பா...

இல.695/2,
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
(ஸ்ரேசன் றோட், பளை)

(C 8523) (13.17)

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் உள்ள பசுமாடுகளை பராமரிப்பதற்கு அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை. ஆலயத்திற்கு நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

தலைவர்/ செயலாளர்.

## வீடு விற்பனைக்கு

அவசர பணத் தேவைக்காக நந்தாவில் லேனில் 4 1/4 பரப்பில் அமைந்துள்ள மேல் மாடியுடன் கூடிய வீடு பெறுமதியிலும் குறைந்த விலைக்கு
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 884 3551**

(CS2898) (11)

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிதம்பரப்பிள்ளை செல்வரெட்ணம்**

திதி :- சப்தமி

அன்னை மடியில்
11.11.1949

ஆண்டவன் அடியில்
17.11.2000

வருடங்கள் பதினெட்டு ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு மறையாது நீங்கள் இல்லாமல் எங்கள் வாழ்வு நீர்க்குமிழி ஆனதையா! நாள்தோறும் கண்ணீரில் மூழ்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!**

20A ஈச்சமோட்டை.
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

கண்ணீருடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மச்சான்.

# ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

**2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்.**



பனர் பிரிண்ட் (Banner). வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board). மக் பிரிண்ட். ரீ-சேட். புத்தகங்கள். கையேடு (Handbills). நோட்டீஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற். டிஜிற்றல் அச்சக வேலைகள் சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற. வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில். விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.








**021 492 7471,**
**021 492 7472**

esprintersjaffna@gmail.com

**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் வீரசிங்கம் அரியரட்ணம்**



அன்பின் பிறப்பிடமாய் அழகின் ஓவியமாய்
ஆசையின் இருப்பிடமாய் இரக்கத்தின் இமயமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் நீரிருந்தீர்
சகோதர பாசங்கொண்டவனாய்
நீயிருந்தாய் எம் அரியமே
உன் அன்பான வார்த்தையைக் கேட்டு
எழுநூற்றிமுப்பது நாள்கள் ஆனதடா
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கு சென்றாய் எம் அரியமே
தாங்கமுடியவில்லையடா உந்தன் இழப்பை
இனி எப்போது இவ்வுலகில் வந்துதிப்பாய்
எம் அரியமே உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
உன் பிரிவைத் தாங்க முடியாமல்
தவிக்கும் சகோதரர்கள்

பிறப்பு 11.09.1957

இறப்பு 29.11.2016

**வீரசிங்கம் குடும்பம்.** (AVA/429)(11,17)

மன்னார் வீதி, நெளுக்குளம், வவுனியா

## பெயர் மாற்றம்

செயநீதராசா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை ஜெயநீதராசா என மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் ஜெயநீதராசா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

## மணமகன் தேவை

1983 இல் பிறந்த நட்சத்திரம் ஆயிலியம், சூரிய செவ்வாய், 23 1/4 பாவம் உடைய மணமகளுக்கு மணமகன் தேவை.

**தொடர்பு - 077 483 4998**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் நல்ல நிலையில் உள்ள வீடு, வளவு கொண்ட நிலப்பரப்பு 03 குளி 5/8 விஸ்தீரணமான காணி உடன் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

077 446 2697, 077 186 9951

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அ. நீ லியனாடோ அடம்ஸ் அலோசியஸ்**

(ஏஞ்சல் சர்வதேசப்பாடசாலை - உயிரியல் பிரிவு மாணவன்)

பிறப்பு
27.06.2000

இறப்பு
29.11.2017



கள்ளமிலா உள்ளமொடு கலகலக்கும் சிரிப்பழகும்
கல்வியிலே வல்லவனாய் விளையாட்டில் வீரனுமாய்
நல்லவனாய் நம்மூவரில் வளர்ந்த நல்ல மூலிகை நீ
கொல்லும் கருத்தோடு குருத்தே உனைத் தொடர்ந்து
மெல்லவிதி வந்துன்னை மிதித்தழித்த மோசமென்ன
அல்லலுறு ஊர்கூடி அழவைத்த சோகமிதே


அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியிலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும் :
தாய், சகோதரன்,
உறவினர்கள்.

உதயசூரியன் வீதி,
உடுவில்.

(CS 21458) (14.17)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 15 . 11 . 1946

இறப்பு 28 . 11 . 2018

### சுந்தரம் ஆனந்தம்

*(ஓய்வு பெற்ற நில அளவு உதவியாளர்)*

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் ஆனந்தம் நேற்று (28.11.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் மனோன்மணி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் தியாகராஜா, மகேந்திரம், ராசேந்திரம் (ஜேர்மனி), தெய்வேந்திரம், ஜெகதீஸ்வரி, நகுலேஸ்வரி, லிங்கேஸ்வரி, ஜெயராஜா (ஜெயா - கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம், குஞ்சம்மா, தில்லைநாயகம், சீதேவி, வியலட்சுமி, ராசகுமாரி, சாந்தினி (ஜேர்மனி), ஜெகதலட்சுமி காலஞ்சென்ற கணேஷ் மற்றும் சிவலிங்கம், சிவலிங்கம், சாந்தி (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும் ரஞ்சிதா, தாரணி, தவநேசன் (நேசன் - பிரான்ஸ்), கோமதி(பிரான்ஸ்), பகீரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருச்செல்வராஜா, சர்வானந்தன், வாமினி (பிரான்ஸ்), இந்திரஜித்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கஜானா, கிசானா, சோபிதன் (பிரான்ஸ்), துஷிதா, விதுசனா, சாத்மிகா(பிரான்ஸ்), உவந்திகா(பிரான்ஸ்), சாய்றுயன்(பிரான்ஸ்), அனர்ஷா(பிரான்ஸ்), அத்விஷா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2018) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21460) (14,17)

**076 944 0721/ 077 897 1750/ 077 360 7067**



தவப்பேறு 27 . 08 . 1934

சிவப்பேறு 27 . 11 . 2018

### திருமதி பாக்கியம் குணரத்தினம்

*(தெல்லிப்பழை, மட்டுவில்)*

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை' வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் குணரத்தினம் 27.11.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அப்புக்குட்டி குணரத்தினத்தின் அன்பு மனைவியும் மட்டுவிலைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், பூரணம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - மாணிக்கம் தம்பதிகளின் ஆசை மருமகளும் வேல்சிவானந்தன் (ஓய்வு நிலை அதிபர், மகாஜனக் கல்லூரி), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் அருளானந்தம், காலஞ்சென்ற ரவிராணி(சுவிஸ்) மற்றும் செல்வநந்தன்(சுவிஸ்), உதயராணி (ஆஸ்திரேலியா), லலிதாராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்ததி(ஓய்வு நிலை விரிவுரையாளர் - விவசாயத் திணைக்களம்), அன்னலிங்கம், விஜயகுமாரி, பேரின்பராசா(சுவிஸ்), ஜெயவதனி (சுவிஸ்), இராமச்சந்திரன் (ஆஸ்திரேலியா), சத்தியபாலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் அகல்யா, அபிராமி, ஜிவிதன் - பிருந்தா, ஜினேஸ், துளஷா, தர்ஷிகா, பிரதீபா கோகுலன், அனுஷன், சுஜித்தா, சுகிர்தன், சாம்பவி, சஞ்சஜ், அர்ச்ஷன், கோகுல், ஆராதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தந்தை செல்வாபுரம் தெல்லிப்பழையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் 28.11.2018 புதன்கிழமை தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 29.11.2018 வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தெல்லிப்பழை கொத்தியால் மயானத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அப்புக்குட்டி குணரத்தினம்
(கணவர்)

(CS 21460) (14,17)

**077 834 2718/077 707 2893**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE

### Walk - IN INTERVIEW

Walk –in Interview for the post of Temporary Demonstrator will be held on 12.12.2018 at 2.30 p.m at the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

**Temporary Demonstrator
in
Nursing/Pharmacy/Medical Laboratory Sciences**

**Qualifications:-**
A Degree in the relevant subject.

**Note** - Candidates who are awaiting for the results of the final examinations are expected to attend the interview.

**SALARY SCALE** –Rs.33,100/=p.m (fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and **self-prepared applications.**

Registrar,
University of Jaffna.
26.11.2018

(nc. 8530) (13.17)

## யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

விண்ணப்பம் கோரல் - வெளிவாரி

### பதவி - கிராமிய வங்கி முகாமையாளர் 205/12

01. சம்பள அளவுத்திட்டம் :
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 13/2015 சுற்று நிருபத்திற்கமைய 205/12 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்
14,590 - 17,290
130 x10 - 140 x10
**இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.**

02. **வயதெல்லை :** 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

03. **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**
அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கி பிரிவு பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் கிராமிய வங்கி பிரிவு பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
**அல்லது**
ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரத்துடன் கிராமிய வங்கி பகுதி இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்
**விண்ணப்ப முடிவுத்திகதி: 15.12.2018**

04. **விண்ணப்பிக்கும் முறை:**
மேற்படி பதவிக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப் படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில். **"கிராமிய வங்கி முகாமையாளர் 205/12. பதவிக்கான விண்ணப்பம்"** எனக்குறிப்பிட்டு **"தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ -து). இல.127. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்."** என்னும் முகவரிக்கு 15.12.2018 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

(in.8535)

## மரண அறிவித்தல்

### கனகசபை பரமநாதன்

*(இளைப்பாறிய எழுதுவினைஞர்)*



நாரந்தனை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் இல.30 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை பரமநாதன்(இளைப்பாறிய எழுதுவினைஞர்) 27.11.2018 காலமாகி விட்டார்.

அன்னார் சகுந்தலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான வடிவுடையம்மா, சண்முகநாதன், இலங்கைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சர்வானந்தன்(UK), சாரதா(UK), சிவானந்தன்(UK), சுமித்திரா(கனடா) காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், விமலாதேவி மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2018) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.30, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
ப.சகுந்தலா (மனைவி)

(CS 21464) (14,17)

## மாவீரர்...

கண்ணாடிகளை அடித்து உடைத்து விட்டு சென்றுள்ளனர்.

பருத்தித்துறை சுப்பர்மடத் தில் பொதுமக்களால் மாவீரர்தின நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டது. இதையறிந்த பருத்தித் துறைப் பொலிஸார் அங்கு சென்று மக்களை விரட்டியடித்தனர். மாவீரர் தினத்துக்காகப் கட்டப்பட்டிருந்த கொடிகளை அறுத்தெறிந்து, பொருள்களை அடித்துடைத்து அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸார் அங்கிருந்து அகன்றதும், அருகிலுள்ள மாதர் சங்கத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டி மாவீரர் நாள் நினைவேந்தல் மிகவும் உணர்வெழுச்சியுடன் பெருமளவு மக்கள் பங்கேற்புடன் நடந்தது.

மாவீரர் நாளை ஒழுங்கமைத்தவர்களில் முக்கியமான ஒருவராகக் கூறப்படும் ஜெ.மயூரனின் வீட்டுக்கு நேற்று அதிகாலை 2 மணிக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள், வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடந்தபோது அவரது வீட்டில், அவரது தாயும் சகோதரனின் மகளும் மாத்திரமே இருந்துள்ளனர்.

வீட்டின் வெளியே போத்தலால் எறியும் சத்தமும் அதன்னைத் தொடர்ந்து, 'அடோய்... அடோய்' என்னும் சத்தம் கேட்டதாகவும், பயத்தினால் வீட்டில் இருந்தவர்கள் கதவைத் திறக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரையில், வீட்டின் வெளிப் பக்கமாக இருந்த அனைத்து கண்ணாடி யன்னல்களையும் உடைத்துவிட்டு, தாக்குதலாளிகள் வெளியேறியுள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவீரர்நாள் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டபோது இல்லாத கெடுபிடிகள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டிருந்தது. கொழும்பில் ஏற்பட்ட திடீர் ஆட்சி மாற்றத்தின் பின்னரே இந்த நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

(5,26,160)



The General Public is hereby informed that T.Sutharsan of Senguntha Veethy, Jaffna bearing NIC No. 820922522V is no longer in the employ/ Service of ASTP Tec Pvt,Ltd. He has no authority what soever to transact any business or to receive any goods or to act in any way for and on behalf of the company

The company shall/ will not in any way be responsible for his actions hence forth or for any transactions entered in to with him.

**Director, ASTP Tec PvtLtd.**

---

Dialog MEGA அதிஷ்டம்

சனிக்கிழமை இரவு 7.56 க்கு சக்தி TV ஊடாக

# வெற்றியாளர்கள்



ரூ. 10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர்
P.K.J.S. குமார - இரத்தினபுரி



S.D. அலவத்துகே
மருதானை



N. ஆனந்த சதிரசேனன்
சுள்ளிபுரம்



K.A.G.T. பிரசாதினி
காலி



M.M.A. நவ்பர்
கொட்டாஞ்சேனை

## இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 10,769,231/-

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- இரண்டு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- ஒரு கோடி வென்ற 19 வெற்றியாளர்கள்
- 20 இலட்சம் வென்ற 9 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 153 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 935 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

அதிகதிகமாக ரீலோட் செய்யுங்கள்
**#121#** டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

twitter.com/dialoglk facebook.com/dialog.lk

இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர் 2018

Dialog — எதிர்காலம் இன்றே.

an axiata company www.dialog.lk

---



DLB தனலக்ஷபதி CAR PLUS

சீட்டிழுப்பு இல: 86 | சீட்டிழுப்பு திகதி: 28.11.2018

| வெற்றி இலக்கங்கள் | | | ஆங்கில எழுத்து | அதிஷ்ட நாள் | ஒரு இலட்சம் | வழங்கப்பட்ட மொத்த பரிசு |
|---|---|---|---|---|---|---|
| 02 | 06 | 26 | L | வெள்ளி | 15 | 33, 39, 540/= |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அடுத்த சீட்டிழுப்பு 2018.12.05 ஆம் திகதி புதன்கிழமை. வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3115 | திகதி: 2018.11.28 | புதன்கிழமை | ஊதா

SATURDAY FORTUNE

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் |
|---|---|---|
| 13 33 37 52 C | 66 | 52,486,795/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



### அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 448
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.11.28

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,109,055/-

| வெற்றி இலக்கங்கள் | | | | ஆங்கில எழுத்து |
|---|---|---|---|---|
| 07 | 16 | 50 | 73 | U |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### லக்கின அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.11.2018 | 2408 | பச்சை |

துலாம் — வெற்றி இலக்கங்கள்: 02 11 25 41

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 35, 42, 008 /=

### சுப்பர் தன யோகம்

முச்சக்கர வண்டிகளை வென்ற விசேட இலக்கங்கள்



2765458
4874801
7260796

ஸ்கூட்டிகளை வென்ற விசேட இலக்கங்கள்



0517896
4439101
6226525

தங்கப்பவுண்களை வென்ற விசேட இலக்கம்



41725

2018.11.30ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

---

## கூறுவிலை கோரல்

01. யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான கட்டடத்தின் யன்னல்கள் முழுமையாகவும் பகுதியாகவும் மற்றும் பான் லைட் முழுமையாகவும் பகுதியாகவும் இணைக்கப்பட்ட விவரப்படியாக திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி வேலைகளுக் காக பொருத்தமான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

02. கட்டடத்தின் ஜன்னல்கள் மற்றும் பான் லைட் என்பனவற்றை அலுவலக நேரத்தில் பார்வையிட்டுக்கொள்ள முடியும். மேலும் இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மேற்படி கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான முடிவுதிகதி : 13.12.2018**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)**
**இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

# வீதி ஒழுங்கை மீறிய வாகனத்தை கண்டுகொள்ளாதநெல்லியடிபொலிஸார்

யாழ்ப்பாணம் நவ 29

நெல்லியடி நகரப்பகுதியில் போக்குவரத்துப் பொலிஸாரின் விதிமுறைகளை மீறி வணிக நடவடிக்கையில் ஈடுபட்ட தென்னிலங்கையை சேர்ந்த தனியார் நிறுவனத்தினர் மீது பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

நெல்லியடிநகர்ப்பகுதியில்வீதியின்இருபுறங்களும்எந்தெந்த நாட்களில் வாக்கங்களை தரிப்பிட முடியும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. அதற்கான அறிவுறுத்தல்களை பிரதேச சபை வழங்கியுள்ளது. அதன்படிகுறித்தவிதிமுறையைமீறுபவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எனினும் நேற்றையதினம் தென்னிலங்கையை சேர்ந்த முகப் பூச்சு நிறுவனம் நடமாடும் சேவை ஒன்றை நடாத்தியது. அந்த நடமாடும்சேவையை மேற்கொண்ட நிறுவனத்தின் கனரகவாகனம் வீதி ஒழுங்குக்கு மாறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அத்துடன்குறித்தநடமாடும்சேவையைமேற்கொள்ளபிரதேச சபையின் அனுமதியையும் அவர்கள் எடுத்திருக்கவில்லை. இந்நிலையில்இதுதொடர்பில்பொலிஸாருக்கும்பிரதேசசபையினருக்கும் அங்கிருந்தவர்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

நடமாடும் சேவை இடத்துக்கு வந்த பிரதேச சபையினர் உரிய அனுமதிஎடுக்காதுவியாபாரநடவடிக்கையில்ஈடுபட முடியாது எனஅறிவுறுத்தல்வழங்கியுள்ளனர். அதன்பின்னர்நடமாடும் சேவையில் ஈடுபடடவர்கள் பிரதேச சபையில் மதியம் அனுமதியைபெற்றுக்கொண்டுதொடர்ந்தும்நகரப்பகுதியில்வியாபார நடவடிக்கையில்ஈடுபட்டனர். எனினும்வீதிஒழுங்கைமீறியே அங்கு தொடர்ந்தும் நின்றனர். அவர்களுக்கு அண்மையில் பொலிஸார் கடமையில் இருந்த போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது வேடிக்கை பார்த்தாக குற்றம் சாட்டிய அப்பகுதியினர் எம்மை போன்றவர்கள் வீதி ஒழுங்கை மீறினால் உடனடியாக தண்டம் விதிக்கும் பொலிஸார் தென்னிலங்கை நிறுவனத்தினருக்கு மட்டும் பாரபட்ஷம் காட்டுவதாக விசனம் தெரிவித்தனர். (8-26)

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ கிருஷ்ண நாராயண குருக்கள்

*(கதிரேசன் கோவில் - ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவில் பிரதமகுரு)*



கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட சிவஸ்ரீ கிருஷ்ண நாராயணகுருக்கள் நேற்று (28.11.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

### சிவசுதன் தவக்குமரன்



மலர்வு 21.12.2000 உதிர்வு 28.11.2018

பன்னாலை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டியைப் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுதன் தவக்குமரன் நேற்று (28.11.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவசுதன் உதயகுமாரி தம்பதியரின் அன்புமகனும் தவப்பிரியாவின் (யா /மகாஜனக் கல்லூரி மாணவி) அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான விநாயக ரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ மகாஜனக்கல்லூரி), முருகையா, அன்னலட்சுமி மற்றும் மகாலக்சுமி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிளானை,**
**கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.**
**077 580 7741**

தகவல் :
**குடும்பத்தினர்.**

### திருமதி நல்லம்மா செல்வராசா

*(தெல்லிப்பழை)*



பிறப்பு 17.04.1950 இறப்பு 27.11.2018

தெல்லிப்பழை, பார்மணியம் வீதியைப் பிறப்பிடமாகவும் பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா செல்வராசா கடந்த (27.11.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா செல்வராசாவின் பாசமிகு அன்பு மனைவியும் செல்வாம்பிகை வேலாயுதம் (மகா வித்தியாலய ஆசிரியை, பருத்தித்துறை), சிறிஸ்கந்தா (பிரான்ஸ்), நிர்மலா, ஜெயந்தி (பிரான்ஸ்), சிறிநிவசன் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகநாதன், ஜெயமதி (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரிஷாங்கி, டினோஜிதன், திவ்யா, தீபிதன், றெனுஷன், பிரகதி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணார்பண்ணை, கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியதம்பிரான் வீதி.**
**வண்ணார்பண்ணை, கொக்குவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### மகிந்தவைப்...

யிட்டுள்ளது.

உள்நாட்டிலும், அனைத்துலக அளவிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, தொந்தரவு கொடுக்காமல், உடனடியாக தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு இந்தக் குழுவினர் வலியுறுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை, பதவியிலிருந்து விலகிக் கொள்ளும் எண்ணம் தனக்கு கிடையாது என்று, மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால், தன்னை பதவியில் இருந்து நீக்குமாறு அரச தலைவரிடம் கூறும்படியும் அவர் கூறியுள்ளார். தான் பதவியில் நீடிப்பதால், மைத்திரிபால சிறிசேனவையே நாட்டு மக்கள் விமர்சிப்பார்கள் என்றும் தன்னை விமர்சிக்க மாட்டார்கள் என்றும் அவர், தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது. (உ8)

### எலிக்...

தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

எலிக் காய்ச்சல் என்று அறிமுகப்படுத்தப்படும் லெற்றோ வைரஸ் மாணவனைத் தாக்கியிருக்கலாம் என்று மருத்துவமனை வட்டாரங்கள் உதயன் பத்திரிகையிடம் உறுதிப்படுத்தின. (உ8,105)

### ரூபாவின்...

கிழங்கை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. ரூபாவின் பெறுமதி சரிவினால் 224 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கே கொள்வனவு செய்யக் கூடியதாகவுள்ளது' என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த ஆண்டு 265 மெற்றிக் தொன் விதை உருளை கிழங்கு 50 வீத மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்ப ட்டிருந்தது.

கடந்த ஆண்டு உருளைக் கிழங்கு செய்கையில் ஈடுபட்டோருக்கு நான்கு பெட்டி விதை உருளை கிழங்கும், புதிதாக இந்தச் செய்கையில் ஈடுபடவுள்ளவர்களுக்கு 2 பெட்டி விதை உருளை கிழங்கும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

50 கிலோ விதை உருளைக் கிழங்குப் பெட்டி 14 ஆயிரம் ரூபாவாக ஆரம்பத்தில் காணப்பட்டது. இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி அதிகரித்தமையினால், தற்போது 16 ஆயிரத்து 200 ரூபாவாக விதை உருளைக் கிழங்குப் பெட்டியின் விலை அதிகரித்துள்ளது. 265 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்ட நிலையில் தற்போது 224 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கே இறக்குமதி செய்யப்படவுள்ளது.

உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு மூன்று பெட்டிகளும், புதிதாக செய்கை ஆரம்பிப்பவர்களுக்கு 2 பெட்டிகளும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கில் கடந்த ஆண்டு நோய்த்தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டமையினால், திட்டமிட்ட அளவை விட குறைந்த அளவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,7)

### பறிக்கப்பட்டது...

ளின் பதவி செல்லுபடியாகாது எனக் கருதப்படுவதால், ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்தும் கெஹலிய ரம்புக்வெல நீக்கப்படவுள் ளார் என்றும், மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத, இராஜாங்க அமைச்சரான ரம்புக்வெல, அமைச்சரவைப் பேச்சாளராக அறிவிக்கப்பட்டமை முன்னரே சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. (5)

### பொலிஸ்...

னேஸ்வரன்.

பதவிக் காலம் முடிந்ததை அடுத்து வடக்கு மாகாண முன்னாள் முதல்வரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் நீக்கப்பட்டனர். அவர்களைத் திரும்பத் தருமாறே அவர் வலியுறுத்தி வருகிறார்.

அரச தலைவருக்கு எழுதிய கடிதத்தினில் முன்னாள் முதல்வர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

வடமாகாண முதலமைச்சராக என்னுடைய பதவிக்காலம் முடிந்ததன் பின்னர் என்னுடைய பிரத்தியேக பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்கள் தொடர்ந்து எனக்கு பாதுகாப்பு வழங்கி வந்துள்ளனர்.

சில காலங்களுக்கு முன்னர் என்னுடைய உயிருக்கு ஆபத்து என்பது சம்பந்தமாக பொலிஸ்மா அதிபருக்கும் சிரேஸ்ட உப பொலிஸ்மா அதிபருக்கும் தெரிவித்திருந்தேன்.

அது சம்பந்தமான செய்திகளை எமக்கு வழங்கியவர் அம்பலாங்கொடையைச் சேர்ந்த டி சில்வா என்பவர். நீங்கள் யாழ்ப்பாணம் வந்த போது உங்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் இது பற்றித் தெரிவித்திருந்தேன். இதில் சந்தேகத்திற்குரியவராகக் கணிக்கப்பட்டவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா. எனக்கு ஏற்பட்ட உயிராபத்து சம்பந்தமாக பொலிஸ்மா அதிபரும் சிரேஸ்ட உப பொலிஸ்மா அதிபரும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்களுக்கு இது பற்றி எழுத்தில் தெரிவிக்குமாறு கோரியிருந்தார்கள். இது என்னால் செய்யப்பட்டது. குறித்த கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. என்னுடைய வாசஸ்தலத்திற்குரிய பாதுகாப்பு நீக்கப்பட்டபோதும் என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு இற்றைவரையில் தொடர்ந்து வந்துள்ளது.

இன்று காலை யாழ் பொலிஸ் தலைமையக மேற்பார்வையாளர் என்னுடைய பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்களை உடனே யாழ் பொலிஸ் நிலையத்தில் வந்து கையெழுத்திடுமாறு கோரியிருந்தார்.

நான் தற்போது கொழும்பில் என்னுடைய பாதுகாப்பு அலுவலர்களுடன் தங்கியிருக்கின்றேன். எனினும் இரு அலுவலர்கள் இன்று காலை யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

பொலிஸ்மா அதிபருக்கு அறிகையிடப்ப்ட்ட என்னுடைய உயிராபத்திற்கான காரணங்களை முன்வைத்து என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை அனுமதிக்குமாறு மேன்மை தங்கிய உங்களிடம் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். கிழக்கு மாகாண முன்னைய முதலமைச்ச ருக்குத் தற்போதும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக அறிகின்றேன்_ என்று எழுதிய கடிதத்தின் பிரதிகள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ,

பொலிஸ்மா அதிபர் சிரேஸ்ட உப பொலிஸ்மா அதிபர், வடமாகாணம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் முன்னாள் முதல்வர் முதல்வர் காலம் நிறைவடைந்த பின்பு தற்போது யாழில் வசிக்கும் இல்லத்தில் நின்ற பொலிசார் நேற்றுக் காலையிலேயே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் திரும்பிய நிலையில் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் திரும்புவேன் அப்போது என்னுடன் கொழும்பில் நிற்கும் பொலிசார் திரும்புவர் என யாழ்ப்பாணம் பொலிசாருக்கு தொலைபேசில் அறிவித்திருக்கிறார் முன்னாள் முதலமைச்சர். (உ-8,105)

## இது புதுசு

பெண்களுக்கானபுதியவடிவிலானகாலணிகள்அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.






# நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் கோவைக்காய்

கோவை இலையின் சாறுடன் வெண்ணெய் சேர்த்துப் பூசி வந்தால் சொறி, சிரங்கு, நாள்பட்ட புண் போன்றவை குணமாகும்.

கோவை சிறுநீர், வியர்வை ஆகியவற்றை மிகுதிப்படுத்தும் குணமுடையது. வாந்தியை உண்டாக்கும் தன்மையுடையது. மேலும் குருதிச் சர்க்கரையைக் குணப்படுத்த வல்லது.

கோவைக் கிழங்குச் சாறு 10 மி.லி. காலை மட்டும் குடித்து வர இரைப்பிருமல் (ஆஸ்துமா) இரைப்பு, கபரோகம், மார்புச்சளி, மதுமேகம், கண்டமாலை, வீக்கம் ஆகியவை தீரும்.

கோவைக்காயைத் துண்டு துண்டாக வெட்டி, வெயிலில் நன்கு காயவைத்துப் பொடிசெய்து ஒரு தேக்கரண்டி வீதம் மூன்று வேளை சாப்பிட்டால் குருதிச் சர்க்கரை நோய் குணமாகும்.

சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய கோவைக்காயுடன் மோர், மிளகுப்பொடி, சீரகப்பொடி, இஞ்சிசிறிதுசேர்த்துதேவையானஅளவுஉப்பு கலந்து விட்டால் அவ்வளவுதான் கோவைக்காய் பச்சடி தயார். இதனைவாரம்இரண்டுநாள்பகல்உணவில்சேர்த்தால்வாய்ப்புண் குணமாகும்.

நிறையப் பேர் கோவைக்காயை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுங்கி விடுகிறார்கள். நாக்கு சுவையை மட்டுமே கருதாமல் உடல் நலத்தையும்கருத்தில்எடுத்துக்கொண்டால்எல்லாஉணவுகளுமே விருப்பமுடையதாகும்.

பச்சையாகவேகோவைக்காயைமென்றுதுப்பிவிட்டாலேவாய்ப்புண் ஆறிடும். வயிற்றுப்புண் இருப்பவர்கள் வாரம் இரண்டு நாள் கோவைக்காயை சேர்த்துக்கலாம். கோவைக்காயை பீன்ஸ் போல பொரியல் செய்து சாப்பிட்டாலும் சுவையாக இருக்குமே.

ஒரேஒருகோவைக்காயைஎடுத்துமோருடன்அரவையில்அரைத்து குடித்தாலும் மேற்சொன்ன பலன்களை பெறலாம். முக்கியமாக முற்றின கோவைக்காய் வாங்ககூடாது.


# இளநரையை கட்டுப்படுத்தும் வழிகள்

இளமையிலேஇளநரைதோன்றுவதற்கான காரணங்கள் என்னவென்றால், தாதுப்பொருள்களும்அடங்கிய ஆரோக்கியமான சரிவிகித உணவை உட்கொள்ளாதது கூட, உடல்நலத்துக்குக் கேடு விளைவித்து, அதன் காரணமாக தலைமுடிக்கும் கேடு விளைவிக்கலாம். தலைமுடிப் பராமரிப்புப் பொருள்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால், தலைமுடி இளமையி



லேயே நரைக்கத் தொடங்கலாம். வண்ணச் சாயங்கள், ஷாம்பூ மற்றும் கண்டிஷனர்கள் ஆகியவற்றில் உள்ள ஹைட்ரஜன் பெராக்ஸைட் தலைமுடிக்குக் கேடு விளைவிக்கும்.

- வெந்தயம், வால்மிளகு, சீரகம் மூன்றையும் சம அளவு பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தேய்த்து வரவும்.
- மருதாணி, கறிவேப்பிலை, வேப்பிலை இவைமூன்றையும்பொடி செய்து எண்ணெயில் போட்டு உபயோகித்தால் நரைமுடி தடுக்கப்படுவதுடன் முடி கருமையாக வளரும்.
- மரிக்கொழுந்து,நிலஆவாரைஇரண்டையும்அரைத்துஅரைமணி நேரம் தலையில் ஊறவைத்து குளித்தால் செம்பட்டை மாறி முடி கறுப்பாகும்.
- ஆலிவ் ஆயில், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் சம அளவு கலந்து தடவலாம்.
- கறிவேப்பிலை, பீட்ரூட், பீன்ஸ், நாவல்பழம், வெல்லம், சுண்டைக்காய், முருங்கைக்கீரை, முட்டை, பேரீச்சம்பழம், செம்பருத்திப்பூ, திரிபலாசூரணம்இவற்றைஅடிக்கடிஉணவில்சேர்த்துக்கொள்ளவும்.





# சத்து நிறைந்த உளுந்துக் களி

**தேவையான பொருள்கள்**

அரிசி : 1கப்
உளுந்து : அரை கப்
சுக்கு தூள் : 1கரண்டி
தேங்காய் : துருவல் கால் கப்
கருப்பட்டி : அரை கப்

**செய்முறை :**

அரிசி, உளுந்து இரண்டையும்தண்ணீரில் ஊறவைத்து அதனுடன் சுக்கு தூளை சேர்த்து அரைத்துகொள்ளவும்.
அகன்றபாத்திரத்தில்3கப்தண்ணீர்ஊற்றிகொதிக்கஆரம்பித்தவுடன் அதில்கருப்பட்டியைகொட்டிநன்றாககருப்பட்டிகரைந்ததும்வடிகட்டி மீண்டும் அடுப்பில் வைத்து பாகு காய்ச்சி கொள்ளவும்.
அதனுடன் அரைத்த மாவு கலவையை கொட்டி கிளறி விடவும்.
களி பதத்துக்கு வெந்ததும் தேங்காய் துருவலை தூவி இறக்கி ஆறவைத்து சுவைக்கலாம். சுவையான உளுந்து களி ரெடி.



# ஞாபகமறதியைப் போக்கும் ஹாக்கினி முத்திரை

வலது மூளை இடது மூளை இரண்டையும் தூண்டிவிட்டு, ஒரேநேரத்தில்அவற்றைஇணைந்துஇயங்க வைக்கும்ஒருஎளியதந்திரயோகவழியேஹாக்கினி முத்திரையாகும். இதன் மூலம் நினைவு திறன் அதிகரிக்கும். இந்தமுத்திரைஞாபகமறதியைப்போக்கப் பயன்படும். மறந்துபோனவிஷயத்தைத்திரும்பவும் ஞாபகப்படுத்திப் பார்க்கவும் பயன்படுத்தலாம்.

**செய்முறை :**

இடதுகை வலதுகை விரல்கள் ஒன்றை ஒன்று தொடாமல் நேராக நீட்டி அவைகளின் நுனிகளை ஒன்றைஒன்றுதொட்டுக்கொண்டிருக்கவேண்டும். விரிப்பில் அமர்ந்துகொண்டோ அல்லது நாற்காலியில் அமர்ந்து கொண்டோ இந்த முத்திரையைச் செய்யலாம்.
முதுகும் கழுத்தும் வளைவின்றி நேராக இருக்க வேண்டும். இரண்டு கைகளின் விரல் நுனிகளும் மறு கை விரல்களின் ஒத்த விரல்களை (படத்திலுள்ளபடி) தொட்டபடி இருக்கும்படி செய்ய வேண்டும் அழுத்தக்கூடாது. சுவாசம் இயல்பாகவும் சீராகவும் இருக்க வேண்டும். முழுக் கவனமும் செய்யும் முத்திரையின் மீது குவிந்திருக்கவேண்டும். நேரம் கிடைக்கும்போதெல்லாம் இந்தமுத்திரையைசெய்யலாம். மாணவர்கள் தினசரி நான்கு முறை (காலை, மதியம், மாலை, இரவு) 10-15 நிமிடம் வரையில் செய்யலாம்

**பயன்கள்**

இந்த ஹாக்கினி முத்திரையைச் செய்வதன் மூலம் பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்களை நினைவுக்குகொண்டுவரமுடியும்.நினைவுத்திறனை மேம்படுத்தப்பயிற்சிதரும் அமைப்புகள் இந்த முத்திரையை பயன்படுத்துகிறார்கள்.
இந்த முத்திரையைச் செய்துவிட்டு படிக்கத் துவங்கினால், படித்தவை அப்படியே மனதில் தங்கும். எளிதில் புரியும். மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் போது ஒரு கேள்விக்கான பதில் மறந்து போனால், உடனே இந்த முத்திரையைச் செய்தால் அது நினைவுக்கு வந்துவிடும்.

# அதிகரித்த இரசாயனப் பாவனையும் அழிக்கப்படும் விவசாய நிலங்களும்

ச.ஜெயமதி



பல்வேறு விதமான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகவும், இயற்கை இடர்கள் காரணமாகவும், இந்த நாட்டு விவசாய உற்பத்திகளும், விவசாய நிலங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் அனைத்து விவசாய உற்பத்திப் பொருள்களையும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. இதனால், இந்த நாட்டின் அந்நியச் செலவாணி அதிகரித்துப் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படுகின்றது.

இன்று இந்த நாட்டில் பெரும்பாலான விவசாய நிலங்கள் கட்டட மயமாக்கப்பட்டுள்ளதுடன் வேறு சில தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள சிறியளவான விவசாய நிலப்பரப்புக்கள்கூட இரசாயன உரங்களின் பாவனையால் விவசாய நடவடிக்கைகளுக்கு ஒவ்வாதவையாக மாற்றப்பட்டு வருகின்றன. சேதன விவசாயப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணுமளவுக்குக்கூட இன்றைக்கு இல்லை. அந்த அளவுக்கு எங்கும் இரசாயன விவசாயமே வியாபித்திருக்கின்றது.

### இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொண்ட உற்பத்தி முறை

விவசாயத்தின் மூலம் மக்களுக்கு உணவை வழங்குகின்றோம் என்ற எண்ணக் கருவை இன்றைய விவசாயிகள் மறந்து தமது இலாபத்தை மட்டுமே மனதில் நிறுத்துகின்றனர். இந்த இரசாயனங்களின் மூலம் விவசாய நிலம் மட்டுமல்லாது விவசாய உற்பத்திகளும், அதை நுகருகின்ற மக்களின் உயிர் வாழும் காலப்பகுதியும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுப் பாதிப்படைகின்றன. இன்று நாட்டு மக்களின் வறுமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குத் திட்டங்களை வகுத்து வீடுகளை அமைத்துக் கொடுத்து அந்த மக்களின் வாழ்வில் ஒளிவீசச் செய்திருப்பதைப்போல இந்த நாட்டு விவசாய முறையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு நஞ்சற்ற உற்பத்திகளை உருவாக்குகின்ற விவசாயத் திட்டங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.



### சேதன முறை ஊக்கப்படுத்தப்பட வேண்டும்

சேதன விவசாயத்தில் உற்பத்திச் செலவு குறைவாகவே இருக்கின்றது. விளைச்சல் ஆரோக்கியமானதாக இருப்பதுடன் அளவான இலாபமும் கிடைக்கவே செய்கிறது. இதனால், நஞ்சற்ற உற்பத்தி கிடைப்பதுடன் மற்றவர்களுக்குக் கெடு விளைவிக்காத உணவை உற்பத்தி செய்த மனத் திருப்தியும் கிடைக்கிறது. இதன் மூலம் நோயற்ற எதிர்காலம் ஒன்றை அனைவருக்கும் உருவாக்க முடியும். இந்த நல்லெண்ணம் அனைத்து விவசாயிகளின் மனதிலும் நிலைத்திருக்க வேண்டும்.

### மண் வாழ் உயிரினங்களின் அழிவு

இன்றைய அதிகரித்த இரசாயனப் பாவனையால், கோடிக்கணக்கான மண்ணங்கிகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாட்டால், மண் வளமற்றுப் போவதுடன், எதிர் காலத்தில் இந்த மண்ணில் ஒரு மண் வாழ் உயிரினமும் இல்லாத நிலையும் ஏற்படலாம். இந்த நாடு தன்னுடைய விவசாய நடவடிக்கைகளில் உடனடியாகப் பெரிய மாற்றங்களைச் செய்ய வேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

அது இரசாயனமற்ற விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதாக அமைய வேண்டும். இந்த நாட்டின் எதிர்கால உற்பத்திகள் உலக நாடுகளில் பேசு பொருளாக இருக்க வேண்டும். ஆசியாவின் நெற்களஞ்சியம் என்று புகழப்பட்டதைப்போல இரசாயனமற்ற ஆரோக்கிய உணவைத் தயாரிக்கின்ற ஒரே ஒரு நாடு என்ற புகழையும் இலங்கை தனதாக்க வேண்டும்.

# பஞ்சம் போக்கும் பனைகளை இனியாவது பாதுகாத்திடுவோம்



பனை நமது தேசத்தின் பெரும் வளம் குறிப்பாகத் தமிழர்களின் அடையாளமாகப் பனை மரம் வர்ணிக்கப்படுகின்றது. வடமாகாணத்தில் எல்லா வளத்தையும் விடப் பனை வளம் சிறந்து விளங்குகின்றது. நமது வாழ்க்கையின் பயன்பாட்டுக்குப் பனை தேவையானபலபொருள்களைத்தரக்கூடியது. பனையில் இருந்து நூற்றுக்கணக்கான உணவுமற்றும்உணவுசாராப்பொருள்களை உற்பத்திசெய்யமுடியும். இதனால்தான்பனையினைக்'கற்பகதரு, பஞ்சம் போக்கி மற்றும் கற்பகம் என்றெல்லாம் எம்மவர்கள் வர்ணித்தார்கள், வர்ணிக்கின்றார்கள். ஆனால், எமது முன்னோர்கள் தமது அன்றாட வாழ்க்கையிலும், சமூகத்திலும் பனைக்குக் கொடுத்திருந்த மதிப்பை இன்று நாமும் கொடுக்கின்றோமா என்றால்இல்லையென்பதேஅனைவரினதும் ஏகோபித்த பதிலாக அமையும்.

உணவுமுதல்பல்வேறுபட்டபயன்பாடுகளுக்கு அன்று பனை முதன்மை இடத்தைப் பிடித்திருந்தது. இன்றுஉணவைத்தவிர்த்துஏனைய விடயங்களில்பனையைப்பிளாஸ்ரிக்பிரதியீடு செய்துவிட்டது.

உலகஅளவில்140மில்லியன்பனைமரங்கள் இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அவற்றில்இலங்கையில்11.1மில்லியன்பனை மரங்கள்இருப்பதாகக்கண்டறியப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில்0.6மில்லியன்களும் ஏனைய மாவட்டங்களில் மிகுதியான பனை மரங்களும் பரந்து காணப்படுகின்றன.

போர்க்காலத்தில் நாம் இழந்த ஏகப்பட்ட அடையாளங்களில், எமக்குப் பலதையும் தந்த பனைகளும் உள்ளடங்குகின்றன. இலட்சக்கணக்கான பனை மரங்கள் தலை வெட்டப்பட்ட முண்டங்களாகப் போரின் எச்சங்களை இன்றும் பிரதிபலித்து நிற்கின்றன. தற்போதும் கூடச் சட்டவிரோதமாகப் பல்லாயிரம் பனை மரங்கள் தறிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அவ்வாறு வெட்டப்படும் பனைகள் வெறும் மரங்களாகப் பலருக்குத் தோன்றலாம். ஆனால் அது பலரின் வாழ்வாதாரம் என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். இதைக்கருத்தில்கொண்டுபனைகளின்இனஅழிப்பை உடனடியாகதடைசெய்யவேண்டும். பனைவளத்தை அதிகரிக்கச்செய்யவேண்டும்.

பனைகளைவெட்டாதவர்கள் அதைப்பாதுகாத்து விட்டார்கள் என்று அர்த்தமில்லை. எமது அன்றாட வாழ்க்கையில் பிளாஸ்ரிக்குக்கு நாம் அதி உச்ச இடத்தைக் கொடுத்துள்ளோம். பிளாஸ்ரிக்இல்லாமல்நாமில்லை என்றவாகாகஎமதுவாழ்க்கைசென்றுகொண்டுள்ளது. உடை, அலங்காரம், ஆபரணம் என எங்கும் பிளாஸ்ரிக், எதிலும் பிளாஸ்ரிக். பனையைப் பின்தள்ளிப் பிரதியீடு செய்த பியாஸ்ரிக்கை நாம் முழுவதுமாகப் புறக்கணிக்க வேண்டும்.

மீண்டும் பனைக்கு முக்கிய இடத்தை வழங்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 469 பெண் தலைமைத்துவக்குடும்பங்கள்பனையைநம்பிவாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றன.

நாம்வேண்டும்ஒவ்வொருபிளாஸ்ரிக்பொருள்களும் எமது உறவுகள், சொந்தங்களின் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும்எம்மையும்காரணமாக்குகின்றனஎன்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

## நாடாளுமன்றில்...

நாடாளுமன்றம் இன்று காலை 10.30 மணிக்கு கூடவுள்ளது.

தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கு நிதி வழங்குவதை தடுக்கக்கோரும் தீர்மானத்தை ஐக்கிய தேசிய முன்னணியை சேர்ந்த நவீன் திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க, நாலக்க பிரசாத் கொலன்னே, கவிந்த கேசான் ஜெயவர்த்தன, ஹெக்டர் அப்புகாமி, சதுர சந்தீப சேனாரத்ன ஆகியோர் சபாநாயகருக்கு முன்வைத்திருந்தனர்.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இந்தத் தீர்மானம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் ஐக்கிய தேசிய முன்னணி தனது பெரும்பான்மையை நிரூபித்தால், அதனை ஏற்றுக்கொள்வேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இன்றைய மிக முக்கியமான நாடாளுமன்ற அமர்வில் மகிந்த அணியினர் பங்கேற்பனரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இன்றைய அமர்வில் பங்கேற்க மாட்டோம் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ள நிலையில், அமைச்சரவைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர இது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றும் இன்று காலை நடைபெறும் கட்சிக் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். (5)

## அட்மிரல்...

கொடுத்து, வெளி நாட்டுக்குத் தப்பிச் செல்ல உதவினார் என்றும், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு, கோட்டை நீதிவான் இரண்டு தடவைகள் உத்தரவிட்டிருந்த போதும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதனைத் தடுத்து வந்தார்.

நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைக்காக அழைத்த போதும், அவர் தனக்கு அதிகார பூர்வ அழைப்பாணை கிடைக்கவில்லை என்று கூறி, தட்டிக் கழித்திருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை அவர் சரணடைந்தார். சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் சரணடைந்த அவரிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் விண்ணப்பம் செய்தனர். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்று, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைத்துச் செல்ல அனுமதியளித்தது. விசாரணைகளை அடுத்து, பிற்பகல் 2.30 மணியளவில், சிவில் உடையில் நீதிமன்றத்துக்கு வருமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவிடம் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் அவர் மீளவும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரைப் பிணையில் விடுவிக்க சட்டத்தரணிகள் விண்ணப்பம் செய்தனர்.

கொழும்பில் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் இரண்டாவது சந்தேகநபராக இணைக்கப்பட்டுள்ள அவரைப் பிணையில் விடுவிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆட்சேபனை தெரிவித்தனர். பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுண வர்த்தன சார்பான பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் ரங்கன தசாநாயக்க, சந்தேகநபரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். சந்தேகநபரைப் பிணையில் விடுவித்தால் விசாரணைகள் தடைப்படும் என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

**பின்னணி**

தமிழ் மாணவர்கள் உள்பட 11பேர் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேக நபரான நேவி சம்பத் எனப்படும், கடற்படை அதிகாரியை வெளிநாட்டுக்குத் தப்பிக்க உதவினார் என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

கடத்தல் வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேக நபரான கடற்படை புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் எனப்படும், லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கொழும்பில், கடற்படை நலன்புரி பிரிவின் பணியாற்றிய வந்த போது, 2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் தலைமறைவாகியிருந்தார். பின்னர் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேவி சம்பத் தப்பிச் செல்வதற்கு, கடற்படைத் தளபதியாக இருந்த தற்போதைய கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உதவினார் என்று, குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றுக்கு அறிவித்தது. கடற் படையின் கணக்கிலிருந்த 5 இலட்சம் ரூபா பணத்தையும் கொடுத்து, நேவி சம்பத் அதிவேக தாக்குதல் படகு ஒன்றின் மூலம் நாட்டை விட்டுத் தப்பிக்க அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உதவினார் என்றும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணைகளை முன்னெடுத்த நிசாந்த சில்வா, மகிந்த அரசு பதவியேற்ற பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து திடீரென இடமாற்றப்பட்டிருந்தார். இதற்கு கடும் எதிர்ப்புக்கள் எழுந்ததையடுத்து அவரது இடமாற்றம் நிறுத்தப்பட்டது. (5)

## இடைக்கால...

கணக்கறிக்கைக்கு கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கும், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில், தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச இடைக்கால கணக்கு அறிக்கையை நேற்று (நேற்றுமுன்தினம்) அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். அதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

அதன்பிரகாரம், 2019ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு அரசின் பொதுச் சேவைகளை முன்னெடுப்பதற்காக ஆயிரத்து 735 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட வேண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

நாடாளுமன்றத்தில் இடைக்கால கணக்கறிக்கை தோற்கடிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. இதேவேளை இடைக்கால அறிக்கை தோற்கடிக்கப்பட்டாலும், அரசு கவிழாது என்று அமைச்சர் தயாசிறி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.10)

## மைத்திரியின்...

என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில், மைத்திரிபால சிறிசேன தலைமை அமைச்சராக மகிந்தவை நியமித்தமைக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அரச தலைவர் ஊடகப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஓசல ஹேரத் மற்றும் தம்பர அமில தேரர் ஆகியோர் வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். ஓசல ஹேரத் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதிகளாக சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்வை தலைமை அமைச்சராக நியமிக்க அரச தலைவர் எடுத்த தீர்மானம் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு முரணானது என்று கூறப்பட்டுள்ளது. அரச தலைவரின் அரசமைப்புக்கு முரணான இந்தச் செயற்பாடு தமது அடிப்படைய உரிமையை மீறுகின்றது என்று மனுவில் எடுத்துரைத்துள்ளார்.

தம்பர அமில தேரர் நேற்றுத் தாக்கல் செய்த வழக்கில், பிரதிவாதிகளாக முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட 53 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமிக்க அரச தலைவர் எடுத்த தீர்மானம் 19வது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிரானது என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரச தலைவரின் இந்தச் செயற்பாடு தமது அடிப்படைய உரிமையை மீறி இருப்பதாக உத்தரவிடுமாறு மனுதாரர் நீதிமன்றத்தில் கோரியுள்ளார். (5)

## அரச...

வைத்திருந்ததாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே ரணில் விக்கிரமசிங்க மைத்திரிக்கு கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார். இதன் மூலம் இவரின் அதிகாரத்தை கைப்பற்றும் சூழ்ச்சி எல்லோருக்கும் தெரியவந்தது.

அதாவது மைத்திரியைக் கைப்பொம்மையாக வைத்துக்கொண்டு அனைத்து அதிகாரங்களை தனக்கு கீழ் கொண்டுவர ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்தார். தனக்கேற்றவாறு அரசமைப்புக்களை மாற்றுதில் ரணில் விக்கிரமசிங்க கைதேர்ந்தவர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க செயற்பாடுகள் தொடர்பில் எதுவும் தெரியாது. அவருடன் 14 வருடங்கள் அரசியல் செய்த எனக்கு அவரின் செயற்பாடுகள் தொடர்பில் நன்கு அறிந்துவைத்துள்ளேன் - என்றார். (5)

## தடைகளை...

இது எமக்குத் திருப்பதியை மன நிறைவை அளிக்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாவீரர் நினைவு தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசு அனுமதி வழங்கவில்லை என்று போலி அரசான மகிந்த அரசின் தகவல் திணைக்களம் மிரட்டல் அறிக்கை விட்டிருந்தது. வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து மக்களை அச்சுறுத்தும் வகையில் கடந்த சில தினங்களாகச் செயற்பட்டனர். மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடைகளை ஏற்படுத்தும் வகையில் அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

மிரட்டல்கள் நெருக்குதல்கள் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் தடைகளைத் தகர்த்தெறிந்து மாவீரர்களை வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தாயக மக்கள் பகிரங்கமாக துயிலும் இல்லங்களில் நினைவுகூர்ந்துள்ளார்கள். இது எமக்குத் திருப்பதியை மன நிறைவை அளிக்கின்றது.

வடக்கு, கிழக்கு மக்களின் இந்தத் துணிகரத்தை நான் வரவேற்கின்றேன். நாடாளுமன்ற அமர்வில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்ற காரணத்தினால் எமது மக்கள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்த மாவீரர் நாள் நிகழ்வில் நான் நேரில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இதற்கு வருத்தம் தெரிவிக்கின்றேன். எனினும், நான் தனிப்பட்ட முறையில் மாவீரர்களை கொழும்பில் நினைவுகூர்ந்துள்ளேன்- என்றார். (5)

## மிரட்டி...

குடும்பப் பெண்ணை அச்சுறுத்தியுள்ளனர். அவர் அணிந்திருந்த தங்க நகையை குற்றவாளிகள் அபகரித்துச் சென்றுள்ளனர். அவர்களின் இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று நீதிவான் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு லீசிங்கில் பெறப்பட்ட வாகனத்தின் தவணைக் கட்டணத்தை அறவிடச் சென்றனர். அப்போது வீட்டில் குடும்பத் தலைவர் வெளியில் சென்றிருக்கின்றார் என்று அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குடும்பப் பெண்ணை அச்சுறுத்தி அவரது தங்கச் சங்கிலியையும் வந்தவர்கள் அறுத்துச் சென்றனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். பின்னர் சந்தேகநபர்கள் இருவரும் பிணை வழங்கப்பட்டது.

அவர்களுக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. குடும்பப் பெண்ணை அச்சுறுத்திய குற்றத்துக்கு எதிரிகள் இருவரும் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் சதீஸ்கரன், தங்க நகையை அபகரித்துச் சென்ற குற்றத்துக்காக இருவருக்கும் தலா ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (உ-8,37)

## இலங்கை...

பாளர் மரி யமசிட்டா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இர.சம்பந்தனுடன் அவசர சந்திப்பு நடத்தியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து தடாலடியாக நீக்கி மகிந்த ராஜபக்சவை நியமித்தார். இதன் பின்னர் நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலமை உருவாகியுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் வெளியிட்டமை, தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டு தடவைகள் நிறைவேற்றப்பட்டும் அரச தலைவர் ஏற்றுக் கொள்ளாமை ஆகியவற்றால் பன்னாட்டுச் சமூகம் இலங்கை விடயத்தில் அதிருப்தியடைந்துள்ளது.

இந்த நிலையில் ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ், அரச தலைவருடன் அலைபேசியில் பேச்சு நடத்தியிருந்தார். அதன் பின்னரும் இலங்கை அரசியல் நிலமை சீரடையவில்லை. இவ்வாறானதொரு நிலையில், ஐ.நா. பொதுச் செயலர், தனது நேரடிப் பிரதிநியாக மரி யமசிட்டாவை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அவர் இலங்கை வந்திறங்கியதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் பேச்சு நடந்தியுள்ளார். இந்தப் பேச்சில் பேசப்பட்ட விடயங்கள் வெளிவரவில்லை. (5)

## ஊடகவியலாளரை...

னவை ஒளிப்படம் பிடிக்க ஊடகவியலாளர் ஒருவர் பாதுகாப்பு அதிகாரியினால் நேற்றுத் தாக்கப்பட்டார். கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நீதிமன்றத்தில் கடற்படைச் சீருடையில் நேற்றுச் சரணடைந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, பிற்பகல் 2.30 மணியளவில் சாதாரண சிவில் உடையில் நீதிமன்றத்துக்கு வருமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதையடுத்து, பிற்பகல் 2.15 மணியளவில், நீதிமன்றத்துக்கு வெளியே வந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுக்க முற்பட்டனர்.

இதன்போது, அங்கு சிவில் உடையில் வந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர், ஊடகவியலாளர்களைத் தள்ளி விட்டார். சண்டே மோர்னிங், இதழின் ஊடகவியலாளர் இந்திக ஹன்டுவாலாவின் மார்பில் குத்தி தாக்குதல் நடத்தினார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.


இதையடுத்து, தாக்குதல் நடத்திய பாதுகாப்பு அதிகாரியை, அங்கிருந்த பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்துக்குள் கொண்டு சென்றனர். (5)

## சனி, ஞாயிறு தினங்களில் மஞ்சிக் கிண்ண கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தத் திட்டமிட்ட மஞ்சிக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் றுவன்வெல இராஜசிங்கம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மாவட்ட நிலைப் போட்டிகளில் முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் இந்தத் தொடரில் விளையாடவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மயிலிட்டி இராணுவ அணியும் மோதவுள்ளன. பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் உரும்பிராய் சைவத்தமிழ் மகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ம-23)



## நியூசிலாந்துக்குப் பதிலடி பாகிஸ்தான் கொடுத்தது

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது பாகிஸ்தான் அணி.

நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் கடந்த 24ஆம் திகதி ஆரம்பித்து நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 5 இலக்குகளை இழந்து 418 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சொகைல் 147 ஓட்டங்களையும், அசாம் 127 ஓட்டங்களையும், அசார் அலி 81 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரான்ட்ஹோம் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி வெறும் 90 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ராவல் 31 ஓட்டங்களையும், அணித் தலைவர் வில்லியம்சன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், லாதம் 22 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களைவிட வேறு எவரும் இரட்டை இலக்கங்களை எட்டவில்லை. பந்துவீச்சில் யாசிர் ஷா 8 இலக்குகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களத்தடுப்பில் ஈடுபடத் தகுதியற்ற நிலையில் மீண்டும் துடுப்பெடுத்தாடிய



நியூசிலாந்து அணி 312 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து இன்னிங்ஸாலும் 16 ஓட்டங்களாலும் வென்றது பாகிஸ்தான். அதிகபட்சமாக ரெய்லர் 82 ஓட்டங்களையும், நிக்கொல்ஸ் 77 ஓட்டங்களையும், லாதம் 50 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

## சிலோன் மாஸ்டர்ஸ் பூப்பந்தாட்ட முடிவு





யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கைப் பூப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திவரும் பன்னாட்டு வீர, வீராங்கனைகள் பங்குபற்றும் சிலோன் மாஸ்டர்ஸ் பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த காண்டீபன் காலிறுதியுடன் வெளியேறினார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 40 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் எஸ். காண்டீபன் இலங்கை வீரர் பிலிப் வீரசேகரவை 15:9, 15:7 என்ற நேர்செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார். காலிறுதியாட்டத்தில் இலங்கை வீரர் மஞ்சுள பெர்னான்டோவுடன் மோதினார். இதில் மஞ்சுள பெர்னான்டோ 15:9, 15:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

பெண்கள் பிரிவில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து விளையாடிய திருமதி ஹரிகரன் அரையிறுதியாட்டத்துடன் தொடரில் இருந்து வெளியேறினார்.

50 வயதுப்பிரிவு பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து விளையாடிய திருமதி ஹரிகரனை எதிர்த்து இந்திய வீராங்கனை சங்கீதா ராஜகோபால் மோதினார்.

15:07, 15:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சங்கீதா வெற்றிபெற்றார். (ம-23)



## றொனால்டோ 100 வெற்றி!

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், 100 வெற்றிகளைச் சந்தித்த வீரர் என்ற சிறப்பைப் பெற்றார் ஜுவென்டாஸ் அணிக்காக விளையாடி வருபவரான றொனால்டோ.

சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜுவென்டாஸ் வலென்சியாவை வீழ்த்தியது. இந்த வெற்றியை அடுத்தே றொனால்டோவுக்கு இத்தகைய சிறப்புக் கிடைத்தது.

கடந்த மூன்று பருவகாலங்களிலும் சம்பியன்ஸ் லீக் தொடரில் ரியல்மட்ரிட் அணி கிண்ணம் வென்றது. அந்த அணி கிண்ணம்வெல்வதற்கு றொனால்டோ முக்கிய காரணமாக இருந்தார். அதன்பின்னர் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையால் றொனால்டோ ஜுவென்டாஸுக்காக விளையாட ஒப்பந்தமாகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வலென்சியாவை வென்றது ஜுவென்டாஸ்



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது ஜுவென்டாஸ்.

ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் கிடைத்த சிறந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தத் தவறினார் றொனால்டோ. சில தடவைகள் அவர் முறையற்ற விதத்தில் வலென்சியாவின் வீரர்களால் கட்டுப்படுத்தப்பட்டார். கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 59ஆவது நிமிடத்தில் மரியோ மாண்டுவிக் ஜுவென்டாஸின் சார்பாக கோலொன்றைப் பதிவுசெய்தார். இதையடுத்து முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது ஜுவென்டாஸ். (ம)

# ஆஸியை வெல்வோம்

## இசாந் சீண்டல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கட்டாயம் கைப்பற்றுவோம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இசாந் சர்மா.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் தொடர்பில் இசாந் சர்மா மேலும் தெரிவித்ததாவது: ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் எங்களுக்கு சவால் மிகுந்ததாக இருக்கும். இந்தத் தொடர் எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு. அதை நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம். அதே நேரத்தில் ஆஸ்திரேலிய அணியை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆஸ்திரேலிய மண்ணில் அந்த அணியை வீழ்த்துவது கடினமான பணியாக இருக்கும்.

தொடரை வெல்லவேண்டும்



என்ற ஒரே நோக்கில்தான் நாங்கள் வந்துள்ளோம். தனிப்பட்ட முறையில் சாதனை புரிய நாங்கள் வரவில்லை. அணி வீரர்கள் அனைவ்ருக்கும் ஒரே இலக்கு தொடரை வெல்லவேண்டும் என்பதுதான். அதற்கான திட்டமிடலும், சாதுர்யங்களும் எங்களிடம் உள்ளன. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சும், சுழற்பந்து வீச்சும் பலமாக உள்ளது. எனவே எதிரணிக்கு நிச்சயம் சவால் அளிக்கும் வகையில் பந்துவீசுவோம் - என்றார். (ம)



# ஆஸ்திரேலியாவை வீழ்த்த இதுவே சரியான வாய்ப்பு!

## சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்கிறார் பரூக்

ஆஸ்திரேலியாவைத் தோற்கடிக்க இதுவே சரியான வாய்ப்பு. இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் பரூக்.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் சமநிலையில் முடிந்தது. அடுத்து இரண்டு அணிகளும் நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளன. இந்தத் தொடர் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பில் கிரிக்கெட் வல்லுனர்களின் கருத்துக் கணிப்புக்கள், கருத்துப் பகிர்வுகள் என்பன உச்சம் தொட்டுள்ளன. இந்த நிலையில் இந்திய "ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் வீரர் பரூக் 'ஆஸ்திரேலியாவை டெஸ்ட் தொடரில் தோற்கடிக்க இதுவே இந்தியாவுக்குச் சரியான வாய்ப்பு" என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

ஆஸ்திரேலியா வோர்ணர் மற்றும் சிமித் என்ற மிகப் பெரிய வீரர்களை இழந்திருக்கிறது. மிகப்பெரிய இரு வீரர்களை விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இழக்கும்போது, அந்த அணி மிகப்பெரிய அளவில் பலவீனமாகத்தான் இருக்கும். ஆஸ்திரேலியாவை வீழ்த்த இதைவிட மிகச்சிறந்த வாய்ப்பு கிடைக்காது. இரு வீரர்கள் இல்லாத தற்போதைய ஆஸ்திரேலியா ஒரு சராசரியான அணிதான். இந்த வாய்ப்பை நாம் கட்டாயம் பறித்துக் கொள்ள வேண்டும். இந்திய அணி மிகச் சிறந்த தலைவரைப் பெற்றிருக்கிறது. சிறந்த சகலதுறை வீரர்களைப் பெற்றுள்ளோம். அதேபோல் சிறந்த வேகப்பந்து, சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இதை சாதகமாக்கி ஆஸ்திரேலியாவை ஆஸ்திரேலியா மண்ணில் வீழ்த்த வேண்டும்" என்றார். (ம)

# நீக்கப்பட்டமைக்கு பவாரே காரணம்!

## மிதாலி குற்றச்சாட்டு

ரி20 உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் நான் அணியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு தலைமைப் பயிற்சியாளர் பவாரே காரணம் என்று தெரிவித்தார் மிதாலி ராஜ்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார் மிதாலி. அதிலேயே அவர் பயிற்சியாளர் மீது பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எனது 20 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையில் இப்படியொரு மனவேதனையையும், அவமதிப்புகளையும் இதற்கு முன்பு சந்தித்ததில்லை. தேசத்திற்காக நான் ஆற்றும் சேவையையும், எனது புகழ் மற்றும் நம்பிக்கையையும் அதிகாரத்தில் உள்ள சிலர் சீர்குலைக்க முயற்சிக்கிறார்களோ? என்று நினைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன்.

அரையிறுதி ஆட்டத்தில் என்னை நீக்க பயிற்சியாளர் எடுத்த முடிவுக்கு ஆதரவு தந்ததைத் தவிர்த்து, இந்திய ரி20 அணியின் தலைவரார் ஹர்மன் பிரீத்சிங் மீது எனக்கு எந்த மனக்கசப்பும் கிடையாது. இந்த உலகக்கிண்ணத்தை இந்தியாவுக்காக வெல்ல வேண்டும் என்று விரும்பினேன். அந்த பொன்னான வாய்ப்பை கோட்டைவிட்டதுதான் வேதனையிலும் வேதனை. எங்களுக்குள் எந்த பிரச்சினைகள் எழுந்தாலும் அதை நானும், ஹர்மன்பிரீத்கவுரும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும்.

எல்லா சர்ச்சைகளுக்கும் தலைமைப் பயிற்சியாளர் ரமேஷ் பவார்தான் காரணம். மேற்கிந்தியத் தீவுகளின் மண்ணில் காலடி எடுத்து வைத்ததுமே பிரச்சினைகளும் உருவெடுத்து விட்டன. அவரது நடத்தைகள் எனக்கு எதிராகவே அமைந்தன. என் மீது பாகுபாடு காட்ட ஆரம்பித்தார்.

உதாரணமாக வலைப்பயிற்சிக்கு அவர் வரும்போது நான் பேச முயற்சித்தால், உடனே அவர் அலைபேசியைப் பார்ப்பதுபோல் அங்கிருந்து சென்று விடுவார். நான் அருகில் உட்கார்ந்து



இருந்தாலும் என்னை உதாசீனப்படுத்தும் வகையில், மற்றவர்களின் பயிற்சியை மட்டும் கவனிப்பது போல் செயல்படுவார். இத்தகைய அவமதிப்புகளால் மனம் காயப்பட்டது. ஆனாலும் நிதானத்தை இழக்கவில்லை. இது போன்ற பிரச்சினைகளால் அணியின் முன்னேற்றத்துக்கு பாதிப்பு வந்து விடக்கூடாது என்று கருதி அணியின் மேலாளரிடம் எனது வேதனைகளைக் கொட்டித் தீர்த்தேன். மேலாளர், அணி வீராங்கனைகளின் கூட்டதிதின் போது இதுபற்றிப் பேசினார். அப்போது ரமேஷ் பவார் சில விஷயங்களில் தவறு செய்ததை ஒப்புக் கொண்டார். ஆனால் அதற்குப் பிறகு அவரது நடவடிக்கை மேலும் மோசமானது. என்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவரிடம் ஏதாவது யோசனை கேட்க முயற்சித்தால் உடனே வேறு பக்கம் திரும்பி தொடர்ந்து என்னை வெறுப்பேற்றும்படி நடந்து கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஆஸி. அணிகளிலேயே தற்போதை அணி பலவீனமானது

## முன்னாள் இந்திய வீரர் லக்ஸ்மன் வெளிப்படைப் பேச்சு

"என் வாழ்க்கையில் பார்த்த ஆஸ்திரேலிய அணிகளிலேயே தற்போதைய அணிதான் மிகவும் பலவீனமானது. ஆதலால் இந்திய அணியின் வெற்றி ஏறக்குறைய உறுதி" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் லக்ஸ்மன்.

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே லக்ஸ்மன் இவ்வாறு தெரிவித்தார்.

"என்னைப் பொறுத்தவரை ஆஸ்திரேலியத் தொடரை இந்திய அணி 3 : 1 என்ற கணக்கில் கைப்பற்றும் என்று தீவிரமாக நம்புகிறேன். ஆஸ்திரேலியாவுக்கான எந்தச் சூழ



லும் அவர்களுக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஆஸ்திரேலிய அணியில் சிமித், வோர்ணர் ஆகியோர் இல்லாததால் இந்திய அணிக்கு மிகச்சிறந்த வாய்ப்புகளும் இருக்கின்றன. நான் ஆஸ்திரேலியாவில் கடந்த 1999ஆம் ஆண்டில் இருந்து விளையாடியுள்ளேன். இதுவரை இருந்த ஆஸ்திரேலிய அணி மிகப்பலமானதாக இருந்தது. ஒப்பீட்டளவில் தற்போதுள்ள அணிதான் பலவீனமானது" என்று லக்ஸ்மன் மேலும் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சிக்கிய சிமித், வோர்ணர் இருவருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஓர் ஆண்டுதடை விதித்துள்ளதால் அவர்கள் இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



*பங்களாதேஷ் – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்ததால் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெ்ற வேண்டும் என்ற நெருக்கடி தீவுகளுக்கு உள்ளது. இதற்கேற்ப அந்த அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. (ம)*

# ஆஸி. என்றால் அத்துமீற வேண்டும் லாங்கரின் திட்டத்தால் பயனில்லை!

## கிளார்க் சாட்டை



"ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்ரின் லாங்கரால் அணிக்குள் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் மற்றும் ஒழுக்கக் கோவைகளால் பயனில்லை. இவற்றால் வெற்றியைப் பெறுவதென்பது சாத்தியமில்லை" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வியில் இருந்து தப்பிப்பதற்காக பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உப தலைவர் லீமன், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குறொப்ட் ஆகியோர் தடை பெற்றனர். இந்த விவகாரத்துக்கு தானும் பொறுப்பேற்று பதவி விலகினார் லீமன். இதையடுத்து ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளராக லாங்கர் நிய மிக்கப்பட்டார். அவர் ஆஸ்திரேலிய அணிக்குள் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்தார். குறிப்பாக ஆஸ்திரேலிய வீரர்கள் வார்த்தை மோதல்களிலும், சீண்டல்களிலும் ஈடுபடக் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தார். இதற்கு ஆஸ்திரேலிய வீரர்கள் பலரும் வெளிப்படையான எதிர்ப்பைப் பதிவுசெய்தனர். இந்த நிலையில் தனது பங்குக்கு லாங்கரை ஒரு பிடி பிடித்துள்ளார் கிளார்க்.

இந்த விடயம் தொடர்பில் ஆஸ்திரேலிய ஊடகத்துக்கு கிளார்க் மேலும் தெரிவித்ததாவது:

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் தங்களைப் பிறர் விரும்புவார்களா இல்லையா என்ற கவலையை விட்டுவிட வேண் டும். மாறாக எமது அணியை நாம் காப்பாற்ற வேண்டும் என்பது பற்றிய கவலையே உண்மையான கவலை. உங்களுக்குப் பிடித்திரு க்கிறதோ, இல்லையோ கடினமான முறையில் விளையாடுவதுதான் ஆஸ்திரேலியப் பாணி. அதுதான் எமது குருதியில் கலந்துள்ளது. ஆஸ்திரேலியப் பாணியிலிருந்து வெளியேறினால் உலகில் மற்ற அணிகளுக்கு எம்மைப் பிடிக்கும், அடுத்தவர்களுக்கு பிடித்தமான அணியாக இருப்போம், ஆனால் ஒரு வெற்றியையும் பெறமாட்டோம் -"என்றார். (ம)

**Wanted**

Wanted full time female English teachers

077 703 3039/ 077 464 9297

**விற்பனைக்கு**

TVS - YV - xxxx வெள்ளை முச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 748 5295

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

மலேசியாவில் 4பேர் கொண்ட குடும்பத்திற்கு வேலை புரிவதற்கு நன்னடத்தையும், ஆரோக்கியமும் உள்ள பெண் தேவை.

உடனடி பயணம்.

077 703 3039/076 138 0212

**பெயர்மாற்றம்**

பொதுநூலக வீதி, கைதடி தெற்கு, கைதடியில் வதியும் சூரியகுமாரன் கோகுலரமணன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சூரியகுமாரன் ரமணன் என மாற்றம் செய்வதுடன் அனைத்து ஆவணங்களிலும் இப்பெயரையே ஒப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**சூரியகுமாரன் ரமணன்.**

## எதிரணியை ஏமாற்றி வெற்றிபெறுவது தோல்வியடைவதற்கு சமமானதொன்று

கிளார்க்குக்கு ஹடிச் பதிலடி

ஆஸ்திரேலிய அணியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுக்காற்றுக் கோவைகளை கிளார்க் கடுமையாக விமர்சித்துள்ள நிலையில், "எதிரணிகளை ஏமாற்றி வெற்றிபெறுவது தோல்விடைவதற்குச் சமமான தொன்று" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஹடிச்.

"கிளார்க் இவ்வாறு கூறுவதன் மூலம் அவர் (கிளார்க்) தவறிழைக்கிறார். இந்த ஒட்டுமொத்த விவகாரத்திலும் மறக்கப்பட்டது என்னவெனில் நாம் வெளிப்படையாக ஏமாற்றினோம் என்பதே. ஏமாற்றும்போது கையும் களவுமாக நாம் அகப்பட்டுக் கொண்டோம். ஆகவே இந்தத் தவறை, ஏமாற்று வேலைகளைத் திருத்தி கொண்டு ஆஸ்திரேலிய மக்கள், உலக ரசிகர்களின் ஆஸ்திரேலியா மீதான நல்லெண்ணத்தை மீட்டெடுக்க வேண்டுமே தவிர மீண்டும் மீண்டும் ஆக்ரோஷம், குருதி, ஆஸ்திரேலிய பாணி என்றெல்லாம் பேசுவது சரியாகாது. தொடர்ந்து பல ஆண்டுகள் நாம் எம்மை மற்றவர்களுக்குப் பிடிக்காத அணியாகவே நடந்து கொண்டோம். இதன் உச்சகட்டமே பந்தைச் சேதப்படுத்திய விவகாரம் என்பதை நினைவில் கொண்டால் நல்லது" என்று ஹடிச் மேலும் தெரிவித்தார். (ம)

**மரண அறிவித்தல்**

**திருமதி லோகநாயகி கதிர்காமநாதன்**



சங்குவேலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகநாயகி கதிர்காமநாதன் 27.11.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்க ான சின்னப்பா - பொன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற லோகேந்திரராஜா, காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் சிறி ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தினேஸ்குமார், நித்திலா, மிதிலா ஆகியோரின் அன்புத் தாயும், குகாயினி, ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், யாதவி, நாவலன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருள்ராஜ், விஜியகலா, உதயகலா, அனந்தபாலன், அபிராமி, செந்தூரன், கேசவன், துளசி, ஷ்பேசன், சரவணன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 538 6240, 077 609 9008**

## ஆசிரியர்களுக்கு தடகளத் தொடர்

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை ஆசிரியர்களுக்கான தடகளத் தொடர் எதிர்வரும் 14, 15, 16ஆம் திகதிகளில் நுவரெலியாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் கலந்து கொள்ள விரு ம்புபவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்குள் தம்மைப் பதிவுசெய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தத்தமது வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்வி நிலையத்தின் மூத்த விஞ்ஞான பாட ஆசிரியரும் நிர்வாகச் செயற்குழுவின் ஆலோசகரும் வவுனியா தேசிய கல்விக் கல்லூரியின் விரிவுரையாளருமான **திரு. நா. சதீஸ்கரன் ஐயா** அவர்களின் பாசமிகு தந்தையார்

**கந்தர் நாகலிங்கம்**

அவர்களின் மரணச் செய்தியறிந்து மனவருத்தமடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது அகரம் கல்வி நிலையத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அகரம் கல்வி நிலையம் (மல்லாகம், கொக்குவில்)**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.